விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 08 செவ்வாய்க்கிழமை (21.04.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 123

## இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவினரால்

# மகிந்த, கோத்தபாய விசாரணைக்கு அழைப்பு

குற்றப்புலனாய்வு பிரிவினர் பசிலிடம் வாக்கு மூலம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை இலங்கை இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் முன்பாக விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடமும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகளால் வாக்குமூலம் பெற தீர்மானிக்கப்பட்டுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## பா.உ.களின் எண்ணிக்கையை 260 ஆக உயர்த்த முயற்சி!

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 260 ஆக உயர்த்தும்வகையில்புதிய தேர்தல்முறையை அறிமுகப்படுத்துவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக சுதந்திரக் கட்சி தயாரித்துள்ள முதற்கட்ட தேர்தல் முறை மாற்ற யோசனை பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் இது தொடர்பில் தொடர்ந்து ஆராயும் நோக்கில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் நால்வர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவுக்கு எதிர்க் கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி.சில்வா தலைமை தாங்குவதுடன் மகிந்த சமரசிங்க, டிலான் பெரெரா மற்றும் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் உறுப்பினர் 23ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த ஆதரவு எம்.பிகள் நாடாளுமன்றத்தில் எதிர்ப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை லஞ்சம், ஊழல் மற்றும் மோசடி விசாரணை ஆணைக் குழுவிற்கு விசாரணைக்கு அழைத்துள்ளமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, தினேஷ் குணவர்தன, பந்துல குணவர்தன ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். நாடாளுமன்றத்தில் நேற்று உரை 23ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.செயலகத்தில் மீள்குடியேற்ற கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாக உள்ள வலி.வடக்கில் இரண்டாம் கட்டமாக ஒரு சில பகுதிகள் விடுவிக்கப்பட்டு அதில் மக்கள் மீள்குடியேற்றப்படுவது தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 9.00 மணியளவில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் அடுத்தகட்ட மீள் குடியேற்றம் மற்றும் ஏற்கெனவே மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் முன்னெடுக் 23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கின் ஊழல்கள் தொடர்பில் 30-ம் திகதிவரை முறையிட வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் கடந்த ஐந்து வருடங்களில் அதிகரித்த அளவில் ஊழல்கள், முறையற்ற நியமனங் கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் இடம்பெற்றுள்ளதென சுட்டிக்காட்டியுள்ள வடக்கு மாகாண சபையின் ஊழல் விசாரணைக்குழு இவை தொடர் பிலான முறைப்பாடுகளை எதிர் வரும் 30 ஆம் திகதி வரை கடிதம் மூலம் முறையிட முடியும் எனவும் தெரிவித்துள்ளது.

கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண பேரவைச்செயலகத்தில் நேற்று பிற்பகல் இரண்டு மணியளவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ஊழல் விசாரணைக்குழுவின் தலைவரும் வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவருமான அன்டனி ஜெகநாதன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 01.01.2010 தொடக்கம் 15.03.2015 வரையிலான காலப் பகுதிக்குள் இடம்பெற்ற ஊழல்கள், முறையற்ற 23ஆம் பக்கம் பார்க்க....

## மண்சரிவு அபாயம்

(கொழும்பு)

நாட்டின் ஆறு மாவட்டங்களில் மண்சரிவு ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 24 மணித்தியால காலப்பகுதியில் நாட்டின் பல பகுதிகளில் கடுமையான மழை பெய்யக் கூடுமென 24ஆம் பக்கம் பார்க்க....

# இறுதிக் கட்ட யுத்தம் முடியும் வரையில் இந்தியாவுடன் நெருங்கி இருந்தோம்!

## நாட்டை பாதுகாக்க அனைத்தையும் செய்தோம் – கோத்தா

(கொழும்பு)

பாதுகாப்பு செயலாளராக பதவி வகித்த போது. தான் மேறகொண்ட அனைத்து நடவடிக்கைகளும் நாட்டின் நன்மையை கருத்திற்கொண்டே செயததாக முன்னாள் பாதுகாபபு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆங்கில வார இதழொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கட்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தில் எனக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்கள் அனைத்தையும் நான் சரிவர செய்து காட்டினேன், மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகவிருந்த முற்பகுதியில் நாட்டில் பயங்கரவாதத்தை ஒழிப்பதே எனது முக்கிய பணியாக காணப்பட்டது. அதை நான் சரியாக செய்தேன்.

இரண்டாவது பதவி காலத்தில் நகர்ப்புற வளர்ச்சிக்கு எனக்கு கூடுதலான பொறுப்பு வழங்கப்பட்டது. அதையும் நான் சரிவர செய்தேன் என என்னால் தெளிவாக கூற முடியும்.

யுத்தத்தின் பின்னர் நாட்டில் அமைதியை நிலைநாட்ட என்னால் முடிந்தது எனவும், நாட்டில் மீண்டும பயங்கரவாதம் தலைதூக்குவதற்கு அல்லது ஆரம் 23ஆம் பக்கம் பார்க்க....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரியசந்தர்ப்பம் தவறவிடாதீகள். விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண் பெண் தேவை. சம்பளம் 18000/=-35000/= வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும். (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள்.

**தொடர்புகளுக்கு:-0766398366**

(132)

## தேவை

துறைமுகம் விமானநிலையத்திற்கு மென்ரக கனரக சாரதிகள், கண்டேனர் சாரதிகள், சாரதி உதவியாளர்கள் நாடு முழுவதிலும் வேலைக்கு அனைத்து பிரதேசங்களுக்கும் தேவை. உயர்ந்த சம்பளம் (OT உட்பட விசேட சலுகைகள்)

(120)

**தொடர்புகளுக்கு:-0715696000**

எமது வைத்தியத்தில் மீண்டும் வழமை போல் **எலும்பு முறிவு, நெரிவு** (ORTHOPAEDIC) கிளினிக் நடைபெறுகின்றது.

**0778730129**

(138)

## விரிவுரைக் கதிரைகள் விற்பனைக்கு

மரத்தாலான விரிவுரை மண்டப கதிரைகள் விற்பனைக்குண்டு

**தொடர்பு:-0776038596**

(137)


# எம்.பி பதவியை கோரும் சரத்

(கொழும்பு)

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இழந்த நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அவருக்கு மீண்டும் வழங்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொன்சேகாவின் பிரத்தியேக செயலாளர் சேனக்க ஹரிபிரிய டி சில்வா, உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

பொன்சேகாவுக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அவருக்கு வழங்க மறுப்பதால் அவரது மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் அதற்கு இழப்பீடாக 10 கோடி ரூபாய் வழங்க உத்தரவிடுமாறும் அவர் தனது மனுவில் கேட்டுள்ளார்.

பொன்சேகாவின் பிரத்தியேக செயலாளரும் அவருக்கு மிகவும் நெருக்கமான நபருமான சேனக்க சில்வா, தனது மனுவில், தேர்தல் ஆணையாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட மற்றும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஆகியோரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## சாவகச்சேரி பிரதேச சபை
## 01.05.2015 முதல் 31.12.2015 வரை சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு விடுவதற்கான
## பகிரங்க ஏல அறிவித்தல்-2015

ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் 28.04.2015 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் சாவகச்சேரி பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் பிணைட் பணத்தினைச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளவும்.

இடம்:சாவகச்சேரி பிரதேச சபை தலைமைப்பணிமனை.

காலம்:28.04.2015 ஆம் திகதி மதியம் 12.00 மணி

**ஏல அறிவித்தல் அட்டவணை**

| இல | குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வி தொகை Vat,NBT தவிர | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) |
|---|---|---|---|
| 01 | கொடிகாமம் கருவாட்டுக்கடை | 11,340.00 | 500.00 |
| 02 | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 666,000.00 | 6700.00 |
| 03 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 733,340.00 | 7400.00 |
| 04 | கொடிகாமம் ஆட்டிறைச்சிக்கடை | 12670.00 | 500.00 |
| 05 | கைதடிப் பொதுச்சந்தை | 8,000.00 | 500.00 |
| 06 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 126,670.00 | 1300.00 |
| 07 | மிருசுவில் பொதுச்சந்தை | 1870.00 | 500.00 |
| 08 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 186,670.00 | 1900.00 |
| 09 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 2100.00 | 500.00 |
| 10 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 84,000.00 | 900.00 |
| 11 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 30060.00 | 500.00 |

**நிபந்தனைகள்:**

1. இறைச்சிக் கடைகளுக்கு சபையால் விதிக்கப்படும் மாத வாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
2. கேள்வித் தொகை, படிவக் கட்டணம், மாத வாடகை என்பவற்றுடன் Vat 11%, NBT 2% சேர்த்து செலுத்துதல் வேண்டும்
3. சந்தை வளவில் உள்ள கடைகளுக்கு தெரிவு செய்யப்படும் குத்தகைகாரர் எவ்வித வரி அறவீடுகளையும் மேற்கொள்ள முடியாது.
4. கால்நடைகள் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சிக்கு கொண்டு வரப்படல் வேண்டும் அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.
5. சந்தையிலிருந்து 1Km சுற்றாடலில் மீன் மரக்கறி விற்றல் தடை செய்யப்பட்டுள்ளது.
6. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் 01.05.2015 இற்குள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை 1/4 பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
7. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு ஒரு பிரதியினை "தவிசாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்" என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
8. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
9. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**திரு.சிற்றம்பலம் துரைராஜா,**
தவிசாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.
21.04.2014 .

(சி-757)

## யாழ்.மாநகர சபை
## ஏல விற்பனை தொடர்பான அறிவித்தல்

துரையப்பா விளையாட்டரங்கு திருத்த வேலையின் போது கழிக்கப்பட்ட தகரங்கள், மரங்கள், சீற் வகைகள், இரும்புகள் என்பன 29.04.2015ஆம் திகதி புதன்கிழமை 10.30 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் ஏல விற்பனை செய்யப்படவுள்ளது. ஏலப் பொருட்களை 20.04.2015 தொடக்கம் 28.04.2015 வரை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். ஏலத்தில் சித்திபெற்றவர் 29.04.2015 பி.ப 2.00 மணிக்குள் பணம் முழுவதையும் செலுத்தி உடனடியாக பொருட்களை அப்புறப்படுத்த வேண்டும்.

மேலும் ஒரு சில தங்க நகைகள் 30.04.2015ஆம் திகதி வியாழக்கிழமை 10.30 மணிக்கு யாழ்.மாநகர சபையில் ஏல விற்பனை செய்யப்படவுள்ளது என்பதையும் அறியத் தருகின்றேன்

**ஆணையாளர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(சி-756)

## ஓராண்டு நினைவலைகள்



தோற்றம் 23 - 03 - 1956

மறைவு 01 - 05 - 2014

## அமரர் திருமதி
## மனோன்மணிதேவி சிவம்
## (மணியக்கா)

காலமெல்லாம் அன்பாலும்
பணியாலும் அரவணைத்து
மகிழ்வான வாழ்வு தந்து - நாம்
வளமோடு வாழ வகை செய்த
எங்கள் குலவிளக்கே உமைப் பிரிந்து
ஓராண்டு கழிந்தாலும் உங்கள் மதிமுகத்தை
மறக்க முடியவில்லையே

(133)

**துரை வீதி,**
**இணுவில் தெற்கு,**
**இணுவில்**

**உங்கள் பிரிவால் வாடும்**
**கணவன், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

## சேவை நலன் பாராட்டு



## "கனகவாரிதி" திரு.விஜயரத்தினம் கனகராசா
(B.A, Dip in Ed, M.phil (Ed)

கண்ணியம், கடமை , நேர்மை கொண்ட நற்சேவையாளன் மண்ணவர் போற்ற வாழும் மாண்புறு வதுரி மைந்தன்
நல்லதோர் ஆசானாக எம்முடன் இணைந்து சேவை இன்புற ஆற்றி இன்று இளைப்பாறும் கனகராசா
வர்ணனைக் கலைஞராக சொற்பொழிவாளராக பற்பல வடிவங்களில் பயர்ந்தீர் நின் சேவை தன்னை
ஆர் பத்து அகவை கண்டு சேவையில் ஓய்வு கொண்டீர் பார் போற்ற என்றும் நீங்கள் பல்லாண்டு சிறந்து வாழி!

தனது அறுபதாவது அகவையில் இன்று ஓய்வு காணும் எமது வித்தியாலய ஆசான் "கனகவாரிதி" திரு.வி:கனகராசா அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் அவர் தனது ஓய்வுக் காலத்தில் தனது குடும்பத்தினருடன் சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**ஆசிரிய நலன்புரிச் சங்கம்**
**யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம், உரும்பிராய்.**

(சி-744)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு எதிராக மாணவர்கள் பேராதனையில் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழக வைபவத்துக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பங்குபற்றக்கூடாது என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினால், பேராதனை பல்கலைக்கழக வைத்திய பீட புதிய கட்டடத்தொகுதியை திறப்பதற்கான வைபவத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொள்ளவில்லை. பல்கலைக்கழக வளாகத்துக்குள் எந்தவொரு அரசியல்வாதியையும் நுழைவதற்கு அனுமதியளியோம் என்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட் டக்காரர்கள் கோஷமிட்டனர். உபவேந்தர் அல்லது பேராசிரியர்கள் இந்த புதிய கட்டடத்தை திறக்க வேண்டும் என்றும் அரசியல்வாதிகள் வரக்கூடாது என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பேராதனை-கலஹா சந்தியை மறித்து எதிர்ப்பு நேற்றுக் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (இ-5)















## இராசி பலன்

21.04.2015
(சித்திரை 08, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
திருதியை முன்னிரவு 8.29 மணிவரை
கார்த்திகை பிற்பகல் 2.51 மணிவரை
இராகுகாலம் 3.01-4.31 மணிவரை
சுபநேரம் 10.31-12.01 மணிவரை
சித்தாமிர்தம், அட்ஷய திருதியை

வளவன்

**மேடம்** உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும், வாக்கு மேன்மையுண்டு, புதிய பொருட்களை வாங்க நினைப்பீர்கள்.

**இடபம்** பெருமைகள் வந்து சேர பெருமானை வழிபட வேண்டிய நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங் கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனமெடுப்பீர்கள்.

**மிதுனம்** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த செயலை முடிக்க ஒருமுறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள்

**கடகம்** மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள், வருமானம் அதிகரிக்கும் நாள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**சிம்மம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**கன்னி** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், ஆன்றோர் சந்திப்புண்டு.

**துலாம்** மறதியால் ஒருசில பணிகளை செய்யாமல் விட்டுவிடுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது.

**விருச்சிகம்** வருங்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர், செய் தொழில் மேன்மையுண்டு.

**தனுசு** கடன்சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் வெற்றிதரும் புகழ்மிக்கவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம். அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும்.

**மகரம்** போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுபசெய்திகள் வந்து சேரும் நாள், புண்ணிய காரி யங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள்

**கும்பம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி நக வீர்கள், நீங்கள் தேடிச் செல் நினைத்த நபர் உங்கள் இல்ல தேடி வரலாம், சுப தகவல்க வந்து சேரலாம், அதிகாரிக அனுகூலமாக நடந்து கொள்வர்

**மீனம்** பகை விலகி பாசம் கூடும் நாள் முத்தான வாய்ப்புக்கள் இல்ல வந்து சேரலாம், வழிபாட்டா வளர்ச்சியைக் கூட்டிக் கொ வீர்கள், தொழிலில் எதிர்பார்த் திருப்பங்கள் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 183**

## பயத்தை எதிர்கொள்ளல்

...ஆம் நீங்கள் பயத்தாக்கு தலைப் பற்றிச் சொல்கிறீர்கள்.

பயத் தாக்குதல்கள் குறைவான காலமே இருக்கும் கூரிய பயத்துணுக்குகள்.

அவை வெறுமனே சில நொடிகளில் வந்து விட்டுப் போய்விடும். உதாரணத்திற்கு நீங்கள் தெருவில் நடந்துபோய்க் கொண்டிருக்கிறீர்கள்.

திடீரென்று ஒரு கயிற்றைப் பார்த்து பாம்பென்று எண்ணிவிடுகிறீர்கள். பயம் திடீரென்று எழுந்து சில விநாடிகளில் அடங்கிவிடுவதை உணர்கிறீர்கள். ஏனெனில், அதற்குள் அது கயிறுதான் என்பதை உணர்ந்து விடுகிறீர்கள். இதுதான் பயத் தாக்குதல்.

பாருங்கள்... அது இப்படி இருக்கிறது... எப்பொழுதும் நமக்குள் ஒரு பய ஓட்டம் இருந்து கொண்டிருக்கிறது. சில சமயங்களில் அது உச்சத்திற்குச் செல்கிறது. அவ்வளவுதான்.



இந்த பயத்தாக்குதல்கள் மிகக் குறைவான நேரமே இருந்தாலும் மிகுந்த தீவிரத்துடன் நிகழ்கிறது. பயத்தாக்குதல்கள் நம் உடலில் நோய் ஏற்படாமல் தடுக்கும் பாதுகாப்பு அமைப்பை பலவீனப்படுத்தி விடுகிறது. இவை மனச்சோர்வைத் தூண்டும் இரசாயனங்களை வெளியிடுகிறது. மேலும் முதுமையடையும் செயற்பாடுகளை வேகப்படுத்தி விடுகிறது. நமது முடி நரைப்பதற்கும் மாரடைப்பு ஏற்படுவதற்கும் கூட காரணமாகிறது.

சராசரியாக ஒவ்வொருவரும் விழிப்புடனோ அல்லது விழிப்பின்றியோ ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 6 பயத் தாக்குதல்களுக்கு உள்ளாகின்றனர். நடு இரவில் தொலைபேசி மணி அடிப்பது, காரில் சென்று கொண்டிருக்கும் பொழுது இன்னொரு வாகன ஒட்டி திடீரென்று பாதையில் இருந்து விலகி உங்கள் பக்கமாக வருவது, நீங்கள் ஒரு திகில் படத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது ஒருவர் உங்கள் தோளில் தட்டுவது முதலிய இதுபோன்ற பலவும் விழிப்புடனான பயத்தாக்குதல்களாகும்.

நீங்கள் உங்கள் கனவுகளிலும் பயத்தாக்குதலுக்கு உள்ளாகிறீர்கள். ஆனால் கண் விழிக்கும் பொழுது மறந்துவிடுகிறீர்கள். பயத்தாக்குதல் ஒரு ரோஜாச் செடியின் வேர்களை அசைப்பதுபோன்றது. அது உடலமைப்பிற்கு மிகவும் அபாயகரமானது.

நீங்கள் சொன்னது போல் பயத் தாக்குதல் நிகழும் பொழுது விழிப்புணர்வுக்குள் செல்வதற்கு நேரமே இருக்காது. கடவுளின் பெயரைச் சொல்வதற்குகூட நேரமிருக்காது. ஏனெனில் அது ஒரு பயத்துணுக்கு மட்டுமே. ஆனால் பயத்தாக்குதலுக்குப் பிறகு அதை நீங்கள் ஆராய்ந்து உங்கள் பயத்தைப் பற்றிப் புரிந்து கொள்ளுதலை ஆழமாகப் பதிவு செய்து கொள்ளலாம். இது பயத்தை பற்றிய உங்களது மொத்தக் கருத்தையும் கரைத்து விடுவதற்கு உதவும்.

நம்மிடம் இருக்கும் வழக்கமான பயத்தில் தீவிரத்தையும் ஆழத்தையும் குறைப்பதன் மூலம் பயத் தாக்குதல்களின் தீவிரத்தையும் எண்ணிக்கையையும் வெகுவாகக் குறைக்கலாம். இந்த வழக்கமான பயத்திலிருந்துதான் பயத்தாக்குதல்கள் எழுகின்றன. ஆழமான புரிந்து கொள்ளுதலாலும் தெளிவாலும் வழக்கமான பயத்தைக் குறைக்க முடியுமானால் பயத்தாக்குதல்களும் குறைந்துவிடும்.

*(தொடரும்)*

**பரமஹம்ஸ சுவாமி**



# அதிசய உலகம்

### பல்லாண்டுகளாக தீராத மர்மமாக ஓடும் ரத்த அருவி...

பனிப்பாறைகளால் முற்றிலும் சூழப்பட்ட பூமியின் தென் துருவத்தில் அமைந்துள்ள அண்டார்ட்டிகாவில் ரத்த அருவி ஒன்று பல்லாண்டுகளாக ஓடிக் கொண்டிருக்கிறது.

1911 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவை சேர்ந்த Griffith Taylor என்ற புவியியலாளர் பூமியின் தென் பகுதியில் அமைந்துள்ள அண்டார்ட்டிகாவில் ஒரு வினோத நிகழ்வினை கண்டு ஆச்சர்யமடைந்துள்ளார். அங்கு ஒரு குறிப்பிட்ட பனிப்பாறையிலிருந்து ரத்த சிவப்பு நிறத்தில் நீர் அருவியாக வெளியேறி கொண்டிருந்தது. தற்போது Taylor பனிப்பாறை என்றழைக்கப்படும் அந்த மிக உயர்ந்த பனிபாறையிலிருந்து ரத்தம் போன்ற நீர் பல ஆண்டுகளாக அருவியாக ஓடியதால் பலரும் அதன் மர்மத்தை அறிய முயன்றனர்.

பனிபாறைகளால் முழுதும் நிரம்பிய அண்டார்ட்டிகா கண்டத்தில், குறிப்பிட்ட ஒரு பனிப்பாறையிலிருந்து மட்டும் இவ்வாறு ரத்த நிறத்தில் நீர் அருவியாக பாய்வதை அறிந்த மக்கள் அச்சமும் ஆச்சர்யமும் அடைந்துள்ளனர். இதையடுத்து புவியியலாளர்கள் பலரும் இந்த ரத்த நிறம் பற்றிய மர்மத்தினை அறிந்துகொள்ள அங்கு படையெடுக்க தொடங்கியுள்ளனர். அங்கு ஆராய்ச்சியை தொடங்கிய அவர்கள், முதலில் பாசிகள்தான் இந்த நிறமாற்றத்திற்கு காரணம் என்று கருதியுள்ளனர். ஆனால் பல்லாண்டுகளாக நடந்த ஆராய்ச்சிகளின் முடிவாகவே அதன் உண்மையான காரணம் தெரியவந்துள்ளது.

அதாவது அந்த பனிப்பாறையின் அடியில் சுமார் 2 மில்லியன் ஆண்டுகளாக ஒரு ஓடை ஓடிகொண்டிருப்பதாகவும் அங்கு வாழ்ந்து வந்த நுண்ணுயிரிகளில் இருந்து வெளிவந்த சல்ஃபர் மற்றும் இரும்பு ஆகியவற்றால் அந்த சிவப்பு நிறம் தோன்றியது அம்பல மாகியுள்ளது.



மேலும், அந்த ஓடையின் நீரில் ஆக்ஸிஜனின் அளவு வெகுவாக இல்லை என்றும், நுண்ணுயிரிகள் சல்பேட்டை உணவாக கொண்டே சுவாசித்து வாழ்ந்ததும் தெரியவந்து ள்ளது.

மேலும், முற்றிலும் உறைந்த பனிப்பாறைக்கு அடியில் பல்லாண்டுகளாக ஓடிக்கொண்டிருக்கும் அந்த ஓடையில் வெளிச்சம் எதுவும் இன்றி அந்த வினோத நுண்ணுயிரிகள் வாழ்ந்து வந்ததும் ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது.

அண்டார்டிகாவில் உள்ள எண்ணற்ற பனிப்பாறைகளில் ஏற்படாத இந்த வினோத சம்பவம் குறிப்பிட்ட Taylor பனிப்பாறையில் மட்டுமே நடப்பது ஏன் என்பதற்கான கேள்விக்கு விடை கிடைக்கவில்லை.



# சமைப்போம் சுவைப்போம்

## தேங்காய் கேக்



**தே.பொருட்கள்:**

மைதா மா- 2 கப்

தேங்காய் துருவல் - 11/2 கப்

சர்க்கரை - 11/2 கப்

பேக்கிங் பவுடர் - 1 தேக்கரண்டி

பட்டர் - 1 கப்

பால் - 1 கப்

முட்டை - 3

உப்பு - 1 சிட்டிகை

வென்னிலா எஸன்ஸ் - 1 தேக்

ரவை - 1/2கிலோ

ஏலக்காய் - 5

**செய்முறை**

துருவிய தேங்காயையும் நன்றாக வதக்கவும். மா, உப்பு, சர்க்கரை, பேக்கிங் பவுடர் அனைத்தையும் ஒரு பாத்திரத்தில் ஒன்றாக கலந்து வைக்கவும். இதில் வெண்ணை சேர்த்து கலந்து வைக்கவும். முட்டையை அடித்து, அதில் பால், வென்னிலா எஸன்ஸ் கலந்து கொள்ளவும்.

இதை மாக் கலவையில் சேர்த்து கலந்து தேங்காய் துருவலும் சேர்க்கவும். பட்டர் தடவிய பேக்கிங் பாத்திரத்தில் ஊற்றி 160 டி முற்சூடு செய்த அவனில் 30 - 40 நிமிடம் வேக வைத்து எடுக்கவும். கேக்கின் மேலே தேங்காய் துருவலைத் தூவி பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவியல் அலுவலகம் விரைவில் இலங்கையில்

## ஐ.நா.நடவடிக்கை

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் அமைப்பின் போதைப்பொருள் மற்றும் குற்றவியல் தடுப்பு அலுவலகம் ஒன்று விரைவில் இலங்கையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.**

ஐ.நா.போதைப்பொருள் மற்றும் குற்றவியல் தடுப்பு காரியாலய பிரதானி யூரி பெடட்டோவுக்கும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ வுக்கும் இடையிலான சந்திப்பின் போதே இத்தீர்மானம் எட்டப்பட்டது.

இந்து சமுத்திரத்தை கேந்திரமாகக் கொண்டு உலக நாடுகளுக்கு போதைப்பொருள் விநியோகிப்பதை தடுப்பதே இதன் பிரதான நோக்கமாகும்.

ஐ.நா. போதைப்பொருள் தடுப்பு மற்றும் குற்றத்தடுப்பு சபையின் 13ஆவது உயர் மட்ட குழுக்கூட்டம் கடந்த ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை கட்டாரின் டோஹா நகரில் நடைபெற்ற போதே இத்தீர்மானம் எட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வலி.வடக்கு வீதிபுனரமைப்புக்கு 12 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் கீழுள்ள வீதிகளில் புனரமைப்புக்காக சபையில் இந்தாண்டு வரவு செலவுத் திட்டத்தில் 12.2 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வலிகாமம் வடக்குப் பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது பிரதேச சபை வருமானம் குறைந்த பிரதேச சபையாக இருக்கின்றது. இருந்தும் வீதி புனரமைப்புக்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். அளவெட்டி மத்தியில் பள்ளியாவத்தை வீதி, அளவெட்டி கிழக்கிலே சீரட்டிபாய் வீதி, தம்மலை காட்டுப் புலவீதி, அளவெட்டி மேற்கு மல்லாகம் காளி கோயில் குறுக்கு வீதி, மல்லாகம் அளவெட்டி முதலாம் குறுக்கு வீதி, தெல்லிப்பழைசைவப்பிரகாசம் வீதி, இளவாலை கிறேசல் வீதி போன்றவை புனரமைக்கப்படவுள்ளன. 45 கிராமஅலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய எமது கிராம அலுவலர் பிரிவில் அரைவாசி கிராம அலுவலர் பிரிவுகள் உயர்பாதுகாப்பு வலயமாக இருக்கின்றன. விடுவிக்கப்பட்டு வரும் இடங்களுக்கான தேவைகள் அதிகமாகவுள்ளது. கிணற்றில் எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான குடிநீர் விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றோம். இதுவரையில் 6 இலட்சம் ரூபாய்க்கு அதிகமாக செலவு செய்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# 19ம் திருத்தத்திற்கு ஆதரவளிக்காவிட்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வருந்த நேரிடும்

## லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

19 ஆம் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவளிக்காவிட்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வருந்த நேரிடும் என பெருந்தோட்ட அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

19 ஆம் திருத்தச் சட்டம் என்ற பூசைத் தட்டில் கை வைக்காவிட்டால் சுதந்திரக் கட்சி பன்னர் வருந்தவும் கவலைப்படவும் நேரிடும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்து செய்ய வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடந்த 40 ஆண்டுகளாக போராடி வந்தது.

தற்போது 19 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த ஆதரவு அளிக்கப்படாவிட்டால் சுதந்திரக் கட்சியின் கோசங்கள் வெறும் புஸ்வாணமாக மாறிவிடும்.

குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்காது தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகளுக்கு அமைய செயற்பட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க வேண்டும்.

19 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த முடியாவிட்டால் நாடாளுமன்றைக் கலைத்து அது குறித்து மக்களுக்கு அறிவிக்க நேரிடும் என லக்ஸ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)






# வீதி அபிவிருத்தி அதிகார சபையில் வேலையிழந்தோரை இணைக்கவும்

## ஜனாதிபதி உத்தரவு

வீதி அபிவிருத்தி அதிகார சபையில் வேலை வாய்ப்பை யிழந்தவர்களை மீண்டும் இணைத்துக் கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று உத்தர விட்டுள்ளாரென ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வேலைவாய்ப்பை யிழந்தவர்கள் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடியதையடுத்து ஜனாதிபதி இவ்வுத்தரவை பிறப்பித்துள்ளார்.

அதற்கமைய அனைத்து சேவையாளர்களையும் மீண்டும் பணியில் இணைத்து கொள்ள நடவடிக்கை எடுத்துமாறு ஜனாதிபதி உரிய அதிகாரிகளுக்கு உத்தர விட்டுள்ளார். வீதி அபிவிருத்தி அதிகார சபையில் 235 பேர் வேலைவாய்ப்பை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# உதயசிறியின் விடுதலை பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை

(கொழும்பு)

உதயசிறியின் விடுதலை பற்றி தமக்கு இதுவரை எதுவும் அறிவிக்கப்படவில்லையென சிகிரியா மலையில் தனது பெயரை எழுதிய குற்றத்திற்காக சிறைத் தண்டனை அனுபவித்து வரும் மட்டக்களப்பு சித்தாண்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி உதயசிறியின் தாய் எஸ். தவமணி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

எனது மகள் உதய சிறிக்கு ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் விரைவில் விடுதலை செய்யப்படுவார் எனவும் ஊடகங்களின் மூலம் அறிந்து கொண்டதுடன் எனது மகள் விடுதலையாகப் போகின்றார் என சில சகோதரர்களும் எனக்கு தெரிவித்தனர்.

எனினும் எப்போது எனது மகள் விடுதலையாகுவார் என்பது பற்றி இதுவரை எதுவும் எனக்கோ எனது குடும்பத்திற்கோ தெரியாது.

எனது மகளின் விடுதலைக்காக நான் காத்திருக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

### சாரதிக்கு கடூழிய சிறை

கல்கிஸை பிரதேசத்தில் பாதசாரிகள் கடவையில் வீதியை கடக்க முயன்ற வயோதிபர் மீது மோதி, அவரது மரணத்துக்கு காரணமாகவிருந்த முச்சக்கரவண்டி சாரதிக்கு ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஜராங்கனி பெரேரா நேற்று பிறப்பித்துள்ளார். அத்துடன், குறித்த சாரதியின், சாரதி அனுமதிப் பத்திரம் மூன்று வருடங்களுக்கு தடைசெய்யப்பட்டுள்ளதுடன் உயிரிழந்த நபரின் குடும்பத்துக்கு, 75ஆயிரம் ரூபாய் அபராதமாக செலுத்துமாறும் நீதபதி உத்தரவிட்டுள்ளார். கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட மாதம் 19ஆம் திகதி இந்த விபத்து இடம் பெற்றதுடன் இது தொடர்பான வழக்கு விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வந்த நிலையில் குற்றவாளிக்கு இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 19 செவ் ல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>தொ.இ: B/566 | பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 46 செவ் 8 ல்<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்: B.COM/ அரச தொழில்<br>தொ.இ: G/1014 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 40 செவ் 12 ல்<br>உயரம்: 5’8"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/573 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 12 3/4 செவ் 2 ல்<br>உயரம்: 4’8"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/1015 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை கி.பா: 16 செவ் 4 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்: O/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/575 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம் பூரம்<br>கி.பா: 46 செவ் 12 ல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: BSC, MSC<br>தொ.இ: G/1016 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 40 செவ் 8 ல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: IT Diploma/ தனியார்<br>தொ.இ: B/576 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 40 செவ் 1 ல்<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்: BSC NURSING/ அரச தொழில்<br>தொ.இ: G/1022 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய வீட்டுத் திட்டம் குறித்த

# ஊழல் குற்றச்சாட்டில் உண்மை எதுவுமில்லை

## யாழ். இந்தியத் தூதுவர் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

**இந்திய வீட்டுத் திட்டத்தில் ஊழல் நடைபெற்று வருகின்றது என்பதில் உண்மை இல்லை. அவ்வாறு ஊழல் இருப்பதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஏ.நட்ராஜ் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்டத்தில் சில கிராமங்களில் இந்திய வீட்டுத் திட்டத்தில் வீடுகள் கிடைக்காமை தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து அவரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசாங்கத்தால் இலங்கையில் 50 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்க திட்டமிட்டதில் எமக்கு பூரண திருப்தி.

அவை உரிய பயனாளிகளை போய்ச்சேர வேண்டும் என்பது எமது விருப்பமாக உள்ளது. அதை கருத்தில் கொண்டு நாம் செயற்பட்டு வருகின்றோம்.

ஒரு வீட்டை அமைத்து கொடுப்பதற்கு மக்களின் தேவைகளை உரியமுறையில் இனம்கண்டு அதிகாரிகள் பலரால் ஆராயப்பட்டு அதன் பின்னர் தான் வீடுகள் கையளிக்கப்படுகின்றன.

பலரால் மேற்கொள்ளப்படுகி ன்ற நிர்வாக நடவடிக்கையில் ஊழல் இருப்பதற்கு இடமில்லை.

வடக்கு மாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். பல உதவிகளை செய்வதற்கு ஆவலாக உள்ளோம். இலவசமாக கிடைக்கும் உதவிகள் குறித்து குறைகூறுவது எங்கும் வழமையான செயற்பாடகவே உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## தேசிய அபிவிருத்தி வங்கியின் நிகழ்ச்சித்திட்டம் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தேசிய அபிவிருத்தி வங்கியின் நான்கு நாள் நிகழ்ச்சித்திட்டம் நாளை புதன்கிழமை முதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை யாழ். குடாநாட்டில் முன்னெடுக்கப்படவுள்ளது.

முதல்நாள் வேலைத்திட்டத்தில் பொதுமக்களின் பாவனைக்கென யாழ். பொது நூலகத்திற்கு கணனி வழங்கல், தெல்லிப்பழை வைத்திய சாலைக்கு மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் வழங்கல், சிவபூமி முதியோர் இல்லத்திற்கு சூரிய சக்தியில் இயங்கும் நீர் சூடாக்கும் இயந்திரம் மற்றும் சமையல் அறை உபகரணங்கள் என்பன வழங்கப்படவுள்ளன.

இரண்டாம் நாள் வேலைத் திட்டத்தில் யாழ். வர்த்தகர்கள் மற்றும் வர்த்தக முயற்சியாளர்களுக்கான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

மூன்றாம் நாள் செயற்றிட்டத்தில் 24 , 25 ஆம் திகதிகளில் யாழ். முற்றவெளி மைதானத்தில் வாகனச் சந்தை இடம்பெறவுள்ளது.

நான்காம் நாள் தென் இந்தியாவின் விஜய் ரீவியினால் நடத்தப் படும் சுப்பர்சிங்கர் நிகழ்ச்சியில் வெற்றியீட்டிய 5 போட்டியாளர்கள் கலந்து சிறப்பிக்கும் இசை நிகழ்ச்சி மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. (இ-3)

## முற்போக்கு தமிழ்த்தேசிய கட்சியின் முதலாவது மாநாடு 25 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

முற்போக்கு தமிழ்த்தேசிய கட்சியின் முதலாவது மாநாடு எதிர்வரும் சனிக்கிழமை 25 ஆம் திகதி மு .ப 10 மணிக்கு யாழ் பத்திரிசியார் கல்லூரி வீதியில் அமைந்துள்ள லொயலாஸ் திருமண மண்டபத்தில் தலைவர் மருசிலின் அன்ரனி தலைமையில் நடைபெறவுள்ளது. இம் மாநாட்டில் விவசாய அமைச்சர் துமிந்த திஸநாயக்க பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களாக செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான வீ. ஆனந்தசங்கரி, வட மாகாணசபைஉறுப்பினர்தர்மலிங்கம் சித்தார்த்தன், பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி செயலாளர் நாயகம் திருநாவுக்கரசு ஸ்ரீதரன், ஸ்ரீ தமிழீழ விடுதலைக்கழக செயலாளர் நாயகம் பரராஜசிங்கம் உதயராசா, ஜனநா யக தேசிய முன்னணி தலை வர் ந.குமரகுருபரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (இ-3)

## பாதிப்பில்லாத தீர்வே எமது எதிர்பார்ப்பாகும்

இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினையில் இரண்டு தரப்பினருக்கும் பாதிப்பு இல்லாத வகையில் தீர்வுகாண வேண்டும் என்பதை கருத்திற்கொண்டு ஆர்வத்துடன் செயற்பட்டு வருவதாக யாழ் இந்தியத் துணைத் தூதுவர் ஏ.நட்ராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக இருப்பது இந்த மீனவர் பிரச்சினையாகும்.

இது இழுவைப் படகைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதனால் இருதரப்பினரிடையே பிரச்சினை அதிகரித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள மீனவ சங்கங்களின் தலைவர்களுடனும் மீனவர்களுடனும் சென்று கலந்துரையாடி வருகின்றேன். அவர்களின் பிரச்சினைகளை இலகுவான அறிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது.

இது தொடர்பாக எமது நாட்டு மீனவருடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகின்றோம். இங்குள்ள மீனவர்களின் பிரச்சினைகளை எமது நாட்டு அரசாங்கத்துக்கு விளக்கிக் கூறியுள்ளேன்.

விரைவில் இருதரப்பு மீனவர்களுக்கும் சாதகமான தீர்வு கிடைக்கும் என நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## விவசாய நிலத்தை சுற்றி அமைக்கப்பட்டவேலி விசமிகளால் நள்ளிரவு வேளை அகற்றப்பட்டது

(சாவகச்சேரி)

கல்வயல் கிராம்புவில் கிராமத்தின் விவசாய நிலத்தை சுற்றி அமைக்கப்பட்ட சுற்றுவேலி விசமிகளால் இரவோடு இரவாக உடைக்கப்பட்டுள்ளது.

விவசாய பயிர்களை கட்டாக் காலி கால்நடைகளிடமிருந்து பாதுகாப்பதற்காக விவசாயிகளால் அமைக்கப்பட்ட பாதுகாப்பு வேலியே விசமிகளால் உடைத்தெறியப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகமான நிலையில் விவசாயிகள் பெரும் அசௌகரியங்களை தொடர்ந்து எதிர்நோக்கி வந்தனர்.

இக்கட்டாக்காலிகளின் தொலலை தொடர்பில் கல்வயல் கமக்கார அமைப்பினரால் இப்பிரதேச கிராம சேவகர், பிரதேச சபையினரிடம் பலதடவைகள் முறையிடப்பட்டும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் இக்கிராம விவசாயிகள் குற்றஞ் சுமத்துகின்றனர்.

உரியவர்களால் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாத நிலையில் கல்வயல் கிராம்புவில் விவசாயிகளின் கூட்டு முயற்சியினால் அவர்களின் சொந்தசெலவில் கடந்த வெள்ளிக்கிழமை சீமெந்து தூண்கள் நடப்பட்டு கட்டாக்காலிகள் உடபுகாத வகையில் முட்கம்பிகளால் சுற்றி வேலி அடைக்கப்பட்டது.

சுற்றுவேலி அமைக்கப்பட்ட அன்றைய தினம் இரவே திட்டமிட்டு விசமிகளால் தூண் வேலிகள் உடைத்தெறியப்பட்டுள்ளன. (இ-29)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஜே.துசிராஜ், ஜே. துஜீவன் ஆகியோரின் ஆக்கத்தில் உருவான English For Students நூல் வெளியீடு நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவம் நாளை புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூசை, வசந்த மண்டப பூஜையை தொடர்ந்து விநாயகர் பெருமான் வீதிவலம் வருவார். (இ)



கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் கல்வியமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழில்நுட்ப ஆய்வு கூடத்திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் ஆய்வு கூடக் கணனிப்பிரிவை விருந்தினர்கள் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.




## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வடக்கு (சரசாளி) அருள்மிகு ஸ்ரீசித்திர வேலாயுதர் தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் 23 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (இ)

## அரசியல் சார்பற்ற அமைப்புக்களின் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ.மாவட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் அரசியல் சார்பற்ற சமூக மட்ட அமைப்புக்களை ஒன்றிணைக்கும் இரண்டாவது கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய காரி யாலயத்தில் நடைபெறவுள்ளது. குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் பிரச்சினைகளை இனங் ண்டு அவற்றிற்கான தீர்வுகளை நோக்கிச் செல்வதற்கான அடிப்படைத்திட்டங்களை உருவாக்குவதே இதன் முதல் நோக்கமாகும்.

இது தொடர்பான முதலாவது கூட்டம் கடந்த மாத முற்பகுதியில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடதக்கது. (இ-3)

## மஹா கும்பாபிஷேக பெருவிழா விஞ்ஞாபனம்

அராலி தெற்கு உதராண்பதி அருள்மிகு ஸ்ரீநாகராஜேஸ்வரி தேவஸ்தான ஜீர்னோத்தாரண நவகுண்டபக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக பெருவிழா விஞ்ஞாபனம் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.23 மணி முதல் 10.26 மணி வரையு ள்ள சுப முகூர்த்த வேளையில் இடம் பெறும்.

இதேவேளை நாளை மறுதினம் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை எண்ணெய்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (இ)

## தொழில்நுட்ப மாற்றுப் பயிற்சி நெறி

இயந்திர உதவியுடன் ஊதுவர்த்தி உற்பத்தி செய்யும் தொழில்நுட்ப மாற்றுப்பயிற்சிநெறி நாளை 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி நெறியில் இயந்திர முறை அறிமுகப்படுத்துவதுடன் உற்பத்திக்கான மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் யாழ்.மாவட்ட இலங்கை கைத்தொழில் அல்லது அபிவிருத்தி சபையின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள 021 222 2421 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களை பெற முடியுமென கைத்தொழில் அபிவிருத்தி சபையின் யாழ். பிராந்திய பிரதிப்பணிப்பாளர் சி.சிவகெங்காதரன் அறிவித்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்பிரச்சினை நகைச்சுவையா?

## சந்திரிகாவிடம் தமிழக மீனவர்கள் கேள்வி

**(இராமேஸ்வரம்)**

**தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுவார்கள் என்று இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நகைச்சுவைக்காகவே தெரிவித்ததாக முன்னாள் ஜனாதிபதி சந்தரிகா குமாரதுங்க கூறிய கருத்துக்கு ராமேஸ்வரம் மீனவர் பிரதிநிதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

முன்னதாக, தமிழ் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, "இந்திய மீனவர்கள் 600 இற்கும் மேற்பட்டோரை இலங்கைக் கடற்படையினர் சுட்டு வீழ்த்தியதாக குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது.

2011 இற்கு முன்னர் விடுதலைப்புலிகளுக்கு இந்திய மீனவர்கள் சிலர் ஆயுதங்களை வழங்கி வந்தனர். அவ்வாறு ஆயுதங்கள் வழங்க இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறும் மீனவர்களே சுடப்பட்டிருக்கின்றனர். 2011 இற்குப் பிறகு எவ்வித துப்பாக்கிச் சூடும் நடைபெறவில்லை.

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறாமல் இருந்திருந்தால் துப்பாக்கிச் சூடு நடந்திருக்காது. அத்துமீறிவிட்டு மனித உரிமை மீறல்கள் பற்றி பேசுவதில் நியாயமில்லை. ஆனால், இந்தியக் கடல் எல்லைக்குள்ளேயே அவர்கள் இருந்திருந்தால் எவ்வித துப்பாக்கிச் சூடும் நடந்திருக்காது.

என் வீட்டுக்குள் யாராவது அத்துமீறி நுழையும்போது அவரை நான் சுட்டால் என் நாட்டின் சட்டதிட்டம் அதை ஏற்றுக்கொள்ளும். மீனவர் பிரச்சினைக்கும் இது பொருந்தும்" என கூறிய கருத்து தமிழக மீனவர்களிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அதனை தொடர்ந்து கடந்த ஏப்ரல் 3 அன்று கொழும்பில் மீனவ தொழிற்சங்க பிரதிநிதிகளை சந்தித்துப் பேசிய இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இலங்கைக் கடல் எல்லையில் மீன்பிடிக்க தமிழக மீனவர்களுக்கு அனுமதி அளிக்கவில்லை. தமிழக மீனவர்கள் இலங்கை கடல் பகுதியில் மீனபிடிக்க அனுமதிக்க முடியாது என்றும் அத்துமீறி நுழையும் தமிழக மீனவர்களின் படகுகளை சிறைபிடிக்க வேண்டும் என்றும் கடற்படைக்கு உத்தரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து, கடந்த வெள்ளிக்கிழமை முன்னாள் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இலங்கைக் கடற்பரப்பினுள் அத்து மீறும் தமிழக மீனவர்கள் சுட்டுக்கொல்லப்படுவார்கள் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நகைச்சுவைக்காவே தெரிவித்ததாக பேட்டி ஒன்றில் கூறியிருந்தார்.

இது குறித்து இராமேஸ்வரம் மீனவர் பிரநிதி ஆம்ஸ்ட்ராங் பெர்னாண்டோ கூறும்போது, "இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இலங்கை கடற்பகுதிக்குள் நுழையும் தமிழக மீனவர்களை சுட்டுத்தள்ளுவோம் என உலகத்தில் எந்த தலைவரும் சொல்லாத கருத்தினை தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து இலங்கை ஜனாதிபதி எல்லை தாண்டும் தமிழக மீனவர்களை கைது செய்ய உத்தரவிட்டார். தற்போது இலங்கை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் தமிழக மீனவர்களை சுடுவோம் என நகைச்சுவைக்காகவே கூறியதாக சொல்லியுள்ளது வெந்த புண்ணில் வேல் குத்தியது போல் மீனவர்கள் உணருகிறோம். எங்கள் உயிர் பிரச்சினை நகைச்சுவையா?

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, தமிழக மீனவர்கள் குறித்து இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கை ஜனாதிபதி மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா என மூவர் கருத்திற்கும் உரிய முறையில் கண்டனத்தை இதுவரையிலும் தெரிவிக்காததால் இலங்கை அரசின் தொடர் அறிவிப்புகள் தமிழக மீனவர்களின் வாழ்வுரிமையை கேள்விக் குறியாக்கியுள்ளது.

இப்பிரச்சினைக்கு இந்தியாவின் வலிமையான பிரதமர் என்று சொல்லப்படுகின்ற நரேந்திர மோடி, நிரந்தர தீர்வுக்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## பாகிஸ்தான் இராணுவம் எல்லையில் அத்துமீறல்



(காஷ்மீர்)

ஜம்மு காஷ்மீர் மாநிலம் கதுவா மாவட்டத்தில், சர்வதேச எல்லையல் பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி தாக்குதல் நடத்தியுள்ளது.

கதுவா மாவட்டம், சர்வதேச எல்லையில் உள்ள ஹிராநகர் செக்டாரில் பாகிஸ்தான் இராணுவம் சிறிய ரக மோட்டார் பீரங்கிகளை கொண்டு தாக்குதல் நடத்தியது என்று எல்லை பாதுகாப்பு படை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் நடைபெற்று உள்ளது. மாலை 6 மணி அளவில் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து எல்லை பாதுகாப்பு படை இராணுவம் கூடுதல் படைகளை அங்கு அனுப்பியது. எல்லையில் பாகிஸ்தான் இராணுவத்தின் சந்தேகத்திற்கு இடமான நடவடிக்கையை அடுத்து அங்கு கூடுதல் படை அனுப்பப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் அபியால் தோக்ரா செக்டாரில் இருந்தும் இரண்டு முறை தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது. பாகிஸ்தான் நடத்திய துப்பாக்கி சூடு மற்றும் பீரங்கி தாக்குதலில் இந்திய தரப்பில் எந்தஒரு சேதமும் கிடையாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பாகிஸதான் படையினர் அத்துமீறியதற்கு இந்தியா தரப்பில் பதில் அடி கொடுக்கப்பட்டது. இரவு 10:15 மணியளவில் துப்பாக்கி சூடு முடிவுக்கு வந்தது. ஹிராநகர் செக்டாரில் ஹார்யாசாக், பான்சர் மற்றும் பாகாத்பூர் ஆகிய பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தாக்குதலில் வந்த குண்டு ஒன்று அப்பகுதியில் உள்ள வீட்டிற்கு வெளியே கிடந்தது. தற்போது அங்கு தொடர்ந்து அமைதியே நிலவிவருகிறது என்று இராணுவம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## இந்தியாவிற்கு ஐந்தாம் இடம்

பெரிய மின்சாதனங்களில் ஆரம்பித்து கையடக்கத் தொலைபேசி போன்ற சிறிய மின் சாதன பொருட்கள் மூலம் உருவாகும் மின் கழிவுகளை உருவாக்குவதில் உலக அளவில் இந்தியா ஐந்தாவது இடத்தில் உள்ளதாக ஐ.நாவின் ஆய்வில் தெரியவந்துள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டில் மட்டும இந்தியா உற்பத்தி செய்த மின் கழிவுகளின் மொத்த அளவு 1.7 மல்லியன் தொன் ஆகும். முதல் இடத்தில் அமெரிக்காவும், இரண்டாம் இடத்தில் சீனாவும் உள்ளன.

இவ்விரு நாடுகளும் சேர்ந்து உலகத்தில் உருவாகும் மொத்த மின்கழிவில் 32 சதவீதத்தை உருவாக்குகின்றன. அதேபோல் ஆசிய நாடுகளான இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் சேர்ந்து மொத்தமாக 16 மில்லியன் தொன் கழிவுகளை உற்பத்தி செய்கின்றன. இது சராசரியாக ஒரு தனி மனிதருக்கு 3.7 கிலோ கிராம் ஆகும்.

மிகவும் பின்தங்கிய நாடுகள் இருக்கும் கண்டமாக கருதப்படும் ஆபிரிக்கா தான் மிக குறைந்த மின்கழிவுகளை உற்பத்தி செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. மொத்த ஆபிரிக்க நாடுகளும் சேர்ந்து 1.6 மில்லியன் தொன் மின்கழிவுகளை உற் பத்தி செய்கின்றன.


அடுத்த மூன்றாண்டுகளில் உலகத்தின் மொத்த மின்கழிவு உற்பத்தியானது 21 சதவீதம் அதிகரிக்கும் எனவும் அந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது. (இ-5)

பாரதச் செய்தி

## சோனியாகாந்தி குறித்து சர்ச்சைக்குரிய கருத்து

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி குறித்து சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்த மத்திய அமைச்சர் கிரிராஜ்சிங் பாராளுமன்றில் மன்னிப்பு கோரியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜனதா கூட்டணி அரசில் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் துறை இராஜாங்க அமைச்சர் பதவி வகிப்பவர், கிரிராஜ் சிங். பீகார் மாநிலம், நவடா தொகுதி எம்.பியான இவர்சர்ச்சைகளுக்கு பெயர் பெற்றவர். அண்மையில் பீகாரில் செய்தியாளர்களிடம் பேசிய கிரி ராஜ் சிங், "ராஜீவ் காந்தி ஒரு நைஜீரிய பெண்ணை (கறுப்பின பெண்ணை) திருமணம் செய்து கொண்டிருந்தால், அவர் ஒரு வெள்ளை நிற பெண்மணியாக இல்லாது இருந் தால், காங்கிரஸ் கட்சி அவருக்கு தலைவர் பதவியைத் தந்திருக் குமா" என கேள்வி எழுப்பினார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத் தியது. இதற்கு அரசியல் கட்சிகளும் கண்டனம் தெரிவித்தன. இதனை யடுத்து போராட்டங்களும் நடை பெற்றன.



இந்நிலையில் பாராளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் 2ஆவது கட்ட கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. கூட்டத்தொடர் தொடங்கியதும் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் கிரிராஜ் சிங்கின் சர்ச்சைக்குரிய கருத்து விவகாரத்தை எழுப்பி கோஷம் எழுப்பினர். பெரும் அமளியில் ஈடுபட்டனர். இதனை தொடர்ந்து மக்களவை 20 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டது. இதனை தொடர்ந்து மீண்டும் அவை கூடியதும், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி குறித்து சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்த மத்திய அமைச்சர் கிரிராஜ் சிங் மன்னிப்பு கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் பேசிய கிரிராஜசிங், என்னுடைய கருத்து யாரையும் காயப்படுத்தி இருந்தால், நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய கருத்து யாரையும் அவமதிப்பதற்கானது என்று அர்த்தம் இல்லை, என்று தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை வலியுறுத்துங்கள்

## ஆனந்தன் எம்.பி. தெரிவிப்பு

**(குருமன்காடு)**

**கடந்த 13வருட காலமாக தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றுள்ள கூட்டமைப்புக்கு இன்று வரை எவ்வித யாப்போ, புரிந்துணர்வு ஒப்பந்தமோ கிடையாது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.**

துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தென்னியன்குளம், புத்துவெட்டுவான் கிராமங்களின் அபிவிருத்தி சங்கங்களுக்கு, 2014 ஆம் ஆண்டுக்கான தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து அவர் கடந்த 17 ஆம் திகதி தளபாடங்களை வழங்கியுள்ளார்.

இந்நிகழ்வில் அவர் மக்களின் குறைகளை கேட்டறிந்த போது, குறித்த இவ்விரு கிராமங்களினதும் மக்கள் தமது பகுதிகளில் பாதைகள் புனரமைக்கப்படாமை, போக்குவரத்து, மின்சாரம், குடிநீர், வீட்டு வசதிகள் இன்மை, பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு குறைகளை சுட்டிக்காட்டியதுடன், அவற்றை நிவர்த்தி செய்துதவுமாறும் வலியுறுத்தினர்.

இதன்போது ஆனந்தன் எம்.பி, இப்பகுதிகள் வன்னி யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டவை. புதிய அரசின் நூறுநாள் வேலைத்திட்டத்தின் கீழ் இப்பகுதிகளுக்கான அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். உங்களது குறைகளை சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி தீர்த்து வைக்க நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்ததோடு, கூட்டமைப்பு கட்டமைப்பாக இல்லாததும் இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஒரு தடையான விடயமாகும் என்றும் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பல ஆயிரம் போராளிகள், பொதுமக்களின் தியாகங்களின் பலனாக இனவிடுதலை, கௌரவமான அரசியல் தீர்வு என்பவற்றை பெறுவதற்காக உருவாக்கப்பட்டதே தமிழ் தேசியக்கூட்டமைப்பாகும்.

கடந்த 13 வருட காலமாக தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றுள்ள கூட்டமைப்புக்கு இன்றுவரை எவ்வித யாப்போ, புரிந்துணர்வு ஒப்பந்தமோ கிடையாது. சாதாரணமாக ஒரு கிராமத்தில் இருக்கக்கூடிய மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கிராம அபிவிருத்தி சங்கம், ஆலய பரிபாலன சபைக்கே யாப்புகள் இருக்கின்ற நிலையில், வடக்கு கிழக்கில் இருக்கக்கூடிய தமிழ் இனத்தின் இருப்பை தீர்மானிக்கின்ற அரசியல் சக்தியான தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு எவ்வித யாப்பும் இல்லை என்பது வாக்களித்த மக்களின் உணர்வுகளை அவமதிப்பதாகும்.

ஏனெனில் கூட்டமைப்பின் உருவாக்கத்தின் பின்னால் ஒவ்வொரு குடும்பங்களினதும் அளப்பரிய தியாகங்கள் இருக்கின்றன. எனவே உங்கள் உறவுகளின் இரத்தம் கண்ணீருடன் எவரும் விளையாடுவதை அனுமதிக்கக்கூடாது.

இதுவரை காலமும் தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு வாக்களிக்குமாறு உங்களிடம் கேட்ட நாங்கள், இப்போது கூட்டமைப்பின் ஒற்றுமையை வலியுறுத்துமாறு உங்களிடம் கேட்க வேண்டிய நிலையில், கூட்டமைப்புக்குள் இருப்பவர்கள் ஒருசிலரதும், அவர்களது கட்சியினதும் அரசியல் செயற்பாடுகள் இருப்பது வேதனையளிக்கிறது.

யாப்பு, புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்டு பலப்படுத்தப்பட்டால் மாத்திரமே அரசுக்கும், சர்வசேத்துக்கும் அழுத்தம் கொடுத்து தமிழ் மக்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வை காண முடியும். நாம் அனைவரும் ஒன்றுபட்டு மாபெரும் சக்தியாக உருவெடுக்கும் போதே, அன்றாட பிரச்சினைகளிலிருந்து அரசியல் தீர்வு வரைக்கும் எதனையும் சாதிக்க முடியும்.

எந்தவொரு போராட்டமும் வெற்றி பெறுவதற்கு அந்த மக்களை பிரநிதித்துவப்படுத்துகின்ற கட்சி பலம் மிக்கதாகவும், கொள்கை பற்றுள்ளதாகவும், திறமை மிக்கதாகவும், ஆளுமை மிக்கதாகவும், பல்வேறு உட்கட்டமைப்புகளை கொண்டதாகவும், ஒரு அரசாங்கத்துக்கு நிகரானதாகவும், ஜனநாயக பண்புகளை கொண்டதாகவும் இருக்க வேண்டும். இதற்கு மக்களை வழிநடத்தும் தகுதி இருக்க வேண்டும்.

இதில் ஏதாவது ஒன்று குறைந்தாலும் அந்த மக்கள் போராட்டங்கள் வெற்றி பெற்றதில்லை என்றும், இத்தகைய பண்புகள் இருந்தால் எந்த சக்தியாலும் கூடடமைப்பை பிரிப்பதற்கோ உடைப்பதற்கோ முடி யாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (2-250)

# தண்டவாளத்தில் இருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு



(மன்னார்)

புகையிரத தண்டவாளத்திலிருந்து குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 1.30மணியளவில் மன்னார் தோட்டவெளி ஜோசப் வாஸ் நகர் பகுதியிலுள்ள தண்டவாளத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் மன்னார் தோட்டவெளி ஜோசப் வாஸ்-நகர் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான என் ஜெரால்ட் காட்டர் (வயது-35) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, பிரஸ்தாப நபர் ஜோசப் வாஸ் நகர் கிராமத்தில் உள்ள தனது வீட்டிற்கு பின்பகுதியில் அமைந்துள்ள புகையிரத தண்டவாளத்தில் படுத்துறங்கியுள்ளார்.

இதன்போது தலைமன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதம் இவரை மோதித் தள்ளியுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அவர் கைமணிக்கட்டு, கால்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் தண்டவாளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மன்னார் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2)

வன்னி வலம்

## வீதிபுனரமைப்பு பணி ஆரம்பம்



(குருமன்காடு)

வடக்குமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தின் 2015 ஆம ஆண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட நிதியுதவியுடன் கொந்தக்காரன் குளம்-விளக்கு வைத்தகுளம் வீதியானது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 1996ஆம் ஆண்டு முதல் இராணுவத்தின் பாதுகாப்பு முன்னரணாக விளங்கிய கொந்தக்காரன் குளம் மற்றும் மறிச்சுக்கட்டியை உள்ளடக்கிய விளக்கு வைத்தகுளம் வரையிலான 3.5 கிலோமீற்றர் நீளமான வீதி கடந்த 18 வருடங்களுக்கு மேலாக திருத்தவேலைகள ஏதும் மேற்கொள்ளப்படாது பெரும் பற்றைக்காடுகளாக மாறியிருந்தன.

தற்போது அப்பிரதேசத்திலே மகள் மீளக்குடியேறியுள்ள நிலையில் மக்களின் போக்குவரத்து தேவையினை பூர்த்து செய்யுமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கைய்யை யடுத்து வடமாகாண சுகாதார அமைச்சின் 2015 ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து இவ்வீதி புனரமைக்கப்படுகிறது.

இவ் வீதி புனரமைப்பு நடவடிக்கைகளை வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைத் தலைவர் க.சிவலிங்கம், தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் றோய் ஜெயக்குமார் உள்ளிட்ட குழுவினர் சென்று பார்வையிட்டனர்.

ஓமந்தை, கொந்தக்காரன் குளம்-விளக்குவைத்தகுளம் வீதி யானது வடக்கு சுகாதார அமைச்சரின் நிதியின்மூலம் 18 வருடங்களுக்குபின் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# பொலிஸ் காவல் நிலையம் பொலிஸ் நிலையமாக தரமுயர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் அமைந்துள்ள பொலிஸ் காவல் நிலையம், அடுத்த மாதம் முதல் பொலிஸ் நிலையமாக மாற்றப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எட்மன் மகேந்திரா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், அடுத்த மாதம் முதல் தர்மபுரம் பொலிஸ் காவல் நிலையம் பொலிஸ் நிலையமாக இயங்கவுள்ளதுடன் கண்டாவளை பிரதேசத்தை சேர்ந்த 10 கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் இதன் சேவைகள் அமையவுள்ளன.

இதுவரை, கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் கீழ் இயங்கிய இராமநாதபுரம் பொலிஸ் காவல் நிலையம், தர்மபுரம் பொலிஸ் நிலையத்தின் கீழ் இயங்கவுள்ளது. அத்துடன், தர்மபுரம் பொலிஸ் நிலையத்தின் குற்றத் தடுப்பு பிரிவு, மது ஒழிப்பு பிரிவு, பல்வகை முறைப்பாட்டு பிரிவு, போக்குவரத்து பிரிவு உள்ளிட்ட சகல பிரிவுகளும் தனி யாக இயங்கவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுதிவாரி தேர்தல் முறைமையை எதிர்க்க வேண்டுமெனக் கோரிக்கை

(கொழும்பு)

தொகுதிவாரி தேர்தல் முறையை எதிர்க்குமாறும் தொகுதிவாரி தேர்தல் முறை 2007இல் பாராளு மன்றத்தில் முன்வைக்கப்பட்டபோது அதனை எதிர்க்காமல் மௌனமாக இருந்த சிறுபான்மை கட்சிகள், இப்போது திடீரென தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டது போல் தடுமாறுவதை காணமுடிகிறது என உலமா கட்சித்தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார். தொகுதிவாரி தேர்தல் சம்பந்தமாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தனவால் 2007ம் ஆணடு தொகுதிவாரி தேர்தல் முறை மாற்றப்படுவது குறித்த ஆலோசனைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டன.

அப்போது பாராளுமன்றத்தில் இருந்த சிறுபான்மைக் கட்சிகள் இதன் பாராதூரம் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

ஆளுங்கட்சியுடன் இணைந்திருந்த தமிழ், முஸ்லிம் கட்சிகளும் எதிரணியில் இருந்த தமிழ் கட்சிகளும் இது பற்றிய தமது எதிர்ப்பை வெளியிடவில்லை.

இந்த நிலையில் உலமா கட்சி இது பற்றிய எதிர்ப்பை வெளியிட்டதுடன், தொகுதிவாரி தேர்தல் முறையாயின் 50:50 என்ற வகையில் விகிதாசார தேர்தல் முறையும் உள்வாங்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தது.

ஏனைய் சிறுபான்மை கட்சிகள் இதுபற்றி மக்களை தெளிவூட்டவுமில்லை, இதற்கான தமது ஜனநாயக எதிர்ப்பை வெளியிடவுமில்லை. தற்போது வெள்ளம் தலைக்கு மேல் வந்த பின் இதுபற்றி கலந்தாலோசிப்பது காலம் கடந்த செயலாகவே தெரிகிறது.

அரசாங்கம் தேர்தல் முறையை மாற்றுவதற்கான யோசனைகளை தயாரித்து அதனை பாராளுமன்றத்தில் இன்றோ, நாளையோ நிறைவேற்றப்போகிறோம் என அடம் பிடிக்கும் போதுதான் சிறுபான்மை கட்சிகளுக்கு இதன் பாரதூரம் விளங்கியுள்ளமை பரிதாபத்துக்குரியதாகும். இதன் காரணமாக இத்தகைய கட்சிகள் சமூக சிந்தனையில்லாது செயற்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது.

ஆகவே ஐம்பதுக்கு ஐம்பது என்ற வகையில் இல்லாது முன்வைககப்படும் தொகுதிவாரி தேர்தல் முறையை எதிர்க்கும்படி பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சிறு கட்சிகளை உலமா கட்சி கேட்டுக் கொள்கிறது என அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# தமிழக மீனவர்கள் எழுவர் தாக்கப்பட்டதாக முறையீடு


(கொழும்பு)

இலங்கை - இந்திய கடற்பரப்பில் வைத்து 7 தமிழக மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு கடற்கொள்ளையர்களால் தாக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கை கடற்பகுதியில் இருந்த சென்ற கடற்கொள்ளையர்களினாலே அந்த மீனவர்கள் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கானவர்களில் இருவர் தலையில் பல காயங்களுடன் அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மீனவர்கள் கோடிக்கரையிலிருந்து தெற்காக சில கடல் மைல்கள் தொலைவில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த நிலையில் கடற்கொள்ளையரின் தாக்குதலுக்கு உள்ளானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் தாக்கப்பட்டதுடன். அவர்களின படகில் இருந்த உபகரணங்களும் தாக்கி சேதமாக்கப்பட்டதாகவும் தமிழக பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)




# கிழக்கு மாகாண சபையில் தமிழில் தேசிய கீதம்!

(கொழும்பு)

**கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ நஸீர் அஹமதின் நடவடிக்கையை அடுத்து நேற்று தமிழிலும் மாகாண சபையில் தேசிய கீதம் இசைத்து வரலாறு படைத்துள்ளது. அனைத்து சமூகங்களையும் ஒருங்கிணைத்து நல்லாட்சிக்கு முன்னுதாரணத்தை ஏற்படுத்திய கிழக்கு மாகாண சபை, தேசிய கீதத்தை தமிழில் இசைக்கும் முன்மாதிரி ஒன்றையும் நேற்று வெளிப்படுத்தியது.**

கடந்த ஆட்சியில் தேசிய கீதத்தை தமிழில் இசைப்பதில் ஏற்பட்டிருந்த தடங்கலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போக்கியிருந்தார்.

இதனை அடுத்து முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் இந்த முன்னுதாரணத்தை ஏற்படுத்தி இன ஒற்றுமைக்கு வித்திட்டுள்ளார்.

முதலமைச்சர் இதுகுறித்து தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை நாட்டில் இன்று நல்லாட்சி மலர்ந்துள்ள இவ்வேளையில் குழப்பம் விளைவிக்க சிலர் முன்வந்துள்ளனர்.

அவர்களின் கசட்டுத்தனமான எண்ணங்களை பறித்து வீசி விட வேண்டும் என்றால் நாம் சகல இன, மொழி மக்களும் ஒற்றுமையாக வாழவேண்டும்.

அதன் ஒரு படியாக இன்று கிழக்கில் மொழியால் ஒற்றுமைப்பட்டிருக்கிறோம்.

கிழக்கு மாகாணத்தை ஏனைய மாகாண மக்களுக்கு ஒரு முன்னுதாரணமாக மாற்றியமைக்க என்னால் முடிந்த சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன்.

இதற்காக அரசியல்வாதிகள், நல்ல சிந்தனையுள்ளவர்கள், மதத்தலைவர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் அனைவரும் கை கொடுக்குமாறு அன்பான அழைப்பு விடுக்கிறேன் என்று கிழக்கு மாகாண முதல மைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தனது அறிக்கையில் தெரிவித்தார். (இ-5)

# பொருளும் அருளும் வழங்கும் அட்ஷய திருதியைத் திருநாள்

வருடந்தோறும் சித்திரை மாதத்து வளர்பிறை திருதியை திதி நாளை அட்ஷயதிருதியை நன்னாளாக பொன் வாங்கும் நாளாகப் பெருமையுடன் எம்மக்கள் கொண்டாடுவார்கள். இதன் சிறப்பை, பெருமையை பற்றிப் புராணக் கதைகள் பலவாறு கூறுகின்றன.

மணிமேகலையின் கையில் இருந்த அமுதசுரபி அள்ள அள்ளக் குறையாத பாத்திரமாகவும் திரௌபதையின் கையில் இருந்த அட்ஷய பாத்திரம் குறைவிலாத நிறைவுடைய பாத்திரமாகவும் குசேலர் கண்ண பரமாத்மாவிற்கு இல்லையென்னாது கொடுக்க உதவிய அட்ஷய பாத்திரமென அள்ள அள்ளக்குறையாத பாத்திரங்கள் அட்ஷய பாத்திரங்கள் எனப் பெருமையுடன் அருளும் பொருளும் நிறைந்தனவாகப் புராணங்கள் சிறப்பிக்கின்றன.

மகாகவி காளிதாசர் எழுதிய உத்திர காலாமிர்தம் எனும் நூல் அட்ஷய திருதியை பற்றி விரிவாகச் சொல்கின்றது. இதில் இந்த நன்னாள் பொருளும் திருவருளும் தரும் பெருமை மிக்க நாளாகப் போற்றப்படுகின்றது. இந்த நன்னாளிலேதான் பிரம்மா படைப்புத் தொழிலை ஆரம்பித்ததாகவும் புனித கங்கா நதியானது சொர்க்கத்திலிருந்து பூமிக்கு வந்திறங்கியதாகவும் வேதவியாசர் மகாபாரதத்தை ஏட்டில் எழுத ஆரம்பித்ததாகவும் மகாவிஷ்ணு பரசுராம அவதாரம் எடுத்ததாகவும் கூறப்படுகின்றது. இந்த நன்னாளிலே எடுத்த காரியங்கள் கைகூடும். தொட்டது துலங்கும். இவ்வுலக மக்கள் வேண்டும் பொன்னும் பொருளும் பெருகும் எனவும் இந்நாளிலே செய்யப்படும் புண்ணிய காரியங்கள், தான தருமங்கள் பேரருள் பொலிய வழிசமைக்கும் என புராணங்கள் சிறப்பாகக் கூறுகின்றன.

மண்ணுலக வாழ்விற்கு வேண்டிய பொன்பொருள் தரவும் மக்கள் தம் வாழ்வில் நற்பேறு பெறத்தக்க நல்லருள் தரவும் அட்ஷய திருதியை நன்னாள் வழிகாட்டுவதாக உள்ளது. அள்ள அள்ளக் குறையாத நிறைவுடைய பாத்திரம் அட்ஷய பாத்திரம் என்பது. தேவலோகத்திலே நடைபெற்ற ருத்திர கல்யாண பெருவிழாவிலே முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் விருந்து பரிமாறுவதற்காக அரியும் சிவனும் சேர்ந்து படைத்து அரிசிவசொரூபமாக இல்லையென்னாது எல்லோருக்கும் விருந்துபடைத்தருளியசிறப்பைக்கொண்ட பாத்திரமாகப் போற்றப்படுகின்றது.

பொன்னுக்கும் பொருளுக்கும் மயங்கும் இன்றைய மக்கள் இந்த நல்லநாளில் நாம் செய்யும்நல்ல தானதர்மங்களும் நற்செயல்களும் பல்கிப் பெருகி எல்லோரும் நல்வாழ்வு வாழவும் நல்லபணிகள் நின்று நிலைத்து உலகில் தர்மம் தழைத்திடவும் இன்றைய அட்ஷய திருதியை நன்னாள் வழிசமைப்பதாக அமையட்டும்.

நீர்வைமணி

# நீர்வீழ்ச்சியினுள் பாய்ந்து காதல் ஜோடி தற்கொலை

(கொழும்பு)

பதுளை கொஸ்லாந்த பிரதேசத்தில் உள்ள தியலும நீர்வீழ்ச்சியில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட காதல் ஜோடியின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

யுவதியின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டதுடன், இளைஞனின் சடலம் நேற்றைய தினம் மீட்கப்பட்டுள்ளதாக கொஸ்லந்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் நீர்வீழ்ச்சியில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளதுடன், உயிரிழந்தவர்கள் காதல் ஜோடியென அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் இருவரும் தியலும - நிகபொத பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டர்வர்கள் எனவும், 17 வயதுடையவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடும்பத்தில் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாகவே தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

மேலும் தற்கொலை செய்ய முன்னர் உறவினர் ஒருவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட இவர்கள் அது பற்றி கூறியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞன் 17 வயதுடைய சரவணா யோகராஜா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக கொஸ்லந்தை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்லந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

# 10பேர் பலி

சோமாலியாவில் நேற்று இடம்பெற்றுள்ள குண்டு வெடிப்பில் 10 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

ஐ.நா. வின் வாகனத்திலேயே இந்த குண்டுவெடிப்பு இடம் பெற்றுள்ளது. பேருந்தில் குண்டு பொருத்தப்பட்டிருந்ததாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறினர். ஆனால், இது ஒரு தற்கொலைத் தாக்குதல் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் ஐ.நா தூதரகத்தில் பணியாற்றுகின்ற கென்னியர்களும் சோமாலியர்களும் அடங்குகின்றனர். (இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சரிவும் ஏற்றமும்!

விஜயபுரியில் வசித்து வந்த சுந்தரம் வியாபாரம் செய்ய விரும்பினான். ஆனால் எந்த வியாபாரத்தில் இறங்கினால் விரைவில் பணம் சம்பாதிக்க முடியும் என்பதில் அவனுக்குக் குழப்பம் ஏற்பட்டது.

இறுதியாக விஜயபுரியில் நல்ல தரமான உணவு விடுதிகள் இல்லை. அதனால் தான் ஒரு உணவு விடுதி தொடங்கினால், நிச்சயமாக நல்ல வியாபாரம் நடக்கும் என்று தோனறியதால், நகரின் பிரதான கடைத் தெருவில் ஓர் உணவு விடுதியைத் திறந்து வைத்துத் தன் வியாபாரத்தை ஆரம்பித்தான்.




ஆனால் சுந்தரம் எதிர்பார்த்ததுபோல் திருப்திகரமாக வியாபாரம் நடைபெறவில்லை. ஒருநாள், அயலூரிலிருந்து ஆனந்தன் என்ற சமையற்காரன் அவனிடம் வேலைகேட்டுவர, அவனைத் தன் உணவு விடுதியில் நியமித்தான்.

ஆனந்தன் மிகமிகச் சுவையாகவும் தின் பண்டங்களைத் தயாரித்தான். சிறிது சிறிதாக வியாபாரம் ஏற்றம் கண்டது. ஓராண்டிலேயே, சுந்தரத்தின் உணவு விடுதியில் கூட்டம் அலை புரண்டது. ஒருநாள் சமையற்கார ஆனந்தன் சுந்தரத்திடம் ஆயிரம் ரூபாய் கடன் கேட்டான். ஆனால் சுந்தரம் அவனுக்குக் கடன் தரமறுத்துவிட்டான்.

ஆனால், அன்று முதல் சுந்தரத்தின் உணவு விடுதியில் விற்கப்பட்ட பண்டங்களின் சுவை குறைந்தது. ஆரம்பததில் வாடிக்கையாளர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை.

ஆனால், நாளாக நாளாக, வாடிக் கையாளர்கள் கூட்டம் குறையத் தொடங்கியது. அமோகமாக நடைபெற்றுக் கொணடிருந்த சுந்தரத்தின் வியாபாரத்தில் சரிவு ஏற்பட, அவன் காரணம தெரியாமல் திகைத்தான்.

சுந்தரத்தின் பள்ளி ஆசிரியரும் அந்த உணவு விடுதியின் வாடிக்கையாளர்களில் ஒருவர். ஒருநாள் அவர் சுந்தரத்திடம், "உன்னுடைய விடுதியில் முன்போல் உணவுப் பண்டங்கள் சுவையாக இல்லையே! என்ன காரணம்?" என்று கேட்டார்.



"அதுதான் எனக்கும் புரியவில்லை, ஐயா!" என்ற சுந்தரம், 'உங்களைப போலவே இன்னும் சிலரும் என்னிடம் குறை கூறினர்.

அதே ஆனந்தன்தான் இப்போதும் சமைக்கிறான்!' என்றதும், 'அப்படியென்றால் ஆனந்தன் முன்போல் அக்கறையுடன் சமைப்பதில்லை என்று தோன்றுகிறது.

அவன் ஏதாவது உன்னை உதவி கேட்டு அதை நீ மறுத்தாயா?" என்று ஆசிரியர் கேட்டார். "ஆம்! அவன் என்னிடம் ஒருநாள் ஆயிரம் ரூபாய் கடன் கேட்டான்! ஒருமுறை தந்தால், பிறகு அடிக்கடி கேட்பான் என்பதால் தரமறுத்துவிட்டேன்!" என்றான்

சுந்தரம். 'அதுதான் நீ செய்த தவறு!' என்ற ஆசிரியர், 'எல்லா மனிதர்களையும் ஏன் ஒரே மாதிரியாக நினைக்கிறாய்? அவனுக்கு உண்மையாகவே தேவை இருந்திருக்கலாம்.

முதலாளியான உன்னைக் கேட்காமல் அவன் வேறு யாரைக் கேட்பான்? உன்னுடைய வியாபாரத்தின் முக்கிய சூத்திரதாரியே அவன்தான்!

அவன் மனம் லயித்து வேலை செய்யவில்லையெனில் உனக்குப் பெரிய நஷ்டம் உண்டாகும்! நீ எதற்கும் அவனுக்கு ஒருமுறை கடன் கொடுத்துப் பார்!" என்று அறிவுரை கூறிவிட்டுச் சென்றார்.

தனது ஆசிரியர் கூறியது சரியெனத் தோன்ற, உடனே சுந்தரம் ஆனந்தனை அழைத்து 'அன்று நீ கேட்டபோது என்னிடம் பணம் இல்லை. இப்போது தருகிறேன்!' என்று பணம் கொடுக்க, ஆனந்தன் முகம் மலர்ந்தது. மாயம்போல், அன்று முதல் உணவுப் பண்டங்கள் முனபோலவே சுவையாக சமைக்கப்பட்டன.

வாடிக்கையாளர்கள் கூட்டம் மீண்டும் பெருகியது. வியாபாரமும் ஏற்றம் கண்டது.




- கி.மு 753 - ரொமூலஸ் மற்றும் ரேமுஸ் இருவரும் உரோம் நகரை அமைத்தனர்.
- கி.மு 43 - ரோமப் பேரரசு: ஆவுலஸ் ஹேர்ட்டியஸ் உடன இடம்பெற்ற சமரில் மார்க் அந்தோனி மீண்டும் தோற்றான். ஆனால், ஹேர்ட்டியஸ் இச்சமரில் கொல்லப்பட்டான்.
- 1509 - ஏழாம் ஹென்றியின் இறப்புக்குப் பின்னர் அவனது மகன் எட்டாம் ஹென்றி இங்கிலாநதின் மன்னனாக முடிசூடினான்.
- 1526 - பானிப்பட்டில் முதலாவது போர் டில்லியின் சுல்தானுக்கும் தைமூர் வம்சத்தைச் சேர்ந்த பாபருக்கும் இடையில் இடம்பெற்றது. பாபர் இந்தியாவில் மொகலாயப் பேரரசை நிறுவினான.
- 1792 - பிரேசில் நாட்டின் விடுதலைக்குப் போராடிய டைராடெண்டெஸ் தூக்கிலிடப்பட்டான்.
- 1863 - கடவுளின் தூதர் தாமே என பகாவுல்லா பகிரங்கமாக அறிவித்தார். ரித்வான் தோட்டத்தில் செய்த இந்த அறிவிப்பு நாள் உலகம் முழுவதும் உள்ள பஹாய்களால் 'ரித்வான் முதல்' நாள் என விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்படுகின்றது.
- 1916 - இலங்கையில் அமெரிக்க மிசனறிகள் ஒன்றுகூடி முதன் முதலில் ஒரு திருச்சபையை ஆரம்பித்தனர்.
- 1822 - இலங்கையில் அமெரிக்கத் திருச்சபையின் குருக்களாக (pastor) முதற்தடவையாக உள்ளூரில இருந்து தெரிவு செய்யப்பட்டனர். ஜோர்டன் லொட்ஜ், நத்தானியேல் நைல்ஸ், சார்ல்ஸ் ஹொட்ஜ், எபனேசர் போர்ட்டர் ஆகியோர் தெரிவானார்கள்.
- 1944 - பிரான்சில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: பெர்லினில் சோவியத் படைகள் ஜேர்மனியின் உயர் தலைமைப பீடத்தைத் தாக்கினர்.
- 1960 - பிரசீலியா பிரேசிலின் தலைநகராக ஆக்கப்பட்டது.
- 1967 - கிரேக்கத்தில் பொதுத்தேர்தலுக்கு சில நாட்கள் இருக்கையில் இராணுவத் தளபதி ஜோர்ஜ் பப்படபவுலோஸ் ஆட்சியைக் கைப்பற்றி அடுத்த ஏழாண்டுகளுக்கு பதவியில் இருந்தார்.
- 1975 - வியட்நாம் போர்: தெற்கு வியட்நாம் ஜனாதிபதி நூயென் வான் டியூ சாய்கோனை விட்டு வெளியேறினார்.
- 1989 - பெய்ஜிங் நகரில் தியனன்மென் சதுக்கத்தில் கிட்டத்தட்ட 100,000 மாணவர்கள் சீர்திருதத் தலைவர் ஹீ யாபாங்கின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தத் திரண்டனர்.
- 1994 - சூரியக் குடும்பத்துக்கு வெளியே கோள்கள் இருப்பதை முதன் முதலில் வானியலாளர் அலெக்சாண்டர் வோல்ஸ்க்சான் அறிவித்தார்.

**பிறப்புகள**

- 1837 - பிரெட்ரிக் பேஜர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1922)
- 1864- மக்ஸ் வெபர், ஜேர்மனிய சமூகவியலாளர் (இ. 1920)
- 1882 - பேர்சி பிரிட்ஜ்மன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1961)
- 1889 - பவுல் காரெர், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (இ. 1971)
- **1926 - இரண்டம் எலிசபெத், ஐக்கிய இராச்சியத்தின் மகாராணி**

**இறப்புகள்**

- 1910 - மார்க் டுவைன், அமெரிக்க எழுத்தாளர் (பி. 1835)
- 1938 - முகமது இக்பால், பிரித்தானிய இந்தியாவின் முஸ்லிம் கவிஞர் (பி. 1877)
- 1946 - ஜான் மேனார்ட் கெயின்ஸ், பிரித்தானியப் பொருளியலாளர் (பி. 1883)
- 1964 - பாரதிதாசன், புரட்சிக் கவிஞர், பாவேந்தர் (பி. [illegible])
- 1965 - எட்வர்ட் ஆப்பில்டன், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1892)

### இரண்டாம் எலிசபெத்



பிரிட்டனின் 6 ஆம் ஜோஜ் மன்னருக்கும் அவரது துணைவியார் எலிசபெத் மகாராணிக்கும், மூத்த பிள்ளையாக 1926 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி பிறந்தார். அவருக்கு அப்போது எலிசபெத் அலெக்ஸாண்ட்ரா மேரி என்ற பெயர் சூட்டப் பெற்றது. 1952 ஆம் ஆண்டு பிரித்தானிய மன்னராக இருந்த இவரது தந்தை காலமான நிலையில் 26 வயதிலேயே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மகாராணியாக இரண்டாம் எலிசபெத் மகாராணி என்ற பெயருடன் முடிசூடிக் கொண்டார்.

பிரிட்டனில் நூற்றாண்டுகள் காலம் பரிணாம வளர்ச்சி கண்டுள்ள அரசியல் சாசன கடமைகளையும், பிரதிநிதித்துவப் பொறுப்புகளையும் மகாராணி இரண்டாம் எலிசபெத் நிறைவேற்றி வருகிறார். ஐக்கிய இராச்சியம் உட்பட 16 இறைமையுள்ள நாடுகளின் அரசியல் சட்டப்படியான அரசியாக உள்ளார். அனைத்து நாடுகளுக்கும் இவர் தனித்தனியே வெவ்வேறு பெயர்களில் ஆட்சிப் பெயர்களைக் கொண்டிருந்தாலும், ஐக்கிய இராச்சியத்திலேயே, லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் அரண்மனையில் இவர் வாழ்கிறார். 54 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட பொதுநலவாயத்தின் தலைவரும் இவராவார். இவர் இங்கிலாந்து திருச்சபையின் மிக உயரிய ஆளுநர் ஆவார்.

அரசியின் பல வரலாற்றுச் சிறப்பு மிக்க வருகைகளிலும் சந்திப்புகளிலும் அயர்லாந்து குடியரசுக்கான அரசுப் பயணமும் reciprocal visits to and from the திருத்தந்தையுடனான சந்திப்புக்களும் முதன்மையானவை. தனது ஆளுமைக்குட்பட்ட நாடுகளில் பல அரசியல்சட்ட மாற்றங்களை கண்டுள்ளார். ஐக்கிய இராச்சியத்தில் அதிகாரப் பகிர்வு மற்றும் கனேடிய அரசியல் சட்டத்தின் திரும்பப் பெறல் போன்றவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

...'முற்றிலும் கிராமிய சூழ்நிலையில் ரஜினி நடித்த 'எஜமான்' படம், 175 நாட்கள் ஓடி வெள்ளி விழாக் கொண்டாடியது.

இதுவரை, ஏவி.எம். தயாரித்த ரஜினி படங்கள் அனைத்தையும் எஸ்.பி.முத்துராமன்தான் டைரக்ட் செய்தார். முதன் முதலாக இப் படத்தை ஆர்.வி.உதயகுமார் டைரக்ட் செய்தார்.

திரைப்படக் கல்லூரியில் பயின்று டைரக்டர் ஆனவர், ஆர்.வி. உதயகுமார்.

சிவாஜியை 'புதிய வானம்' படததிலும், விஜயகாந்தை 'சின்னக கவுண்டர்' படத்திலும், கார்த்திக்கை 'பொன்னுமணி', 'கிழக்கு வாசல்' ஆகிய படங்களிலும் இயக்கி புகழ் பெற்றவர். இந்தப் புகழ் இவருக்கு ரஜினியின் 'எஜமான்' படத்தை இயக்கும் வாய்ப்பையும் பெற்றுத் தந்தது.

### 80 நாள் படப்பிடிப்பு

படத்தில் ரஜினியுடன் மீனா, ஐஸ்வர்யா (லட்சுமியின் மகள்) ஆகியோர் நடித்தனர். இளையராஜா இசை அமைத்தார்.

பொள்ளாச்சியை அடுத்த சமத்தூரில், 80 நாட்கள் படப்பிடிப்பு நடந்தது. ஒரு கனவு காட்சி தவிர, படம் முழுவதும் வேட்டி-சட்டையில் நடித்தார், ரஜினி.

1993 பெப்ரவரி 18 ஆம் திகதி வெளிவந்த 'எஜமான்', 25 வாரங்கள் ஓடி வெள்ளி விழா கொண்டாடியது.

இந்தப்படத்தை இயக்கிய அனுபவம்குறித்து, டைரக்டர் ஆர்.வி.உதயகுமார் கூறியதாவது:-

'சின்னக்கவுண்டர் படத்தின் வெற்றிக்குப் பிறகு புதிய படம் இயக்கும்படி நிறைய பேர் என்னைக் கேட்டார்கள்.

விஜயகாந்த்கூட புதிய படத்திலும் இணைந்து பணியாற்றலாமே என்று சொன்னார். 'கலைப்புலி' தாணு கேட்டார். இன்னும் சில தயாரிப்பாளர்களும் கேட்டார்கள். யாருக்கு படம் பண்ணுவது என்கிற யோசனையில் இருந்தபோது, பளிச்சென எனக்குள் ரஜினி வந்து போனார்.

'சான்ஸ் கொடுங்க!'

அதற்குக்காரணம் இருக்கிறது. கிழக்கு வாசல்படத்தின்வெற்றி விழா கொண்டாட்டத்தின்போது, கேடயம் வழங்க ரஜினி வந்திருந்தார். விழாவில் அவர் பேசும்போது, 'உங்க படத்தில் எனக்கு ஒரு சான்ஸ் கொடுங்க' என்று 'மைக்'கிலேயே கேட்டார்.


110

ரஜினி-மீனா- எஜமான்

டைரக்டர்கள் எல்லாருக்குமே, ரஜினி சாரின் படத்தை இயக்க வேண்டும் என்ற கனவு இருக்கும். ஆனால், அவரே இப்படி வெளிப்படையாக அதுவும் மேடையில் என்னிடம் கேட்டது எனக்கு நம்ப முடியாத ஆச்சரியத்தை அளித்தது. நான் அவரிடம், 'நாங்க சான்ஸ் கேட்டு, நீங்கதான் சார் எங்களுக்கு வாய்ப்பு கொடுக்கணும்' என்றேன்.

ரஜினி சார் மீது ஏற்கனவே எனக்கு அதிக மரியாதை. என் முதல் படம் 'உரிமை கீதம்' படத்தை இயக்கி முடித்த நேரத்தில், படத்துக்கான 'டிரெய்லர்' தயாரித்து தியேட்டரகளில் திரையிட்டோம். 10 நிமிடம் வரும் இந்த டிரெய்லரை ரஜினியும் பார்த்திருக்கிறார். பார்த்ததோடு நின்றுவிடாமல், தனது கலை உலக நண்பர்களிடம், 'ஒரு படத்தோட டிரெய்லர் எப்படி இருக்கணும்ங்கறதுக்கு உதயகுமார் இயக்கிய 'உரிமை கீதம்' பட டிரெய்லர்தான் உதாரணம் என்று பாராட்டியிருக்கிறார்.

இது என் காதுக்கும் வந்தது. அப்போதே அவரது பெருந்தன்மைக்கு தலை வணங்கினேன்.


விஜயகாந்த் நாயகனாக நடிக்க நான் இயக்கிய 'சின்னக்கவுண்டர்' படம் ரிலீசானபோது ரஜினி படம் ஒன்றும் ரிலீசானது. படம் வெளிவந்து சில நாட்களில், ரஜினி சாரிடமிருந்து எனக்கு ஒரு போன். 'வாழ்த்துக்கள் உதயகுமார்! உங்க படம் (சின்னக்கவுண்டர்) நல்லா போகுதுன்னு கேள்விப்பட்டேன்' என்றார்.

பதிலுக்கு நான் அவரிடம், 'சார் உங்க படமும் நல்லா போகுதுன்னு சொன்னாங்க' என்றேன்.

'இல்லே! முதல் இடத்துல உங்க படம்தான் இருக்குது' என்றார், ரஜினி.

அவரது இந்த பெருந்தன்மைக்கு பதில் சொல்ல நான் யோசித்து வார்த்தைகளை தேடிய நேரத்தில், ரஜினி சார் 'நாம் சந்திக்கணுமே' என்றார்.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து-121

...சொக்கத் தங்கம் மட்டும் இதுல ரெண்டரை தேறும்; இப்பப் பாருங்க.

நான் பத்திக்கிட்டேன்னு செவப்புமுழி முழிச்சுக் காமிக்குது கரிக்கங்கு. ஆசாரி ஒரு மண் சுட்டியை எடுத்தாரு. சங்கிலியை அதுல போட்டாரு. ஒரு ஒலகொறடு எடுத்து மண் சுட்டியைப் புடிச்சு நடு அடுப்புல வச்சாரு; ஊதுறாரு. உயிர் மூச்ச உள்ள ஊதுறாரு.

குடுத்தா மட்டும் சிரிக்கிற மனுசப் பயக மாதிரி காத்து வந்தா மட்டும் கண்ணச் சிமிட்டுது கங்கு. முதுகத் தூக்கிச் சுவத்தில போட்டுட்டு மனசத்தூக்கி உமி ஒட்டுல போட்டுட்டு தங்க வேடிக்க பாக்கத் தயாராயிட்டாரு செட்டியாரு.

கால மணி நேரத்துல உருகி உருகித் தண்ணியா ஓடுதய்யா தங்கம். தங்கம் தண்ணியாப் போனதும் பதறிப்போனாரு சுப்பஞ் செட்டியார்.

நெருப்புல போட்டாத் தங்கமே உருவழிஞ்சு தண்ணியா ஓடிப் போயிருது. இந்தச் சொத்த எலும்பும், சுருங்குன தசையும் எண்ணத்துக்காகும்? சுப்பஞ் செட்டியாரு சொல்லிப் பாத்துக்கிட்டாரு மனசுக்குள்ள; சொல்லல வெளியில.

உருகுன தங்கத் தண்ணியில நவச்சாரத் தூள அள்ளி எறிஞ்சாரு ஆசாரி. பொண்ணு மாப்பளைய ஒண்ணு சேத்து வச்சுட்டு, கதவுக்கு வெளிய காணாமப் போற தாய்க்கெழவி மாதிரி, உருகுன தங்கத்த ஒண்ணு சேத்து விட்டுட்டு ஆவியாப் போயிருச்சு நவச்சாரம்.

மங்கொகையில உருகுன தங்கத்த மாத்தி ஊத்த ஏனம் வேணுமா இல்லையா? உள்ளங்கை அகலத்துல இருந்த இரும்புப் பாளம் எடுத்தாரு. அதுல ஊத்துனவுடன எட்டுத் தெசையும் ஏந்தெசைதான்னு அங்கிட்டும் இங்கிட்டுமா ஓடுது கழுத. [illegible] தங்கத் தண்ணிய ஒரு [illegible] அணகட்டி நிறுத்த அதுல உமியக் கொட்னாரு.



இதப் பாத்ததும் சுளீர்ன்னு [illegible] மாதிரியிருந்துச்சு சுப்பஞ் செட்டியாருக்கு. ஒன்னியத் தங்கத்துக்கு வாங்குனாக; என்னிய மட்டும் தவிட்டுக்கு வாங்குனாகளான்னு கேக்குறானே மனுசன், என்னமோ தங்கம் பெருசு தவிடு சிறுசுன்னு... இங்க வந்து பாருங்கடா ஏலேய்! இங்க தவிடு தானடா தங்கத்துக்கே அணகட்டுது. ஏத்தமும் இறக்கமும் இடம் பொறுத்துத்தானடா.

தங்கத்துல தத்து வார்த்தம் பாத்ததுல தன்னத்தானே மெச்சிக்கிட்டு உக்காந்திருக்காரு சுப்பஞ்செட்டியாரு.

சூடு ஆறவும் இரும்புப் பாளத்துல ஊத்தி வச்ச தங்கத் தண்ணி செத்தவடத்துல கெட்டியாகிப் போச்சு; அப்பறம் கெட்டி கட்டியாகிப் போச்சு.


இப்பத் தொழில் ரகசியம் சொல்றாரு ஆசாரி.

அய்யா செட்டியாரய்யா! நகையா இருக்கறபோது தங்கம் ஒவ்வொரு அங்குலத்துலயும் வேற வேற தரத்துல இருக்கும்.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு பெற்றிடுவீர் ஆனந்த வாழ்க்கை வாழ்ந்திடுவீர்!




வரைபடம்4 : 2001-2006 இல், இலங்கை இருபாலாரிலும் முன்னணி வகித்த புற்றுநோய்கள்




வரைபடம் 6 : 2006 இல், இலங்கை ஆண்கள் மத்தியில் முன்னணி வகிக்கும் புற்றுநோய்கள்


(7 ஆம் திகதி தொடர்ச்சி)

2001 - 2006 ஆம் ஆண்டிற்குரிய புற்றுநோய்த் தகவற் திரட்டின்படி, மார்பகப் புற்றுநோய், வாய், வாய்க் குழி, உணவுக்குழாய் குறிப்பாகக் களம், கருப்பைக்கழுத்து, நுரையீரல், கேடயப்போலிச் சுரப்பி (தைரொய்டு), பெருங்குடல் மற்றும் மலக்குடல், நிணநீர் முடிச்சுக்களில் ஏற்படும் புற்றுநோய்கள் (லிம்போமா), சூலகம் மற்றும் இரத்தப் புற்றுநோய் (இலுக்கேமியா) ஆகிபடுகின்றது, இதற்குப் பிரதான காரணியாக, பெண்களிலே ஏற்படும் மார்பகப் புற்றுநோயின் உயர் நிகழ்தகவு வீதமாகும் (வரைபடம் : 4). வாய்க்குழி, நுரையீரல், கள உணவுக்குழாய், பெருங்குடலும் மலக்குடலும், நிணநீர் முடிச்சுக்களில் ஏற்படும் லிம்போமா என்னும் இவ்வைந்து புற்றுநோய் களுமே, 2006 ஆம் ஆண்டு, ஆண்களிடத்தில் அதிகளவில் காணப்படும் ஐந்து பொதுவான புற்றுநோய்களாக (வரைபடம்- vz fs ;5 & 6) இருக்கின்றன.


னது, அதிகளவு இறப்பைத் தோற்றுவிக்கும் ஒரு முக்கிய காரணியாக உள்ளது. பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தின்படி, 1985 ஆம் ஆண்டிற்கான புற்றுநோய் இறப்பு விகிதம், 27.9 (100,000 பொது மக்களுக்கு) இலிருந்து, 2003 ஆம் ஆண்டில், 43.6 (100,000 பொது மக்களுக்கு) என்ற நிலையில் அதிகரித்துச் செல்லும் செல்நெறி காணப்படுகின்றது. இதே போல், வைத்தியசாலைகளில், புற்று நோயினால் ஏற்படும் மரணங்களின் விகிதமும்

சவால்களையும் கவனத்திற்கொள்ள வேண்டும். ஆரோக்கியமான உடல எடையை பராமரிக்க உதவும் உடற் செயற்பாடு, உடற் பயிற்சிகள், ஆரோக்கியமான வாழ்க்கை முறைத தேர்வுகளான புகையிலை பிடிக்காதிருத்தல், மது அருந்துவதைத் தவிர்த்தல், சமச்சீரான உணவு உண்ணும் பழக்கங்கள் என்பன, புற்றுநோய் மீண் டும் வராமற் தடுக்க உதவுவதோடு, வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்த உதவுகின்றன என்பதற்கு வளர்ந்துவரும் சான்

பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம், தெல்லிப்பழை புற்றுநோய்ச சிகிச்சைத் தாபனங்களுடன் இணைந்து தேசிய புற்றுநோய்க் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் அனுசரணையுடன் நடத்தும் இந்த புற்றுநோய் நடை பவனியின் நோக்கம், மக்களிடையே புற்றுநோய் பற்றிய விழிப் புணர்வை ஏற்படுத்துவதாகும். ஏனெனில் ஏற்படும் புற்றுநோய்களில் மூன்றிலொரு வீதமான புற்றுநோயானது மிக ஆரம்பத்




வரைபடம் 5 : 2001-2006 இல், இலங்கை ஆண்கள் மத்தியில் முன்னணி வகிக்கும் புற்றுநோய்கள்




வரைபடம்7: 2001-2006 இல் இலங்கைப் பெண்கள் மத்தியில் முன்னணி வகித்த புற்றுநோய்கள்.

யனவே இலங்கையில் காணப்படும் பத்து பொதுவான புற்றுநோய்களாகும் (படம் 4 ). நோய்த் தொற்று மற்றும் தாழ்ந்த சமூகப் பொருளாதார நிலைகளோடு தொடர்புடைய புற்றுநோய்கள் விகிதம் வீழ்ச்சி அடைதல் அல்லது நிலையான நிலையில் பேணப்படும் போது, மேலைத்தேய வாழ்க்கை முறைகளோடு தொடர்புடைய புற்றுநோய்களான, நுரையீரல், மார்பகம், குடல், முன்னிற்கும் சுரப்பி (புரோஸ்டேட்) போன்றவற்றில் ஏற்படும் புற்றுநோய்கள் அதிகரிப்பதன் மூலம் ஈடு செய்யப்படுகின்றன.

உயர் புற்றுநோய் நிகழ்வு விகிதம், பெரும்பாலும் ஆண்களிலும் ( 62.7/100,000 சனத்தொகை) பார்க்கப் பெண்களிலேயே (79.0/ 100,000 சனத்தொகை ) காணப் (வரைபடம்: 7 & 8) இலங்கையில், மார் பக, கருப்பைக் கழுத்து, சூலக, கேடயப்போலிச் சுரப்பி மற்றும் களப் புற்றுநோய்கள் ஆகியன, 2006 ஆம் ஆண்டில், பெண்கள் மத்தியில் காணப்பட்ட ஐந்து பொதுவான புற்றுநோய்களாகும் ( புற்றுநோய் நிகழ்வு தரவு - 2006 ஆம் ஆண்டு - இலங்கை ).

குழந்தைப் பராய வயதினரில் (0 -14 வயது ஆண்டுகளில்), 385 புதிய புற்றுநோய் நோயாளிகள், 2006 இல் கண்டறியப்பட்டுள்ளனர். இரத்தப் புற்றுநோய்கள் (Leukaemia), நிணநீர்த் தொகுதிப் புற்றுநோய்கள் (Lymphoma), மூளையில் ஏற்படும் புற்றுநோய்க் கட்டிகள் என்பன இருபாலாருக்கும் பொதுவாக புற்றுநோய்களாக இருந்தன.

இலங்கையிலே, புற்று நோயாஅதிகரிப்பதோடு, வைத்தியசாலைகளில் மரணத்தை ஏற்படுத்தும் நோய்களில், புற்றுநோய் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. 2007 ஆம் ஆண்டின் வருடாந்த சுகாதார. தரவுக் காட்டியின்படி, இலங்கையில், 3498 இறப்புக்கள் (விகிதாசார இறப்பு விகிதம்=10.1, இறப்பு விகிதம்= 17.5/100,000 பொது மக்களுக்கு) புற்றுநோயினால் ஏற்பட்டுள்ளது.


உலகளாவிய ரீதியில், குறிப்பாக உயர் மற்றும் உயர் நடுத்தர வருமானமுள்ள நாடுகளில், புற்று நோய் நோயாளிகள், நோய் மீண்டு உயிர் வாழும் நிகழ்தகவு, குறிப்பி டத்தக்க அளவில் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதற்குக் காரணங்கள், ஒருங்கிணைக்கப்பட்ட பொதுச் சுகாதார சேவைகள், ஒருங்கிணைகபட்ட புற்றுநோயை மிக ஆரம்பத்திலேயே கண்டறிதல் முறைகள், சிகிச்சையளித்தலில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் என்பனவாம். அதே நேரம், புற்று நோயிலிருந்து பிழைத்தவர்கள் அன்றாடம் எதிர் கொள்ளும் உடல், உணர்வுபூர்வ, மனத்தள வி[illegible]

றுகள் கட்டியங் கூறுகின்றன. பொதுச் சுகாதாரத் துறையால் எடுக்கப்படும் முன்னெடுப்புக்கள், புற்றுநோயோடு வாழ்பவர்கள், புற்றுநோய்க்கப்பால் வாழ்பவர்களுக்குரிய பராமரிப்பு மற்றும் கவனிப்புக்கள், ஆதரவு என்பன அவர்கள் முடிந்தவரை ஆரோக்கியமான, இயல்பு நிலை வாழ்க்கையை வாழச் செய்வதை உறுதி செய்ய மிக அவசியமான தாகும்.


புற்றுநோய் நடை பவனியின் பிரதான நோக்கமானது புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்காகும். வடமாகாண சுகாதார அமைச்சு, யாழ்.பிராந்திய சுகாதார சேவைப்

திலேயே கண்டுபிடிக்கப்படுமாயின் சிகிச்சையின் பின்னர் பூரணமாகக் குணமாக்கமுடியும். மற்றைய மூன்றிலொரு வீதமான புற்றுநோய், ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கப்படு மாயின் குணமாக்க முடிவதுடன் நோயின்றி வாழ முடியும். மிகுதி மூன்றிலொரு வீதமான புற்றுநோய் நோயாளர்கள், நோய்த் தணிப்பு சிகிச்சை மூலம் தரமாக வாழ்க்கையை வாழமுடியும். புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வைப் பெற்றி டுவீர்! ஆனந்த வாழ்க்கை வாழ்ந்திடுவீர்!

(முற்றும்)




வரைபடம் 8 : 2006 இல், இலங்கைப் பெண்கள் மத்தியில் முன்னணி வகித்த புற்றுநோய்கள்



வைத்திய நிபுணர்
**கவிதா இந்திரநாத்**
விசேட புற்றுநோய் வைத்திய நிபுணர், பாதை புற்று நோய் வைத்தியசாலை தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாதுகாப்பிற்கு மைத்திரியால் ஆபத்து

(கொழும்பு)

**நடைமுறையில் உள்ள தேசிய பாதுகாப்பிற்கு மைத்திரி அரசால் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

தனமல்வில பிரதேச விஹாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த அரசாங்கம் ஆட்சியிலிருந்த போது இவ்வாறு அச்சுறுத்தல்கள் காணப்படவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் கடந்த அரசாங்கம் தேசிய பாதுகாப்பிற்கு முதலிடம் வழங்கியே தனது அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொண்டது என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-5)

# அநுர எம்.பி.ஜேர்மனில்

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமாரதிஸாநாயக்க ஜேர்மனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க திடீரென கட்சியை விட்டு விலகி புதிய கட்சியொன்றை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளார்.

இந்நிலையில் ஊடகங்கள் தற்போதைய தலைவர் அநுரகுமார திஸாநாயக்க விடம் கேள்வியெழுப்ப முயற்சித்துள்ளன.

இது தொடர்பாக கட்சி பிரசார செயலாளர் விஜித ஹேரத் கட்சி தலைவர் நாட்டில் இல்லை என ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் ஜேர்மனியில் கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்பதாகவும் அதற்காக கடந்த 14 ஆம் திகதி நாட்டை விட்டு சென்றுள்ளதாகவும் விரைவில் மீண்டும் நாட்டுக்கு வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜேர்மன், பெல்ஜியம், நெதர்லாந்து போன்ற நாடுகளில் அநுரகுமார திஸாநாயக்க கருத்தரங்குகளில் பங்கேற்க உள்ளதாக கட்சி பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (இ-5)

# முதலாம் தரத்திற்கான மாணவர் அனுமதி முறைமையில் மாற்றம்

நாடளாவிய ரீதியில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கான மாணவர் அனுமதி முறையில் மாற்றம் கொண்டு வரப்பட உள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாடளாவிய ரீதியில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கான மாணவர் அனுமதி தொடர்பில் தற்போது அமுலில் உள்ள நடைமுறைகளில் பாரியளவில் மாற்றங்கள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அந்தவகையில் பாடசாலையை அண்மித்த பகுதிகளில் வதிவோருக்கு விசேட வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் புள்ளி வழங்கும் நடவடிக்கைகளில் மாற்றம் செய்யப்பட உள்ளதோடு இதற்கு மேலதிகமாக தற்போது நடைமுறையில் உள்ள புள்ளி வழங்கும் முறைமையில் மாற்றம் செய்யப்பட உள்ளது.

தரம் ஒன்றுக்கான மாணவர் அனுமதி தொடர்பிலான விண்ணப்பங்கள் ஜூன் மாதம் கோரப்படுகின்ற போதிலும், புதிய முறைமையின் கீழ் மே மாதமே விண்ணப்பிக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது. அதனடிப்படையில் இவற்றுக்கான விண்ணப்பங்கள் பரிசீலனை, நேர்முகத் தேர்வு, மேன்முறையீடு, பெயர்ப்பட்டியல் வெளியீடு போன்ற அனைத்து நடவடிக்கைகளும் அதே ஆண்டில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

முதலாம்தவணையிலேயே சகல மாணவர்களையும் தரம் ஒன்றில் இணைத்துக் கொள்ளும் நோக்கில் இந்த மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாக கல்வி அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 40 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 40 | 40 | 40 |
| தக்காளி | 40 | 40 | 60 | 40 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 40 | 40 |
| கோவா | 40 | 40 | 50 | 40 | 30 |
| கரட் | 120 | 100 | 120 | 120 | 100 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 30 | 50 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 70 | 60 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 60 | 80 | 80-100 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 120 | 110 | 80 | 100-120 | 90 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 50 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 40 | 60 | 80 | -- | 80 |
| பயற்றங்காய் | 100 | 70 | 60 | 60 | 70 |
| லீக்ஸ் | 200 | 100 | 200 | 240 | 140 |
| பீற்றூட் | 60 | -- | 60 | 60 | 40 |
| கறிமிளகாய் | 120 | 80 | 80 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 600 | 450-500 | 450 |
| போஞ்சி | 200 | 100 | 150 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 30 | -- | -- | -- |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 160 | 120 | 120 | 140 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 40 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 150 | 100 | 100 | -- | 120 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | -- | 30 | 60 | 30 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 347

Search for people, places and things Nagendram Home

மிது மிதுலா




வேந்தன் பெருமாள்




கமல் நந்தினி




ரவி ராஜா




லக்சி சுலக்சி



சந்திரா தங்கராசா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.

அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்ப்பு தந்த அதிர்ச்சி!

## ஜெ.வின் அடுத்த ஆபரேஷன் வெற்றி!



...எப்படிப் பார்த்தாலும் நமது நீதி வழங்கும் நடைமுறையை சரிப்படுத்த தவிரமான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்பதை குற்ற வழக்கு நடத்தப்பட்ட விதம் தெளிவாக உணர்த்துகிறது. எனவே பவானிசிங்கை நீக்க வேண்டும்.

அப்பீல் வழக்கை புதிதாக மறுபடியும் நடத்த வேண்டும் என நீதிபதி லோகூர் தனது தீர்ப்பை படித்துக்கொண்டிருக்கும் போதே... கோர்ட்டிலிருந்த மீடியாவினர் வெளியே ஓட ஆரம்பித்துவிட்டார்கள். உடனே 'பவானிசிங் நீக்கம், ஜெ.வுக்கு நீதிபதி கண்டனம' என கோர்ட் வாசலில் நின்று பேச ஆரம்பித்தனர்.

லோகூர் படித்து முடித்தவுடன் நீதியரசர் பானுமதி தனது தீர்ப்பை படிக்க ஆரம்பித்தார். 'பவானி சிங் சுப்ரீம் கோர்ட்டால் ஜெ.வுக்கு எதிரான சொத்துக் குவிப்பு வழக்கில் வாதாட, நியமிக்கப்பட்டார். ஒரு வழக்கில் சிறப்பு அரசு வழக்கறிஞராக நியமிக்கப்பட்டவர் உயர்நீதிமன்றத்தில் ஆஜராவதில் எந்தத் தவறும் இல்லை. சுப்ரீம் கோர்ட்தான் அப்பீல் வழக்கை வேகமாக முடிக்கச் சொல்லி காலக்கெடு விதித்தது. அதன்படி பவானிசிங்கின் வாதத்துடன் நீதிபதி குமாரசாமி தீர்ப்பெழுத தயாராகிவிட்டார். இந்த நிலையில் அதில் தலையிடுவது தவறு என்கிற வாதத்தை நான் ஏற்கிறேன். கிரிமினல் நடைமுறைச் சட்டம் 301 இன்படி பவானிசிங் நியமனத்தில் எந்தத் தவறும் இல்லை. அவர் எந்த நீதிமன்றத்திலும் வாதாடலாம்' என்று தனது தீர்ப்பை வாசித்து முடித்தார்.

பானுமதி, 'லோகூர் அளிதத தீர்ப்புக்கு நேரெதிரான ஒரு தீர்ப்பை வழங்குகிறார்' என லேட்டாகத் தெரிந்து கொண்ட மீடியாக்களை சேர்ந்தவர்கள், நீதிமன்றத்துக்கு உள்ளே பாய்ந்து வந்தார்கள். மறுபடியும் இரண்டு நீதிபதிகள், இரண்டு தீர்ப்பு. வழக்கு, மூன்று நீதிபதிகள் அடங்கிய அமர்வுக்கு மாற்றம் என டி.வி.க்களில் ப்ளாஷ் செய்தியாக மாறியது.

இரண்டு நீதிபதிகளும் கருத்தொற்றுமையுடன், 'பேராசிரியர் அன்பழகன, வழக்கில் தொடர்பில்லாத மூன்றாவது நபர். அவர் வழக்கு விசாரணை தவறாகப் போகும்போது தலையிடலாம். ஆனால் அரசு வழக்கறிஞர் போல எழுத்துபூர்வமாக தனது வாதத்தை சமர்ப்பிக்க அனுமதிக்க சட்டத்தில் இடமில்லை' என சொன்னார்கள். இதனால் பவானிசிங்கின் நியமனம் பற்றி அன்பழகன் எழுப்பிய கேள்வி மட்டும் மூன்று நீதிபதிகள் அடங்கிய பெஞ்ச்சுக்கு விசாரணைக்கு அனுப்பப்படுகிறது என்கிறார் வெங்கடேசன்.

### 21 ஆம தகதி கூடும் மூன்று நீதிபதிகள் பெஞ்ச்!

இந்த வழக்கு இரண்டு நீதிபதிகள் அடங்கிய பெஞ்சிலிருந்து மூன்று நீதிபதிகள் அடங்கிய பெஞ்சிற்கு அனுப்பப்பட்டுளளது. சுப்ரீம் கோர்ட்டில் இதுபோலவே மூன்று நீதிபதிகள் அடங்கிய பெஞ்சிற்கு அனுப்பப்பட்ட வழக்குகள் நூற்றுக்கணக்கில் விசாரணைக்காக காத்திருக்கிறது. இன்னமும் விசாரணை முடிந்து தீர்ப்பு வெளியிடப்படாத அந்த வழக்குகளின் வரிசையில் இந்த வழக்கும் சேர்ந்துவிடுமா? அதனால் மிகப் பெரிய காலதாமதத்தை இந்த வழக்கும் சந்திக்குமா? என சுப்ரீம் கோர்ட் வழக்கறிஞர்கள் வட்டாரத்தில் கேட்டோம்.

சுப்ரீம் கோர்ட்டின் தலைமை நீதிபதியாக இருப்பவருக்கு சுப்ரீம் அதிகாரம் இருக்கிறது. தற்போதைய தலைமை நீதிபதியான தத்து ஜெ.வுக்கு எதிர்தரப்பான கர்நாடக அரசையோ, லஞ்ச ஒழிப்புத் துறையையோ கேட்காமல் ஜெ.வுக்கு ஜாமீன் வழங்கினார். அந்த ஜாமீன் தொடர்பான வழக்கில் ஜெ. தரப்பு கேட்காமலேயே அப்பீல் வழக்கை 3 மாதத்திற்குள் முடிக்க வேண்டுமென உத்தரவிட்டார். மறுபடியும் ஜெ.வின் ஜாமீன் தொடர்பான வழக்கு 17 ஆம் தகதி தலைமை நீதிபதி தத்துவின் முன் வருகிறது. ஜாமீன் வழங்கியபோது விதித்த நிபந்தனைகள் எதையும் ஜெ. மீளவில்லை. எனவே அவரது ஜாமீனை நீட்டித்து வழங்க வேண்டும் என கோரிக்கை வைக்க போகிறார்கள். அத்துடன் மூன்று நீதிபதிகள் அடங்கிய பெஞ்சுக்கு அனுப்பப்பட்ட இந்த வழக்கை விரைவாக முடிப்பதற்குரிய ஒரு கால அட்டவணையை தரும்படியும் கேட்கலாம். ஜெ.வின கோரிக்கையை தத்து ஏற்கும் பட்சத்தில் அதிகபட்சம் 3 வாரத்திற்குள் 3 நீதிபதிகள் அடங்கிய பெஞ்ச் தீர்ப்பளிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது' என்றார்கள்.

இந்த பரபரப்பான சூழலில், வியாழனன்று சுப்ரீம் கோர்ட் டெபுடி ரிஜிஸ்ட்ரார் வெளியிட்ட நோட்டீஸில், பவானிசிங் நியமனம் தொடர்பான வழக்கை விசாரிக்க மூன்று நீதிபதிகள் பெஞ்ச் ஏப்ரல் 21 ஆம தகதி கூடும் என லிஸ்ட் செய்யப்பட்டிருந்தது. சுப்ரீம் கோர் ட்டில் விரைந்து தீர்ப்பு பெற வேண்டும் என்கிற ஜெ. தரப்பின் ஆபரேஷன் இதில் வெற்றி பெற்றது. வழக்கை ஜெ. இழுத்தடிக்கிறார் என்று தி.மு.க தரப்பு குற்றஞ்சாட்டுவதால், இந்த மூவர் பெஞ்ச் விசாரணையன் வேகம் குறித்து அது கேள்வி எழுப்ப முடியாத நிலையில் உள்ளது. அதேநேரத்தில், மூவர் பெஞ்ச் வசாரணைக்காக நிலுவையில் உள்ள வழக்குகளில் தொடர்புடையவர்கள் இது குறித்து கேள்வி எழுப்பி பெட்டிஷன் போட்டால் அது தேசிய அளவில விவாதத்திற்குரியதாகும். எனினும், சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி தத்துவின் அதிகாரத்திற்குட்பட்டதாக இது உள்ளது.

### கர்நாடக கோர்ட் நிலைமை!

சுப்ரீம் கோர்ட்டில் பவானி சிங்கை அரசு வழக்கறிஞராக நியமித்தது செல்லும் என தீர்ப்பு வரும். அப்படி ஒரு தீர்ப்பு வந்தால் அந்த பவானிசிங் எழுப்பிய சேம் சைடு கோல் வாதங்களை அடிப்படையாக வைத்து தீர்ப்பு எழுதும் குமாரசாமி தங்களுக்கு சாதகமாக தீர்ப்பை தருவார் என்பதுதான் ஜெ. போட்ட கணக்கு. இதுபோல ஒரு தீர்ப்பை குமாரசாமி தருவதற்கு தடையாக இருப்பார் என்று கணக்கு போட்டுதான் கர்நாடக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி வகேலாவை மாற்றி, சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி தத்துவுக்கு நெருக்கமான மஞ்சுநாதாவை தலைமை நீதிபதி பொறுப்புக்கு கொண்டு வர பெரும்முயற்சி நடந்தது. வகேலா 'நான் இரண்டு மாதம் கழித்துதான போவேன்' என அந்த திட்டத்தை முறியடித்தார்.

வருகிற மே 15 இற்குள் மூன்று நீதிபதிகள் அடங்கிய பெஞ்ச் தீர்ப்பளிக்குமானால் ஜூலை மாதம் 15 ஆம் தகதி வரை தலைமை நீதிபதி பதவியில் இருக்கும் வகேலாதான் அனைத்தையும் முடிவு செய்வார். சுப்ரீம் கோர்ட் பவானிசிங் நியமனம் செல்லாது என சொன்னாலும், புதிய அரசு வழக்கறிஞர் யார் என்பதை வகேலா தான் முடிவு செய்வார். இதற்கிடையே கோடை விடுமுறை கர்நாடக உயர்நீதிமன்றத்திற்கு ஒரு மாத காலம் வருகிறது. ஆகஸ்ட் மாதம ஓய்வு பெறப் போகும் குமாரசாமி இந்த குறுகிய கால இடைவெளியில் சுப்ரீம் கோர்ட் கொடுக்கும் தீர்ப்பை எப்படி சமாளிப்பார் எனத் தெரியவில்லை' என்று சொல்லும் கர்நாடக வழக்கறிஞர்கள், 'அதைப் பற்றியெல்லாம் குமாரசாமி கவலைப்பட மாட்டார். ஏற்கனவே சுப்ரீம் கோர்ட் கொடுத்த 3 மாத காலக்கெடு ஏப்ரல் 15 ஆம் தகதி முடிவடைந்த உடன்... 'எனக்கு தீர்ப்பளிக்க இன்னும் 15 நாட்கள் நேரம் வேண்டும்' என சுப்ரீம் கோர்ட்டுக்கே கடிதம் எழுதி நேரம் கேட்ட நீதிபதி குமாரசாமி, இந்த வழக்கை முடிக்க தேவையான நேரத்தை சுப்ரீம் கோர்ட்டை கேட்டே பெறுவார்' என்கிறார்கள்.

### அடுத்தது என்ன?


நாங்கள் மூன்று நீதிபதிகள் அடங்கிய பெஞ்சில் நிச்சயம் வெற்றி பெறுவோம்' என்கிறார் நம்மிடம் நம்பிக்கையுடன் அ.தி.மு.க. வழக்கறிஞர் குமார். சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெ. இதுவரை நடத்திய நாடகத்தை சுப்ரீம் கோர்ட் புரிந்து கொண்டுள்ளது. இது எங்களுக்கு கிடைத்த வெற்றி' என்கிறார் தி.மு.க. வழக்கறிஞர் சண்முகசுந்தரம்.

எப்பொழுதும் பரபரப்புக்கும் திருப்பங்களுக்கும் பஞ்சமில்லாத சொத்துக்குவிப்பு வழக்கில் அடுத்தது என்னவென ஆவலுடன் ஒட்டுமொத்த தமிழகமும் காத்துக் கிடக்கிறது.

-யூனியர் விகடன்-


தலைமை நீதிபதி தத்து



நீதிபதி குமாரசாமி


நீதியரசர் லோகூர்


நீதியரசர் பானுமதி


தி.மு.க வழக்கறிஞர் சண்முகசுந்தரம்


பவானிசிங்


அ.தி.மு.க வழக்கறிஞர் குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமவன்சவின் பதவி விலகல் இழப்பாக கருதப்படவேண்டும்

## ஜோன் செனவிரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க பதவி விலகியமை பாரிய இழப்பாகவே கருதப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.



சோமவன்ச கட்சியை விட்டு விலகியமை கட்சிக்கு பெரும் இழப்பாகும்.


சோமவன்ச அமரசிங்க ஓர் அரசியல் பாத்திரமாகும். அவரால் அனைத்து தரப்பினரையும இணைக்கும் வல்லமை காணப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் எதிர்காலப் பயணத்திற்கு சோமவன்ச மிகப்பெரிய பலமாக அமைந்திருந்தார்.

சோமவன்ச அமரசிங்க தனிப்பட்ட காரணங்களுக்காக கட்சியை விட்டு விலகியிருப்பார் என கருதுவதாக ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார். (இ-5)

# ஊழல், மோசடிகளில் நான் ஈடுபடவில்லை

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு



ஊழல் மோசடிகள் எதிலும் தான் ஈடுபடவில்லை என முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியாக எடுக்கப்பட்ட சில தீர்மானங்கள் பிழையாக இருக்கக் கூடுமே தவிர, ஊழல் மோசடிகளில் ஈடுபடவில்லை.

தனிப்பட்ட காரணமொன்றுக்காக நான் அமெரிக்காவிற்கு சென்றிருந்தேன்.

இன்று பிற்பகல் ஒரு மணியளவில் நான் இலங்கைக்கு நாடு திரும்புவேன்.

இரகசியமான முறையில் நான் நாடு திரும்பவில்லை, நாளை நாடு திரும்பியவுடன் நாடாளுமன்ற அமர்வுகளிலும் பங்கேற்க உள்ளேன் என பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பசில் ராஜபக்ஷவை மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க வரவேற்க மாட்டார் என கட்சி உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5)

## தனித்து நிற்கும் சோமவன்சவுடன் செல்ல மாட்டோம்

மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து அண்மையில் விலகிய சோமவனச அமரசிங்கவுடன் நாங்கள் செல்ல மாட்டோம் என கட்சி யின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவரும் சர்வதேச விவகாரங்களுக்கான செயலாளருமான சோமவன்ச அமரசிங்க, தனியாளாகவே கட்சியிலிருந்து வல்கிச் சென்றார். அவருடன் தானோ அல்லது வேறு எவருமோ செல்லப் போவதில்லை என அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் சோமவன்ச அமரசிங்கவை மீண்டும் கட்சியில் இணைத்துக்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக தெரிவித்த சில்வா,

சோமவன்சவுடன் சிலர் கட்சியிலிருந்து விலகிச் சென்றதாக செய்தி வெளியிட்டுள்ள ஊடகங்களுக்கு எதிராக எதிர்வரும் நாட்களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். இதேவேளை தான் மீண்டும் மக்கள் விடுதலை முன்னணியில் சேர முடியாது என்றும் வாய்ப்பு கிடைத்தால் மற்றொரு கட்சியை அமைக்கவுள்ளதாகவும் சோமவன்ச அமரசிங்க அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ராஜகிரிய பீகொக் மாளிகைக்கு மகிந்த ராஜபக்ஷ செல்லமாட்டார்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ராஜகிரியவில் அமைந்துள்ள பீகொக் மாளிகையில் குடியேற மாட்டார் என கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜோதிடர்களின் ஆலோசனைக்கு அமைய வீட்டின் எதிரில் அமைக்கப்பட்டிருந்த நீச்சல் தடாகம் கடல் மணலால் நிரப்பப்பட்டது.

வீட்டின் கூரைகளிலும் மாற்றங்கள் செய்யப்பட்டன. வீட்டிற்கு ஆசி வேண்டி பல்வேறு பூஜை வழிபாடுகளும் நடத்தப்பட்டுள்ளன.

விரைவில் இன்று இந்த வீட்டில் குடியேறுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டிருந்தார்.

வாய்ப்பேச்சு அளவில் வீட்டில் குடியமர்த்தாமல் ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட வீட்டின் உரிமையாளர் ஏ.எஸ்.பி. லியனகே முன்வைத்த யோசனைக்கு இதுவரையில் மகிந்த உரிய பதிலளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஏ.எஸ்.பி. லியனகேவிடம் புலனாய்வுப் பிரிவினர் அண்மையில் விசாரணை நடத்தியுள்ளனர்.

இந்த வீடு கிடைக்காவிட்டால் முன்னாள் ஜனாதிபதி நாரஹேன்பிட்டி அபயராமயவை பயன்படுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பீகொக் மாளிகையில் குடியேறுவது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதியோ, ஏ.எஸ்.பி. லியனகேயோ எவ்வித கருத்துக்களையும் உத்தியோக பூர்வமாக வெளியிடவில்லை என மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# புத்தாண்டு வாரத்தில் 27 பேர் படுகொலை!

புத்தாண்டு வாரத்தில் சுமார் 27 படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. பொலிஸ் தலைமையகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டில் புத்தாண்டு வாரத்தில் 14 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டு புத்தாண்டு காலத்தில் கொலைச் சம்பவங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

கம்பஹா, பொலநறுவை, அப்புத்தளை, கடுபாத்த, சம்மாந்துறை, மட்டக்களப்பு, கேகாலை, பதியதலாவ, உடபுஸ்ஸலாவ, குருவிட்ட ஆகிய பகுதிகளில் கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## வெற்றிக்கு வித்தாகும் தலைமைப் பண்பு

தலைமைப் பண்பு என்பது வெறும் படிப்பால் மட்டும் வந்து விடக் கூடியதல்ல. அதேசமயம் திறமையான தலைமைக்கு கல்வி மிக அவசியம் என்பதும் உண்மை.

**என்னால் என்ன செய்ய முடியும்**

எத்தகைய பிரச்சினைகள் தலைதூக்கினாலும் இடையறாது சோதனைகள் வந்தாலும் மனம் தளராது முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் பண்புதான் தலைமைப் பண்பில் சிறந்ததொரு தலைவனுக்கு அவசியம் இருக்க வேண்டும் என்கிறார் ரிச்சர்ட் எம்.தேவோஸ்.

இருளைப் பழிப்பது நமது நோக்கமாக இருக்கக்கூடும். ஆனால் அது சரியான மனம்பான்மையல்ல. அங்கே விளக்கேற்றுவதுதான் நமது முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்.

சதா மற்றவரைப் பற்றிக் குறை கூறுதலும் அல்லது பெரும் உதவிகளை மற்றவர்களுக்குத்தான்தான் செய்து கொண்டிருப்பதாகக் கனவு காண்பதும் வீண்.

**மற்றவரை மகிழ்விக்க வேண்டுமானால் அவர்களுக்குச்**
**சிறுசிறு உதவிகளைச் செய்தாலேபோதும்**
**பிரதிபலன் பாராத இத்தகைய செயல்களே**
**மற்றவர்களுக்கு நம்மீது நம்பிக்கையை உருவாக்கும்.**

***நம்பிக்கை ஊட்ட வேண்டும்***

சிறந்த தலைவர்கள் இதைத்தான் செய்கிறார்கள். தன்னை சார்ந்தவர்களிடம் நிறைய தன்னம்பிக்கையை ஊட்டுகிறார்கள். இவ்வாறு தன்னம்பிக்கை கொண்டவர்களின் சாதனையை அலசிப் பார்த்தால் அசந்து போவோம். தலைமைப் பண்பின் ரகசியங்கள் இதைத்தான் கூறுகின்றன.

வெற்றிக் கனவுகள், கடினமாக உழைக்கும் ஆர்வம், நடைமுறைத் திறமைகள், வாய்ப்புகளை அடையாளம் கண்டு கொள்வது, மற்றவர்களை புரிந்து கொள்வது, உற்சாகப்படுத்துவது, வசப்படுத்துவதுபோல் பேசுவது, சரியான முடிவுகள் எடுப்பது, அடுத்தவரின் மன ஓட்டங்களை அறிவது, சங்கடப்படுத்தும் சூழ்நிலைகளையும் சந்தித்தல், திறந்த மனதுடன் இருத்தல், மற்றவர்களுக்கு தக்கவாறு தன்னை மாற்றிக் கொள்ளுதல் (தேவைப்படும் போது) இவை முக்கியம்.

பார்சூன் என்ற அமெரிக்க வியாபாரப் பத்திரிகை உயர் பதவிகளை வகிக்கும் 75 பேரை பேட்டிகண்டு அவர்களிடம் குடிகொண்டுள்ள 15 முக்கியமான பண்புகளைக் கண்டறிந்து வெளியிட்டுள்ளது.

தீர்ப்பளித்தல், முன்முயற்சி, நம்பகத்தன்மை, தொலைநோக்குப் பார்வை, சக்தி, வேலை வாங்குதல், இனிமையாகப் பழகுதல், சரியான நேரத்தில் முடிவெடுத்தல், பதற்றப்படாத உணர்ச்சி, சார்ந்து இருத்தல், நேர்மையாக இருத்தல், வெற்றிக்கனவுகள், அர்ப்பணம், நடுநிலைமை, ஒத்துழைத்தல்.

நண்பர்களுக்கு மட்டுமல்ல எதிரிகளுக்கும் கருணை காட்டுபவன்தான் உண்மையான தலைவன். தனக்குரியவர்களை காப்பாற்றுவது தலைவனின் பெருந்தன்மையைக் காட்டுகிறது. ஆனால் தன்னைப் பிடிக்காதவர்களுக்கும் பரிவு காட்டுவது என்பதுதான் தலைமைப்பண்பின் உச்சப் பண்பு.

ஒரு குட்டிக்கதை. ஒரு தீவில் ஒரு வழக்கம் இருந்தது. அந்தத் தீவிலுள்ள யார் வேண்டுமானாலும் அரசர் ஆகலாம். ஆனால் ஐந்து ஆண்டுகள் மட்டுமே அவர்கள் ஆட்சி செய்ய முடியும். பிறகு அருகில் உள்ள இன்னொரு தீவில் அவரைத் தூக்கி எறிந்து விடுவார்கள். அங்குள்ள கொடிய விலங்குகள் அவரைக் கொன்று தின்றுவிடும். பல ஆண்டுகளாக இந்தப் பழக்கம் நடைமுறையில் இருந்தது. இந்தமுறை ஓர் இளைஞன் அந்தத் தீவின் அரசனானான். சிறப்பாக ஆட்சி செய்தான். ஐந்தாண்டுகள் முடிந்தன. அவனை அடுத்த தீவில் கொண்டு தள்ளிவிட படகில் அழைத்துப் போனார்கள்.

ஆனால் என்ன ஆச்சரியம்... அந்தத் தீவில் இருந்த மனிதர்கள் பலர் அவனை அன்புடன் வரவேற்றார்கள். உண்மையில் என்ன நடந்தது தெரியுமா? இந்தத் தீவை ஆண்டு கொண்டிருந்தபோதே மறைமுகமாக சில படைவீரர்களை அங்கே அனுப்பி அங்கிருந்த மிருகங்களை கொன்றிருந்தான் அவன். அத்துடன் அங்கிருந்த காடுகளையும் செம்மைப்படுத்தியிருந்தான். அங்கு புதுக்குடியிருப்புகளை உருவாக்கியிருந்தான். இங்கிருந்து குடும்பங்களை அங்கு குடிபெயரச் செய்திருந்தான். இப்போது இன்னொரு நாடு அங்கே உருவாகி விட்டது. இப்போது அந்த இரண்டு நாடுகளுக்கும் இவனே தலைவன்.

இதனைக் குறியீடாக வைத்துக்கொண்டு நாமும் நமது குறிக்கோளை அடையலாம், சாதனை படைக்கலாம்.


*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மன்மத" வருட இராசி பலன்கள்

# ஏழரைச் சனியிலும் இனிய பலன் நடக்கும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**ஏழரைச் சனியிலும் இனிய பலன் நடக்கும்!**

**வாய்ப்புகளை நல்ல விதமாகப் பயன்படுத்திக் கொண்டால் வளர்ச்சி வரும் என்று சொல்லும் தனுசு இராசி நேயர்களே!**

'ஜய' வருடம் முடிந்து 'மன்மத' வருடம் தொடங்கியிருக்கிறது. ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் குரு 8 இல் சஞ்சரிக்கிறார். அஷ்டமத்தில் ராசிநாதன் சஞ்சரிக்கும் பொழுது, இடமாற்றம், ஊர் மாற்றம், உத்தியோக மாற்றம், வாகன மாற்றம், இலாகா மாற்றம், பதவி மாற்றம் போன்ற மாற்றங்களில் உங்கள் திசாபுத்திக்கேற்ற மாற்றங்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் இருக்கும் ஒரு சிலருக்கு நீண்ட தூரங்களுக்கு மாறுதல் வந்துவிடும்.

வருடத் தொடக்கத்தில் குரு வக்ரம் பெற்றாலும் வருடம் தொடங்கிய இரண்டு நாளில் வக்ர நிவர்த்தியாகி விடுகிறார். 4 இற்கு அதிபதி 8 இல் பலம் பெறும்பொழுது இடம், பூமி விற்பனை உருவாகும்.

சுக்ர பலம் 6 இல் இருப்பதால் பெண் வழிப்பிரச்சினைகள் தலை தூக்கும். உங்கள் ராசிக்கு தனாதிபதியாக விளங்கும் சனி வக்ரம் என்பதால் பண நெருக்கடி ஏற்படாது.

ஜூலை 5 ஆம் திகதி குருவால் உங்கள் ராசி பார்க்கப்படுகிறது. எனவே கொள்கைப் பிடிப்போடு செயறபடுவதற்கு வழி கிடைக்கும். தூரதேசத்திலிருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக் கொள்வதா? வேண்டாமா? என்ற சிந்தனை மேலோங்கும்.

புத்திர ஸ்தானத்தில் விரயாதிபதி செவ்வாய் இருப்பதால் பிள்ளைகளால் ஏற்படும் விரயங்கள் தவிர்க்க முடியாததாக இருக்கும். புத்திர ஸ்தானம் பலமிழந்திருப்பவர்களுக்கு பிள்ளைகளால் தொல்லை ஏற்படும். அவர்கள் மனம்போல் எடுத்த முடிவை மறுத்துச் சொல்ல முடியாமல் நீங்கள் தவிப்பீர்கள். குணம் மாறிவிட்டதே என்று நீங்கள் கொந்தளிக்காமல் கொள்கைப் பிடிப்பைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்ள வேண்டிய சூழ்நிலை இப்பொழுது உருவாகும். ராகு பலத்தால் தொழில் முன்னேற்றம் உண்டு. பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும்கூட வந்துசேரும்.

**குரு பார்வை கொடுக்கும் யோகம்!**

நவக்கிரகங்களில் நல்ல கிரகம் என்று போற்றப்படும் குருபகவான் வருடத் தொடக்கத்தில் அஷ்டமத்தில் சஞ்சரித்தாலும் அதன் பார்வை 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிகிறது. சில உலோகங்களில் காந்த சக்தி இருப்பது போல குரு என்ற கிரகத்திற்கு காந்த சக்தி உள்ளது. எனவேதான் எதிரிகள் ஸ்தானத்தை குரு பார்ப்பதால் எதிரிகள்கூட சாந்த குணம் பெற்று சரணடைந்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட குரு பெயர்ச்சியாகும் பொழுதே ஆலயங்கள் தோறும் விழா எடுப்பார்கள். அந்த விழாவில் கலந்து கொண்டு குருவருளைப் பெற்றவர்கள் கூடியவரை முன்னேற்றம் காண்பார்கள்.

குரு பார்வையால் குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். கல்யாண வாய்ப்பு கை கூடும். வீடு, இடம் வாங்குவது சம்பந்தமாக எடுத்த முடிவில் வெற்றி கிடைக்கும். காடு கரைகளை விற்று வட்டு கடடங்கள்வாங்கலாமா என்று சிந்திப்பீர்கள்.

**பொன் பொருளை வழங்கும் ஒன்பதாமிடத்து குரு!**

இதுவரை உங்கள் ராசிக்கு 8 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான்ஆனிமாதம 20 ஆம் திகதி முதல் சிம்ம ராசியில் 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அங்கிருந்து கொண்டு உங்கள் ராசியையும், 3, 5 ஆகிய இடங்களையும் பார்க்கப் போகிறார். ஜென்ம ராசியைக் குரு பார்ப்பதால் தடைகள் தவிடு பொடி யாகும். தனவரவு வந்து கொண்டே இருக்கும்.

'முடை' என்ற இரண்டெழுத்து விலகி 'முன்னேற்றம' என்ற சொல் வாழ்க்கையில் வந்து சேரப்போகின்றது. எட்டு வகை லட்சுமி இல்லத்தில் குடியேற வேண்டுமானால், வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரவேண்டுமானால் வியாழ பகவானின் பார்வை நமக்கு வேண்டும்.

**ஜென்மத்தை குருதான் பார்த்தால் செயறபாட்டால் வெற்றி கிட்டும்! மூன்றினை குருதான் பார்த்தால் முன்னேற்றம் அதிகரிக்கும்! ஐந்தினை குருதான் பார்த்தால் அகிலத்தில் புகழ் உண்டாகும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் உங்கள் ராசியைக் குரு பார்ப்பதால் ஓராண்டு சீரான உடல் நலம் வாய்க்கும். செல்வ நிலை உயரும். வாரம் ஒருமுறை வியாழன் அன்று குரு தட்சிணா மூர்த்தியை வழிபட்டால் மேலும் நற்பலன்கள் கிட்டும். தொட்ட காரியங்களில் வெற்றி கிட்டும். தொலை தூரத்திலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். பட்டங்கள், பதவிகள் வருவதறகான அறிகுறிகள் தென்படும்.

மூன்றாமிடத்தை குரு பார்ப்பதால் முயற்சிகளில் வெற்றி கிட்டும். வழக்குகள் சாதகமாகும். வருங்கால நலன் கருதி முக்கியப் புள்ளிகளைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள். பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். உடன் பிறப்புகள் உங்கள் செயறபாடுகளுக்கு ஒத்துழைப்புச் செய்வர்.

ஐந்தாமிடத்தை குரு பார்ப்பதால்




பிள்ளைகளின் ஏக்கங்களைத் தீர்த்து வைப்பீர்கள். கல்யாண வாய்ப்புகள், கல்லூரிப் படிப்பு, கடல்தாண்டும் முயற்சிகளில் வெற்றி ஏற்படும். பூர்வீக இடத்தைப் பாகப்பிரிவினை செய்து கொள்வதில் இருந்த பிரச்சினை அகலும். புது முயற்சிகளில் வெற்றி உண்டு. தேவ குரு ஒன்பதில் நிற்கும் பொழுது தெய்வபலமும் கூடும். செல்வ நிலையும் உயர்வதற்காக நண்பர்களும், வாடிக்கையாளர்களும் கைகொடுத்து உதவுவர்.

**நலம் தருமா ராகு கேது பெயர்ச்சி!**

மார்கழி மாதம் 23 ஆம் திகதி அன்று சிம்ம ராசியில் ராகு சஞ்சரிக்கப் போகிறார். அதே நேரத்தில் கும்ப ராசியில் கேது சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் ராசிக்கு இதுவரை 10 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு இனி 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அதே நேரத்தில் 4 ஆம் இடத்தில சஞ்சரித்து வந்த கேது 3 ஆம் இடத்தில சஞ்சரிக்கப் போகின்றார். இதன் விளைவாக எண்ணற்ற மாற்றங்கள் உங்களுக்கு வந்து சேரப் போகின்றன.

பூர்வீக சொத்துக்களில் பாகப்பிரிவினை ஏற்படாமல் பஞ்சாயத்துகள் இழுபறி நிலையில் இருந்திருக்கலாம. அவை இனி மாறும். அண்ணன்-தம்பிக்குள் இருந்த மோதல்கள் நீங்கி சொத்துக்கள் உங்கள் கைக்கு வந்து சேரும். உறவைப் பகையாக்கி விட்டவர் ஓடி ஒளிந்துகொள்வர். இரவு பகலாகப் பாடுபட்டதற்கு ஏற்ற பலன் கிடைக்கும். மூன்றில் சஞ்சரித்து வந்த கேதுவால் சகோதர வர்க்கத்தினர் சஞ்சலம் தீர்க்க வழிகாட்டுவர். வழக்குகள் சாதகமாகும்.

கிழக்கில் உதித்த சூரியன் மேற்கில் உதித்தால்கூட நாங்கள் அதைச் செய்ய மாட்டோம் என்று கூறிய உறவினர்கள் கோபத்தைக் குறைத்துக்கொண்டுகூட வந்து உதவி செய்யும் நேரமிது. பிறருக்கு ஜாமீன் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். இதுபோன்ற காலங்களில சர்ப்ப கிரகங்களின் ஆதரவைப் பெற முறையாக சர்ப்ப சாந்திகளை செய்வது நல்லது.

**சனியின் சஞ்சார நிலை!**

சனி பகவான் வருடத் தொடக்கத்திலேயே வக்ர இயக்கத்தில் தான் இருக்கிறார். 12.06.2015 முதல் துலாம் ராசியில் வக்ரமடைகிறார். 30.07.2015 இல் வக்ர நிவர்த்தியாகிறார். பிறகு 05.09.2015 இல் விருச்சிக ராசியில் வக்ர நிவர்த்தியாகிறார். பிறகு 26.03. 2016 இல் மீண்டும் விருச்சிக ராசியில் வக்ரமடைகிறார். இங்ஙனம் வருடம்முழுவதும்வக்ரம்அடைவதும், வக்ர நிவர்த்தியாவதுமாக சனியின் சஞ்சாரம் இருக்கின்றது.

சனி வக்ரம் பெறுவது உங்கள் ராசியைப் பொறுத்தவரை அவ்வளவு நல்லதல்ல. தனாதிபதியாகவும், சகாய ஸ்தானாதிபதியாகவும் சனி விளங்குவதால் பண நெருக்கடி அதிகரிக்கும். தொகை வந்த மறுநிமிடமே செலவாகும். சகோதர ஒற்றுமை குறையும். சச்சரவுகள் அகல இக்காலத்தில் வழிப்புணர்ச்சியும், உங்களுக்கு தேவை. சனி பகவான் வழிபாடும் உங்களுக்கு தேவை. விளக்கு ஏற்றினால் வழக்கு சாதகமாகும். கவசம் பாடினால் காரியங்களில் வெற்றி கிடைக்கும். சனி பலம் பெற்றாலும் ஏழரைச் சனி என்பதால் எதையும் யோசித்துச் செய்வது நல்லது.

**குருவின் வக்ர காலம்!**

குரு 20.12.2015 இல் கன்னி ராசியில் அதிசாரம் பெறும் பொழுதும், 07.02. 2016 இல் சிம்ம ராசிக்குள் வக்ரம் பெறுகிறார். இதன் விளைவாக தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு குறையும். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனங்கள் வாங்கி மகிழ்வீர்கள். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும்.

**வருடம் முழுவதும் வசந்தம் வர வழிபாடு!**

ராசிநாதன் குருவைப் பலப்படுத்த வியாழக்கிழமை அன்று சிவாலயம் சென்று தென்முகக் கடவுளை வழிபாடு செய்யுங்கள். பிரதோஷ



நேரத்தில் நந்தியை வழிபட்டால் பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும். சனிக்கிழமை அனுமனையும், தெசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளையும் மேற்கொள்ளுங்கள். செல்வ வளம் பெருகும்.

**மங்கையருக்கான மகத்தான பலன்கள்!**

தனுசு ராசியில் பிறந்த பெண்களே, ஏழரைச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து செய்வது நல்லது. குடும்பச் சுமை கூடுதலாகத்தான் இருக்கும்.

அண்டை அயலாருடன்சண்டை, சச்சரவுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது. யாருக்கும் வாக்கு கொடுக்கும் முன் ஒரு கணம் யோசித்துப் பார்ப்பது நல்லது. விரயச் சனி இருப்பதால் குடும்பத்திற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் வாங்கிச் சேர்ப்பீர்கள். குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கூடுதல் அன்பு செலுத்தி குழந்தைகள் நலத்தில் அக்கறை காட்டுவீர்கள். கணவன்- மனைவி ஒற்றுமை பலப்படும். ராகு-கேது பெயர்ச்சிக்குப் பின்னால் தாய்வழி ஆதரவு பெருகும். திசைமாறிய தென்முகக் கடவுள் வழிபாடு செல்வ நிலையை உயர்த்தும். சர்ப்ப சாந்திப் பரிகாரமும், சனீஸ்வர வழிபாடும் சகல யோகத்தையும் வரவழைத்துக் கொடுக்கும்.

**நாளை தனுசு...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகளால் 30 கிறிஸ்தவர்கள் படுகொலை!

## அட்டூழியம் தொடர்கிறது



(டிரிபோலி)

**ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் வெளியிட்ட காணொலியில், தலை துண்டித்துப் படுகொலை செய்ய எதியோப்பிய கிறிஸ்தவர்கள் அழைத்து வரப்படும் காட்சி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. லிபியாவில் சிறை பிடிக்கப்பட்ட எதியோப்பிய கிறிஸ்தவர்கள் 30 பேரை இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.ஐ.எஸ்.) பயங்கரவாதிகள் படுகொலை செய்யும் காணொலி கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.**

இதில் 12 பேர்களின் தலைகள் துண்டிக்கப்பட்டன. மற்றொரு இடத்தில் 18பேர் துப்பாக்கியால் சுடப்பட்டதாகக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. இந்தப் படுகொலைகள் எப்போது நிகழ்ந்தன என்பது குறித்த விபரம் காணொலியில் இல்லை.

29 நிமிடங்கள் ஓடக் கூடிய இந்த காணொலியில் முகமூடியிட்ட பயங்கரவாதிகள் பிணைக் கைதிகளைப் பிடித்து வைத் திருக்கும் காட்சியும், "எதியோப்பிய தேவாலயத்தைச் சேர்ந்த எதிரிகள்" என்ற வாசகமும் இடம் பெறுகிறது.

ஐ.எஸ்.ஐ.எஸ். கொடி, சின்னம் போன்ற அடையாளக்குறிகள் காணொலியில் உள்ளன.

முகமூடி அணிந்து, கையில் துப்பாககி வைத்துள்ள நபர் தோன்றி, முஸ்லிம்களாக மதம் மாறாத கிறிஸ்தவர்களை மிரட்டுவதாக உள்ளது.

கடற்கரைப் பகுதிக்கு அழைத்து வரப்படுகின்ற 12 பேரின் தலைகள் துண்டிக்கப்படும் காட்சி அதில் உள்ளது. மேலும், பாலைவனம் போன்ற மணல் பிரதேசத்தில், 18 பேரை சுட்டுக் கொல்லும் காட்சி இடம் பெற்றுள்ளது.

எகிப்தைச் சேர்ந்த 21 கிறிஸ்தவர்களின் தலைகளைத் துண்டித்துப் படுகொலை செய்யும் காணொலியை கடந்த பெப்ரவரி மாதம் ஐ.எஸ்.ஐ.எஸ். வெளியிட்டது. லிபியா கடற்கரைப் பகுதியில் அந்தச் சம்பவம் நடந்ததாகக் கருதப்படுகிறது. அதற்கு அடுத்தபடியாக, தற்போது எதியோப்பியாவைச் சேர்ந்த 30 கிறிஸ்தவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தினர் கிறிஸ்தவர்களைப் படுகொலை செய்த சம்பவங்களையடுத்து, மேற்கு ஆசிய நாடுகளில் உள்ள கிறிஸ்தவர்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது. (இ-5)

## மலைச் சிகரத்தில் ஜனாதிபதி



வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் அந்நாட்டின் உயரமான மலைச்சிகரத்தின் மீது ஏறி சாகசம் செய்துள்ளார்.

வடகொரியாவிற்கும் சீனாவுக்கும் இடையேயான எல்லைப்பகுதியில் 9003 அடி உயரத்தில், பக்து(Paektu) என்ற உயரமான மலைச்சிகரம் உள்ளது.

இந்த பிரமாண்டமான மலைச் சிகரத்தில் ஏறிய அந்நாட்டின் ஜனாதிபதி கிம் ஜாங் உன், இராணுவ படைக்குழுக்களுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

கிம்மின் இச்செயல் அந்நாட்டு மக்களை வியப்பில் ஆழ்த்தியதுடன், இராணுவ வீரர்களையும் நெகிழ்ச்சியடைய செய்துள்ளது.

இதுகுறித்து கிம் கூறுகையில், எந்த அணு ஆயுதமும் கொடுக்க முடியாத மனோ வலிமையை பக்து மலையேற்றம் எனக்கு தந்துள்ளது என தெரிவித்தார். (இ-5)




## ஏமன் மோதலில் 21 பேர் மரணம்

(தயேஸ்)

தயேஸ் நகரில் ஏமன் ஜனாதிபதிக்கு ஆதரவான போராளிகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற மோதலில் 21 பேர் கொல்லப்பட்டதாக உள்ளூர் வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏமன் தலைநகர் சனா, முக்கிய துறைமுகநகரானஏடனுக்குஅடுதது, தெற்குப் பகுதியிலுள்ள தயேஸ் நகரில் இரு தரப்பினர் இடையே கடும் மோதல் நிகழ்ந்து வருகிறது.

அங்கு இராணுவத்துக்கும், ஏமன் ஜனாதிபதி ஆதரவுப் போராளிகளுக்கும் துணையாக சவுதி தலைமையிலான கூட்டுப் படை வான் வழித் தாக்குதலை கடந்த வெள்ளிக்கிழமை முதல் நடத்தி வருகிறது.

தயேஸ் நகரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நிகழ்ந்த மோதலில், ஹவுதி கிளர்ச்சியாளர்கள் 10 பேர் கொல்லப்பட்டனர்.

ஷப்வா மாகாணத் தலைநகர் அதாக்கில், ஹவுதி கிளர்ச்சியாளர்கள் 7 பேர் கொல்லப்பட்டதாக சன்னி பிரிவைச் சேர்ந்த பழங்குடியினர் தெரிவித்தனர்.

ஹொதைதா, இப் ஆகிய நகரங்களிலிருந்து ஷியா பிரிவைச் சேர்ந்த ஏராளமானோர் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக மோதலில் கல நந்து கொள்ள வந்ததாகக் கூறப் படுகிறது.

இதையடுத்து சவுதி கூட்டுப் படை விமானங்கள் தங்களின் தாக்குதலைத் தீவிரப்படுத்தின.


இதனிடையே ஷப்வா மாகாணத்தின் சயீத் நகர் அருகே ஆயுதங்கள் ஏற்றிச் சென்ற அல் கொய்தாவினரின் வாகனம் மீது அமெரிக்க ஆளில்லா விமானம் நிகழ்த்திய தாக்குதலில் 3 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

ஏமனில் செயற்பட்டு வரும் அல்கொய்தா பிரிவுதான், உலகின் மிகக் கொடூரமான பயங்கரவாதக் குழு என்று அமெரிக்கா கூறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 'டைட்டானிக்' சாய்வு இருக்கை ஒரு கோடி ரூபாவுக்கு ஏலம்

(லண்டன்)

'டைட்டானிக்' கப்பலில் பயன்படுத்திய சாய்வு இருக்கை ஒரு இலட்சம் பவுண்டுக்கு (ரூ. 1 கோடி) ஏலத்தில் விற்பனையாகியது. லண்டனில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் இதனை வாங்கியவரின் பெயர் வெளி யிடப்படவில்லை.



சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வமுள்ள நபர் என்று மட்டுமே ஏலம் நடத்திய நிறுவனமான ஹென்ரி ஆல்ட்ரிட்ஜ் தெரிவித்தது.

உலகின் மிகப் பெரிய பயணிகள் கப்பலான "டைட்டானிக்" மேற்கொண்ட முதல் பயணத்தின்போது பனிப்பாறையில் மோதி அட்லாண்டிக் பெருங்கடலில் மூழ்கியது.

1912ஆம் ஆண்டு நிகழ்ந்த அந்த விபத்தில் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். பயணிகளின் உடல்களை மீட்க அனுப்பப்பட்ட கனடாவைச் சேர்ந்த கப்பலின் மாலுமிகள் கடலில் மிதந்து கொண்டிருந்த "நான் டக்கெட்" சாய்வு இருக்கையைக் கண்டெடுத்தனர்.

"டைட்டானிக்"கின் முதல் வகுப்பு தளத்தில் பயன்படுத்தப்பட்ட இதே போன்ற மேலும் 6 சாய்விருக்கைகள் தற்போது தனியார் வசம் உள்ளது. கடலில் மிதந்த வேறு பல பொருட்களும் மீட்கப்பட்டன. (இ-5)

## பியர்;சர்ச்சையில் சிக்கிய அவுஸ்திரேலியப் பிரதமர்

அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அபோட் அண்மையில் மது குடித்த காணொலி வெளியாகி சர்ச்சையை எழுப்பியுள்ளது.இவர் கடந்த சனிக்கிழமை இரவு சிட்னியில் உள்ள மதுபான விற்பனை நிலையத்தில் தனது குவளையில் ஊற்றப்பட்ட 425 மி.லீ. பியரை 6 விநாடிக ளில் ஒரே மூச்சில் குடித்து முடித்தார். இது சமூக வலைத்தளங்களில் விவாத பொருளாகி விட்டது.

அதாவது கடந்த 1983 முதல் 1991 வரை பிரதமராக இருந்த பார் ஹாவ்க்கும் டோனி அபோட்டுக்கும் பியர் குடிக்கும் போட்டி வைத்தால் யார் முதலில் குடித்து முடிப்பார்கள் என விவாதிக்கப்பட்டது.

இச்சம்பவம் நடந்தபோது அவுஸ்திரேலிய காற்பந்து அணியின் பயிற்சியாளர் சைமன் கார்டல் வீரர்களுக்கு மது விருந்து அளித்து கொண்டிருந்தார்.

அப்போது அந்த வழியாக வந்த பிரதமர் டோனி அபோட்டை சந்தித்து தங்களுடன் மது விருந்தில் கலந்து கொள்ளும்படி அழை ப்பு விடுத்தார்.அதை ஏற்றுக்கொண்ட இவர் ஒரே மூச்சில் பியர் குடிப்பதை காணொலி எடுத்து வெளியிட்டு சர்ச்சையை ஏற்படுத்தி விட்டனர். (இ-5)

## அமெ.இந்துக்கோவில் மீது மீண்டும் நேற்று தாக்குதல்

அமெரிக்காவின் டெக்சாஸில் உள்ள இந்து கோயில் மீது தாக்குதல் நடத்தப்பட்டு, குறிப்பிட்ட மதத்துக்கு எதிரான வகையில் படங்கள் கிறுக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவில் மூன்றாவது முறையாக இந்துக கோயிலகள்தாக்குதலுக்குள்ளாகியுள்ளன.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் லேக் ஹைலேண்ட்ஸ் அருகே உள்ள இந்து கோயில் மர்ம நபர்களால் தாக்கப்பட்டுள்ளது. கோயிலின் நிர்வாக பொறுப்பில் இருப்பவரான கிருஷ்ணன் சிங், நேற்று திங்கட்கிழமை காலை கோயில் சேதப்படுத்தப்பட்டதை பார்த்து அதிர்ச்சியடைந்து புகார் அளித்ததாக தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறும் போது, கோயில் சுவற்றில் இந்து மதத்தை விமர்சிக்கும் விதத்தில் "666" என்ற எண்ணுடன் தலை கீழாக சிலுவையும் வரையப்பட்டிருந்தன. மேலும் பல அவதூறான கிறுக்கல்களும் சுவற்றில் இருந்தன.

இதனைக்கண்டு நாங்கள் அனைவருமே அதிர்ச்சியடைந் தோம். குறிப்பிட்ட மதத்தினரை புண்படுத்தும் விதத்தில் இந்த செயல் உளளது என்றார்.

சம்பவம் குறித்து வேதனையுடன தெரிவித்த க்ரேசி என்ற 9 வயது சிறுமி, இந்த செயல்மிகவும்வேதனை அளிக்கிறது. இது போலான தாக்குதல்கள் தேவாலய ங்கள் மீது நடக்க சாத்தியமா? என்று தெரியவில்லை" என்றார்.

கோயில் மட்டுமல்லாமல், அதன் அருகே இருந்த வாகனங்களிலும் ஸ்ப்ரே பெய்ண்டால் அவதூறான கிறுக்கல்கள் இடம் பெற்றிருந்தன.

தாக்குதலால் சேதமைடந்த கோயிலை இந்துக்கள் மட்டுமல்லாது மற்ற மதத்தைச் சேர்ந்து சீரமைக்க உதவினர். இந்தச் சம்பவம் குறித்து டலாஸ் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

முன்னதாக இதேபோல, வோஷிங்டன் நகரில் உள்ள இரு வேறு இந்து கோயில்களும் மர்ம நபர்களால் தாக்கப்பட்டது. அதோடு, கோயிலின் சுவற்றில் "கெட் அவுட்" (வெளியேறுங்கள் ) என ஸ்ப்ரே பெயின்ட் மூலம் எழுதப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதிப்போரில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல் குறித்து

# சுதந்திரமான விசாரணை நடத்தப்படல் வேண்டும்!

**(விசாகப்பட்டினம்) — 2009ஆம் ஆண்டு மே மாதம் இடம் பெற்ற இறுதிக்கட்டப்போரின் போது மனிதவுரிமைகள் மீறப்பட்டது பற்றி நம்பத்தகுந்த சுதந்திரமான விசாரணை நடத்தப்படவேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் வந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாநாடு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்த மாநாட்டில்,இலங்கையில் நடைபெற்ற போர் முடிவடைந்து 6 ஆண்டுகள் ஆகிவிட்ட போதிலும் தமிழர்கள் சந்தித்து வரும் பிரச்சினைகள் இன்னும் தீர்ந்தபாடில்லை.

தமிழர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசு வாக்குறுதிகளை அளித்து சில நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்றாலும் பிரச்சினைகள் நீடிக்கின்றன.

இலங்கை தமிழர்கள் பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் நிரந்தர தீர்வு காண வேண்டும். இலங்கை அரசு 13ஆவது அரசியல் சட்ட திருத்தத்தை நிறைவேற்றி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்க வேண்டும்.

சிங்களவர்களை போன்று தமிழர்களுக்கும் சமஉரிமை உரிமை வழங்க வேண்டும். தமிழர்கள் பகுதியில் இருந்து இராணுவத்தை வாபஸ் பெற வேண்டும்.

2009ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற இறுதிக்கட்ட போரின் போது மனித உரிமைகள் மீறப்பட்டது பற்றி நம்பந்தகுந்த, சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

ஐ.நா. பொதுச் செயலாளர் நியமித்த நிபுணர்கள் குழு வழங்கிய பரிந்துரைகள் நிறைவேற்றப்படவேண்டும்.

இலங்கை அகதிகள் தங்கள் சொந்த நாட்டுக்கு திரும்பிச் செல்ல விரும்பினால் அவர்கள் அங்கு சென்று கௌரவத்துடன் வாழ்வதை இந்திய அரசும் இலங்கை அரசும் உறுதி செய்ய வேண்டும்.

இலங்கையில் புதிய அரசியல் சூழ்நிலை உருவாகி இருப்பதால் அந்த வாய்ப்பை பயன்படுத்தி தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு பரஸ்பர பேச்சுவார்த்தையின் மூலம விரைவில் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## அரசியல் பழிவாங்கல்களை சந்திரிகா நிறுத்த வேண்டும்

### தேசிய பிக்குகள் சம்மேளனம் கோரிக்கை

நாட்டு மக்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கே வாக்களித்ததாகவும், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு வாக்களிக்கவில்லை எனவும் தேசிய பிக்குகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.



அதேவேளை அரசியல் பழிவாங்கலை உடனடியாக நிறுத்திவிட்டு, நாட்டை ஐக்கியப்படுத்தி முன்னெடுத்துச் செல்ல தேவையான உதவிகளை வழங்குமாறு முன்னாள ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவிடம் விசேட கோரிக்கையை முன்வைப்பதாகவும் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள தேசிய பிக்குகள் சம்மேளனத்தின் தலைவர் முருத்தொட்டுவே ஆனந்த தேரர்,

மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கே வாக்களித்தனர். சந்திரிகா குமாரதுங்கவிற்கு அல்ல.

சந்திரிகா நாட்டை பல வருடங்கள் ஆட்சி செய்தபோதிலும் நாட் டில் நடைபெற்ற போரை அவரால் முடிவுக்கு கொண்டுவர முடியாது போனது.

பண்டாரநாயக்க குடும்பத்தை அழித்தது போல், நாட்டை அழிக்காது, மக்கள் விரும்பி ஆட்சி அதிகாரத்தை வழங்கிய நபர்கள் நாட்டை ஆட்சி செய்ய இடமளித்து விட்டு ஒதுங்கியிருக்க வேண்டும்.

தேசிய பிக்குகள் சம்மேளனம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய போது, அவரிடம் பழிவாங்கும் எண்ணத்தை காணவில்லை.

எனினும் வெளியாட்களின் அழுத்தங்கள் காரணமாக அவர் சில தீர்மானங்களை எடுக்க வேண் டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என் பதை அந்த சந்திப்பில் தம்மால் உணர முடிந்ததாகவும் ஆனந்த தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## சசி வீரவன்சவிடம் நேற்று விசாரணை

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள அமைச்சருமான விமல் வீரவன்சவின் மனைவி சசி வீரவன்சவிடம் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினர் சசி வீரவன்சவிடம் வாக்குமூலம் பெற்றிருப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

போலி வெளிநாட்டு கடவுச்சீட்டு உட்பட பல குற்றச்சாட்டுகள் தொடர்பில் அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேற்று முற்பகல் 10.30 மணியளவில் விசாரணைகள் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது. அரசியல் ரீதியாக பழிவாங்கும் நோக்கில் தம்மையும், தமது குடும்ப உறுப்பினர்களையும் விசாரித்து வருவதாக விமல் வீரவன்ச அண்மையில் குற்றஞ்சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பூண்டுலோயாவில் இரட்டைக்கொலை

நுவரெலியா, பூண்டுலோயா, டன்சினன் தோட்டம் அக்கர மலை பிரிவு தோட்டத்தில் தாயும் மகளும் கொலை செய்யப்பட்டுள்ளதாக பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பூண்டு லோயா, டன்சினன் தோட்டம் அக்கரமலை பிரிவு தோட்டத்தில் 52 வயது மதிக்கத்தக்க தாயும் 32 வயது மதிக்கத்தக்க மகளும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பூண்டுலோயா பொலிஸார் மேற்கொண்டு வருவதோடு சந்தேக நபர் ஒருவரையும் தேடி வருகின்றனர். குறித்த பகுதியில் அண்மைக் காலமாக கொலை, கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



### பொன்னையா இராசேந்திரம்

அச்சுவேலி கதிரிப்பாய் முரசொலியை பிறப்பிடமாகவும் மந்துவில் மேற்கு,கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராசேந் திரம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நண்பகல் 12மணியளவில் மந்துவில் இலுவன்இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி கருணாநந்தசிவம் தனலட்சுமி

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கருணாநந்தசிவம் தனலட்சுமி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப 3மணியளவில் W.S.Fernando & Son Funeral Directors,No.134,Chilaw Road, Negombo,SriLanka எனும் முகவரியில் நடைபெறும்.



### திருமதி வேலுப்பிள்ளை கனகம்மா

அச்சுவேலி-பத்தமேனியை பிறப்பிடமாகவும்.கனடா ரொரன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கனகம்மா கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் 1591 Elgin Mills Rd.East, Richmond Hill அமைந்துள்ள Elgin Mills Cemetery இல் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5மணி முதல் 9மணி வரை பார்வைக்காக வைக்கப்பட்டு நாளை புதன்கிழமை அதேஇடத்தில் காலை 9மணி முதல் மு.ப 11.30மணி வரை ஈமைக்கிரியைகள் நடைபெற்று பின்னர் தகனம் செய்யப்படும்.



### திருமதி சரவணஉற்பவம் ராஜேஸ்வரி

சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் நெதர்லாந்து Amsterdam ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சரவணஉற்பவம் ராஜேஸ்வரி கடந்த 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப2மணிதொடக்கம்பி.ப 5மணிவரை Ookmeerweg 275,1067 SP Amsterdam,Netherlands என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### பாஸ்கரநாதன் விசுவலிங்கம்

(முன்னாள் ஆசிரியர்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் நைஜீரியா,பிரான்ஸ் Marie de Clichy ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பாஸ்கரநாதன் விசுவலிங்கம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மு.ப 10மணியளவில் Hospital Beaujon,100 Boulevard du General Leclerc,92110 Clichy,France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோரைப்புல் இனங்களை அழிக்கக்கூடிய வீரியமுள்ள மருந்தை சிபார்சு செய்யுங்கள்

(மல்லாவி)

**ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கற்சிலை மடு குளத்தின் கீழுள்ள பெரிய வெளி வயற் பகுதியில் நடப்பாண்டில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள், கோரைப் புற்களை கட்டுப்படுத்துவதற்குரிய களை நாசினிகளை விசிறிய போதும் அவை பலனளிக்கவில்லையெனவும் இதனால் தாம் பல ஆயிரக்கணக்கான ரூபாவினை இழந்துள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.**

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் முத்தையன் கட்டுக்குளம், கற்சிலைமடுக்குளம், வவுனிக்குளம் ஆகிய பெரிய நீர்ப்பாசனக்குளங்கள் உட்பட பல சிறிய குளங்களின் கீழ் ஆயிரக் கணக்கான ஏக்கரில் சிறுபோக நெற்செய்கையினை விவசாயிகள் மேற்கொண்டனர்.

## விவசாயிகள் கோரிக்கை

இந்நிலையில் வயல்களில் காணப்படும் கோரைப்புற்களை கட்டுப்படுத்துவதற்காக நிறுவனம் ஒன்றின் களை நாசினியான எம்.சி.பி.ஏ. 60, எம்.சி.பி.ஏ 50 ஆகிய கோரை மருந்து வகைகளை பல தடவைகள் விசிறிய போதும் கோரைப்புற்களை கட்டுப்படுத்த முடியாது போயுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இம் மருந்தினை விநியோகம் செய்யும் நிறுவனத்துடன் விவசாயிகள் தொடர்பு கொண்டு விடயம் தொடர்பில் தெரியப்படுத்திய போது அவர்கள் வருகைதந்து கற்சிலைமடு பெரிய வயல் வெளியிலுள்ள விவசாயி ஒருவரின் வயலில் 9 தடவைகள் கோரைப்புற்களுக்கான மருந்தினை விசிறிய போதிலும் அவை அழிவடையாமல் இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே அரசாங்கம், விவசாய அமைச்சுக்கள் தற்போது சிறுபோக நெற்செய்கையில் அதிகமாகக் காணப்படும் கோரைப்புற்களை அழிக்கக் கூடிய வீரியமுள்ள மருந்தை சிபார்சு செய்து தருமாறு பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)




# பழைய மாணவரால் பாடசாலைக்கு உதவி



(திருவையாறு)

கிளி/திருவையாறு மகாவித்தியாலயத்தின் பழைய மாணவனும் கனடாவில் வாழ்பவருமான ப.ஜெயந்தன் பாடசாலைக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியை வழங்கி உதவியுள்ளார்.

இந்நிதியை அவர் அண்மையில் பழைய மாணவர் சங்கத்தின் ஊடாக வழங்கியுள்ளார்.

இவரது நிதியைக் கொண்டு பாடசாலையில் சேதமடைந்த தளபாடங்களை ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள் ஒன்றிணைந்து விடுமுறை காலத்தைப் பயன்படுத்தி திருத்தம் செய்து வருகின்றனர்.

இதுபோன்று ஏனைய பாடசாலைகளுக்கும் புலம்பெயர் வாழ் பழைய மாணவர்கள் உதவுவதன் மூலம் பின்தங்கிய பாடசாலைகளை முன்னேற்ற முடியுமென பாடசாலை சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். (2-273)

# சேதமடைந்துள்ள கூரைகள் திருத்தம் செய்யப்படவில்லை

## இரணைமடு பொதுச்சந்தை வர்த்தகர்கள் குற்றச்சாட்டு

(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி இரணைமடு பிரதேசத்தில் கடந்த 11 ஆம் திகதி பிற்பகல் 1.45 மணியளவில் மினி சூறாவளியுடன் கூடிய மழை பெய்ததையடுத்து இரணைமடு பொதுச் சந்தையினுள் அமைக்கப்பட்டிருந்த கடைகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டு சேதமடைந்தன.

இவ்வாறு சேதமடைந்த கடைகளின் கூரைகளை மீள அமைத்துக்கொடுப்பதில் சம்பந்தப்பட்டவர்கள் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லையென வர்த்தகர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.


இது தொடர்பில் தெரியவருவதாவது,

இரணைமடு பிரதேசத்தில் வீசிய மினி சூறாவளியுடன் கூடிய காற்றினால் மேற்படி சந்தையில் அமைக்கப்பட்டிருந்த கடைகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன.

இதனால் அங்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களும் சேதமடைந்திருந்தன. சேதமடைந்த கூரைகளை மீள அமைத்துக் கொடுப்பது தொடர்பில் இன்றுவரை எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை எனவும் வீசப்பட்ட தகரம் உள்ளிட்ட பொருட்கள் பாதுகாப்பான முறையில் அகற்றப்படாமையால் பாரிய இடர்களை சந்திப்பதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நீண்ட நாட்களாக இவ்வாறு காணப்படுகின்ற நிலையில் தமது வியாபாரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் போக்குவரத்து, பாதுகாப்பு என்பவற்றில் பாரிய நெருக்கடிகள் காணப்படுவதாகவும் வர்த்தகர்களால் சுட்டிக் காட்டப்படுகின்றது.

எனவே குறித்த விடயம் தொடர்பாக கரைச்சி பிரதேச சபை விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வர்த்தகர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (2-271-281)



சுவிஸ் அருள்மிகு ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில் நிர்வாகத்தினர் பல்வேறு வகையிலும் பாதிப்புற்று அவல வாழ்வு வாழ்ந்து வரும் தமிழ் உறவுகளிற்கான வாழ்வாதார உதவிகளை வழங்கி அவர்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்காக உதவும் அறப் பணியில் ஈடுபட்டுள்ளது.

இந்த வகையில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த போரினால் தந்தையை இழந்த மாணவி ஒருவரின் பல்கலைக்கழக மேற்படிப்புக்கு உதவும் வகையில் மாதாந்தம் ஒரு தொகையை வழங்க முன்வந்துள்ளது.

இத்தொகையினை வடக்கு பிரதேச சபை உபதவிசாளர் சண்முகலிங்கம் சஜீவன் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

இத்தொகையின் முதற்பகுதி அண்மையில் மேற்படி மாணவி க்கு வழங்கப்பட்டது. இதேபோன்று ஏனைய புலம்பெயர் ஆலய அமைப் புகளும் உதவமுன்வருமானால் பலரின் வாழ்விற்கு ஒளி கிடைக்கும் என்பது நிச்சயம் என சஜீவன் தெரிவித்துள்ளார். (2-4)

# அரசசார் அலுவலகங்கள் தனியார் வீடுகளில் இயங்குவதால் சேவையை பெறுவதில் சிரமம்

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிராம உத்தியோகத்தர்களின் அலுவலகங்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் அலுவலகங்கள் என்பன தனியார் வீடுகளில் இயங்கி வருவதால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக சேவைகளை பெறச் செல்லும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த அலுவலகங்கள் கிராமங்களின் மத்தியிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராமஅபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம், பொதுநோக்கு மண்டபம் போன்ற பொதுக்கட்டடங்கள் இயங்கினால் சேவைகளைப் பேற்றுக்கொள்ள வசதியாக இருக்குமென பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அரச சுற்றுநிருபத்தின்படி கிராம உத்தியோகத்தர்களின் அலுவலகங்களும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்ளின் அலுவலகங்களும் கிராமங்களிலுள்ள பொது கட்டடங்களிலேயே இயங்க வேண்டும் என்பது பொதுவான நியதியாகும்.

ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போதும் பல கிராமங்களில் இவ்வாறான அலுவலகங்கள் சில தனியார் வீடுகளில் இயங்கி வருவதனால் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் விடயத்தை கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் காட்டில் சிக்கித் தொலைந்த மிருகங்கள்

மகிந்த ராஜபக்ஷ அரசு தனது கடந்த 10 வருட கால ஆட்சியின் போது சாதித்ததைவிடவும் எவ்வளவோ கூடுதலாகவேதான் தனது அரசு ஆரம்ப 88 நாட்களுக்குள் சாதித்திருப்பதாக கடந்த வார பாராளுமன்ற அமர்வின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கஉரிமை பாராட்டியிருந்தார். உண்மையில் அரசின் அந்த 100 நாள் வேலைத்திட்டம் போதியளவு முன்னேற்றத்தினை வெளிக்காட்டும் விதத்தில் அமைச்சர்கள் எல்லோரையும் தத்தமது பங்கு முன்னேற்றத்திற்கான காலடிகளை விரைவாகவே முன்னெடுத்துச் செல்வதற்கான உத்வேகத்தினை கொடுத்ததாயிருந்தது. ஆனாலும் அரசானது தனக்குத்தானே விதித்துக்கொண்ட அந்த நூறுநாள் வேலைத்திட்டத்திற்கான காலக்கெடு என்ற கடுமையான சுய அழுத்த நிர்ப்பந்தநிலை காரணமாக புதிய அரசினது முன்னேற்றத்திற்கான அனைத்துவிடயங்களுமே சிறப்பான நகர்வினைக் காட்டவில்லை என்றே கூறவேண்டும். அவசரமானதொரு அரசியலமைப்பு உருவாக்கம் என்பது நீண்ட கால ஓட்டத்தில் நாட்டிற்கு ஏற்புடையதாக இல்லாமல் அனர்த்தநிலைமைகளுக்கே வழிவகுப்பதாகவும் அமையலாம். அரசினது இந்தவித அரசியல் முனைப்புக்களனைத்தும் கண்டிப்பாகவே பின்பற்றப்படுமானால் பாராளுமன்றத்தினை கலைத்து தேர்தலை நடத்துவதற்கான கால இடைவெளியில் தேர்தல் ஏற்பாடுகள், பிரசார வேலைகள் போன்ற இன்னோரன்ன அத்தியாவசியச் செயற்பாடுகளுக்கு தேவையான நேரமே இருக்காது.

அரச ஊழியர்கள் சிலரது சம்பள உயர்வுக் கொடுப்பனவாக கொடுக்கவேண்டிய அவசர பணத்தேவையை நிறைவு செய்வதற்கான நிதியினை திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ளும் பொருட்டு அரசினால் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட திறை சேரி நிதிச்சட்டமூலம் தோல்வியிலேயே முடிவடைந்திருந்தது. சிறுபான்மை அரசாக இருந்த போதிலும் அதனது ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களது வெற்றிப்பிரதாப மனோநிலையையும் ஒரு நேரம் ராஜபக்ஷ ஆட்சியின் தோற்கடிக்கமுடியாத உறுப்பினர்களாக இருந்தவர்களது கசப்பான உணர்வுப் பிரதிபலிப்புக்களையும் அவதானித்தவர்கள் சிறுபான்மை அரசின் அந்தச் சட்டமூலத் தோல்வியை எதிர்பார்த்து காத்திருந்தார்கள் எனலாம்.



பாராளுமன்றத்தில் நிலவிய இந்த மனோநிலையானது ஒருசிறுபான்மை அரசினதோ அல்லது தேசிய அரசினதோ செழிப்பிற்கோ நன்மையானதொரு விருத்திக்கோதானும் அனுசரணையானதாக தெரியவில்லை. கசப்புணர்வு, பகைமை மற்றும் பழிவாங்கும் மனோநிலை போன்ற உணர்வுகளே நீறுபூத்த நெருப்பாக உள்ளூரக்கனன்று கொண்டிருந்தன.

முதிர்ந்த அனுபவசாலியும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பழைய உறுப்பினரும் அக்கட்சியின் பொதுச் செயலாளருமான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது சகபாடிகள் மத்தியில் பிரபல்யமானவரே என்பதில் சந்தேகத்திற்கிடமில்லையென்ற போதிலும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர்களே தான் இவரது தோல்விக்கென உரத்து குரல் கொடுத்து வந்தவர்களாகவுமிருந்தனர். ஆனாலும் எதிர்க்கட்சி வரிசையில் பின் இருக்கையில் இடம்பிடித்திருக்குமளவிற்கு அவர்கள் தரம் குறைந்து போனது இப்போது அவர்களுக்கு திருப்தியாக இருந்திருக்குமா?



ஜனாதிபதி சிறிசேன உறுதி யான பெரும்பான்மை பலத்துடன் வெற்றியடைந்த போதிலும் புதிய அரசொன்றை பலமான முறையில் அமைப்பதற்கு போதிய பாராளுமன்றஉறுப்பினர்களை அவர் கொண்டிருக்கவில்லை. சந்தர்ப்பத்திற்கேற்ப தந்திரோபாயமான வழிமுறைகள் மூலம் அப்போதிருந்த பாராளுமன்றத்தை அவர் கலைத்திருக்கலாமென்ற போதிலும் அப்படிச் செய்யாது ஐக்கிய தேசியக் கட்சி தலைவரையும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு புதிய அரசினை அவர் உருவாக்கியிருந்தார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கென்றே ஸ்ரீலங்க சுதந்திர கட்சியினர் புதிய அரசிற்கு ஆதரவளிக்கச் சம்மதித்திருந்தனர். இருப்பினும் அவர்கள் அரை மனத்துடனேயே அவ்விதம் செயற்பட்டதுடன் அவர்களுள் சிலர் மகிந்த ராஜபக்ஷவின் மீள்வருகையை ஒருவேளை பிரதமராகவாவது அவர் வருவதை [illegible]களாகவே இருந்தனர். ஆனாலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மூத்த உறுப்பினர்களான அனுபவசாலிகள் கட்சிக்குள் அவர் திரும்பவும் உள்வாங்கப்படுவதை எதிர்த்தே வந்தனர். குறிப்பாக அவரது நெருக்கமான குடும்ப உறுப்பினர்கள் போன்றோரது நியமனங்கள் பற்றிய கூடுதலான வெளிப்படுத்தல்கள் காரணமாக அநேக உறுப்பினர்கள் அவரது மீள்வருகையை விரும்பாதது டன் கடும்பிடிவாதத்துடனுங்கூட எதிர்க்கவே செய்தனர்.





இதன்விளைவாக அடர்ந்த காடு போன்ற எதிர்பாராத சிக்கல்கள் நிறைந்த அரசியல் காட்டிற்குள் மிருகங்கள் பல தொலைந்தது போன்ற குழப்பகரமானதொரு சூழ்நிலை உருவாகிற்று. பயனற்றவர்களென ஒதுக்கிவிடப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் சிலர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டமை குழப்பத்தை மேலும் மோசமாக்கியதாயிற்று. ஆளுங்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களை வேறுபடுத்திக் காண்பது இப்போது கடினமானதாயிற்று. பாராளுமன்ற அரசியலில் இதுவே ஒருவேளை தனித்துவமான ஒரு நிகழ்வாகவுமிருக்கலாம். எதிர்க்கட்சியாயிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினருக்கிடையில் ஜனாதிபதி சிறிசேனவுக்கும் அவர்களது முன்னாள் தலைவரான மகிந்த ராஜ பக்ஷவுக்குமான ஆதரவாளர்களது எஜமான விசுவாச இழுபறியால் கட்சியே இரண்டாகியுள்ளது. எதிர்க்கட்சித் தலைவரொருவரை தெரிவு செய்யும்படி சபா நாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கேட் [illegible] தெரிவு செய்வதற்கான அந்தப் பொறுப்பினை கட்சியின் தற்போதைய பொதுச் செயலரான சுசில் பிரேமஜயந்தவிடம் விட்டிருக்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவருக்கான இடம் தற்போது தொடர்ந்தும் காலியாகவே இருக்கிறது.

இந்த அரசியல் குழப்பநிலையானது வெறும் அரசியல் தவறுகளாலோ விபத்துக்களாலோ அல்லது தற்செயல் நிகழ்வுகளாகவோ ஆனவையாக இல்லாமல் இலங்கை அரசியலில் தனித்துவமானதாக உள்ளார்ந்திருக்கும் அரசியல் பொறுப்புணர்வின்மை, தந்திரமான குறுக்கீட்டு சிந்தனை மற்றும் சந்தர்ப்பவாதம் போன்றவற்றுடன் அரசியலில் அடிப்படை ஒழுங்குணர்வென் பது முற்றிலும் அற்றுப்போனது மான நிலைமைகளினால் ஆனதேயாகும்.

மந்திரி சபையின் அமைச்சருக்கான பொறுப்புக்களை மேற்கொள்ளக் கூடியவரும் அரசுக்கெதிராக மிகமோசமான குற்றச்சாட்டுக்களை எழுப்பக் கூடியவருமான ஒருவரே இங்கு உண்மையில் போலித்தனம் நிறைந்த ஒரு அரசியல் சூதாடியுமான சிறந்ததொரு சட்டவாளருமாக விருப்பார்.

ஆளுங்கட்சி அரசியல்வாதிகளுங் கூட 19 ஆவது திருத்தம் போன்றவைமட்டில் எதிரும்புதிருமான இரண்டுவித சிந்தனைகளிலிருந்து விடுபட முடியாதவர்களாகவே இருப்பர். தேர்தல் பிரசார இயக்கங்களின் போதுநிறைவேற்று ஜனாதிபதி முறைமையினை ஒழிப்பது பற்றியே மைத்திரிபால சிறிசேன பேசியிருந்ததுடன் வெஸ்ட்மினிஸ்ரர் முறைமையின் கீழ் பிரதமரொருவருக்கு அதிகாரமளிப்பது பற்றிய விடயமொன்றுங்கூட பிரதான மான ஓர் அம்சமாக இடம்பெற்றேயிருந்தது. இவ்விதமாக பிரதமருக்கு நிறைவேற்று அதிகாரம் அளிப்பதையிட்டு பெரும் வாதப் பிரதிவாதங்களுங்கூட அண்மைக்காலத்தில் எழுப்பப்பட்டே வந்திருக்கிறது.

மக்களின் பிரபல்ய ஊடகங்களின் பெரும் ஆதரவுடன் கூடிய ராஜபக்ஷ ஆட்சிக்கு இந்தவித பாராளுமன்ற நகைச்சுவை சம்பந்தமான நடைமுறைகள் கடந்த பெரிய விடயங்களே பொருத்தமானதாயிருந்துங்கூட அரசியலில் ஆழ்ந்த ஈடுபாடுகொண்ட மக்கள்அதனைதூக்கியெறிவதற்கு உதவியவர்களாகயிருந்தனர்.

பாரம்பரிய விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு அதன் ஒழுங்குகளை முறைப்படி கடைப்பிடிக்க மக்களால் எதிர்பார்க்கப்படும் அரசியல்வாதிகள் தமது சொந்த இருப்புக்காக சின்னத்தனமான அரசியல் தவளைப் பாய்ச்சல்களை நிறுத்திக்கொண்டு மனிதர்களாக செயற்பட வேண்டும்.

சிறந்தவிதமான இலங்கை வாக்காளர்களுங்கூட தமக்குப் பொருத்தமான சிறந்த விடயங்களையே எப்போதும் எதிர்பார்க்கின்றனர்.

**அரசியல் காட்டில் சிக்கித்தொலைந்த மிருகங்கள் என்னும் தலைப்பில் சண்டேலீடர் ஆசிரியர் தலையங்கத்தில் வெளியான கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**



**தமிழில்: யோகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் புத்திசாலியா? முட்டாளா என்று கண்டு பிடிக்க அவனை ஐந்து நிமிடம் பேசவிடு. - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கம் கல்வி இராஜாங்க அமைச்சருடன் சந்திப்பு

(கொழும்பு)

வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கப் பிரதிநிதிகள் நேற்று கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதா கிருஷ்ணனை கொழும்பில் சந்தித்து தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறினர்.

மகளிர் விவகாரப் பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின ஏற்பாட்டில் நடந்த இச் சந்திப்பில், கடமை நிறைவேற்று அதிபர்களை அதிபர் சேவைக்குள் உள்வாங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென சங்கப் பிரதிநிதிகள் கல்வி இராஜாங்க அமைச்சரிடம் கேட்டுக் கொண்டனர். அதிபர் சேவை IIIக்கு மட்டுமே ஆட்சேர்ப்பு செய்வதன் காரணமாக, எட்டு வருடங்களுக்கு மேலாக கடமை நிறைவேற்று அதிபர்களாக இருப்பவர்கள் பாதிக்கப்படுவர் எனச் சுட்டிக்காட்டிய சங்கப் பிரதிநிதிகள், போட்டிப் பரீட்சையில் தோற்றி அதிபர் சேவை தரம் மூன்றில் உள்வாங்கப்பட்டால் சம்பள இழப்பு, சேவைக்கால இழப்பு போன்ற பாதிப்புக்கள் தமக்கு ஏற்படும் என்றும் சுட்டிக் காட்டினர்.

இதனை ஏற்றுக் கொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதா கிருஷ்ணன் ஏனைய அமைச்சர்களுடன் கலந்துரையாடி நல்ல முடி வைத தருவதாக உறுதி அளித்தார். இச் சந்திப்பில் கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கத்தின் செயலாளர் எஸ்.தோமஸ் எடிசன், பொருளாளர் ஆர்.ரூபகுமார், சங்கத்தின் வலயப் பிரதிநிதிகளான பி.எட்வேட் ஹென்றி, எஸ்.தவநாயம், எஸ்.சசிகரன், ஆர்.செபரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ந)

## விக்கியும் வரதரும் சந்தித்ததன் தாற்பரியம் எதுவாக இருக்கும்?

வடக்கு கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள் யாழ்ப்பாணம் ஆறுதல் நிறுவனத்தில் நடந்த ஒரு கருத்தரங்கில் உரையாற்றியிருந்தார். அவரின் உரையின் சாரம் வடக்கு கிழக்கு மாகாணத்தில்தான் முதலமைச்சராக இருந்ததன் பட்டறிவைப் பகிர்வதாக இருந்தது.

தனது பட்டறிவை கூறுவதாக அவரின் உரை அமைந்திருந்தாலும் தமிழர்கள் வரலாற்றுத் தவறை இழைத்து விட்டார்கள் என்பது அவரின் கருத்தாகும்.

வடக்கு கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த வரதராஜப்பெருமாள் ஈபிஆர்எல்எப் என்ற இயக்கத்தை சார்ந்தவர். பொதுவில் தமிழீழ விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்களுக்கு தமிழ் மக்கள் போதுமான அங்கீகாரத்தை கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

எதுவாயினும் ஏனைய இயக்கங்களுக்கு தமிழ் மக்களின் அங்கீகாரம் கிடைக்கவில்லை என்ற கருத்து விடுதலைப்புலிகள் படையினருக்கு எதிராகத் தனித்துவமான தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்ததன் பின்னரே இத்தகையதொரு நிலைமை ஏற்பட்டது.

இத்தகையதோர் சூழ்நிலைக்குள் முன்னாள் முதல்வர் அ.வரதராஜப்பெருமாளும் அகப்பட்டுக் கொண்டவர்களுள் ஒருவர்.

எனினும் முதலமைச்சராக இருந்த தனது அனுபவம் பற்றி கருத்துரைத்த வரதராஜப்பெருமாளின் நோக்கம் இரு தன்மையைக் கொண்டது.

அதில் ஒன்று 1987களில்தான் மேற்கொண்ட அரசியல் அணுகுமுறை மிகவும் பொருத்தமானதாயினும் அதற்கு விடுதலைப்புலிகளின் அல்லது தமிழ் மக்களின் ஒத்துழைப்பு இருக்கவில்லை என்பதைக் கூறுவதன் ஊடாக,

வடக்குக் கிழக்கு மாகாண அரசை உருவாக்கியதற்குள் இருக்கக்கூடிய தனது வகிபங்கை நியாயப்படுத்துவது.

மற்றையது தனது அனுபவத்தின் ஊடாக, தமிழர்களுக்கு தற்போது இருக்கக்கூடிய சாதகமான புறச் சூழ்நிலையை எங்ஙனம் பயன்படுத்துவது என்பதை எடுத்துரைப்பது.

இந்த இரு நோக்கங்களின் அடிப்படையில் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் கூறுகின்ற கருத்தில் முக்கியமானது; தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வு என்ற விடயத்தில் இந்தியாவின் நேரடித் தலையீடு இனி இருக்கமாட்டாது என்பதாகும்.

அதாவது 1987களில் வடக்கு கிழக்கு இணைந்த மாகாண அரசை உருவாக்கும் போது அதற்கான அதிகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதில் இந்திய மத்திய அரசு கொண்டிருந்த காத்திரமான வகிபங்கை இனிமேல் நாம் எதிர்பார்க்க முடியாது என்பதாகும்.

ஆக, சமகாலத்தில் நமக்குச் சாதகமாக இருக்கக்கூடிய புறச் சூழ்நிலைகளை இனங்கண்டு அதனைப் பொருத்தப்பாடாகப் பயன்படுத்திக் கொள்வதில் தமிழ் அரசியல் தலைமைகள் அதீத கவனம் செலுத்துவது அவசியம் என்பதை வலியுறுத்துவதாக முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாளின் கருத்தியல் அமைகிறது.

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்பதை நாம் நிராகரிக்க முடியாது. இந்த அடிப்படையில்தான் வடக்கின் தற்போதைய முதல்வர் விக்னேஸ்வரனும் முன்னாள் முதல்வர் வரதராஜப் பெருமாளும் சந்தித்துக் கதைத்தனர் என்றால், அது ஒரு நல்ல நோக்காக இருக்கும் என்று கூறலாம்.

ஊழல் மோசடி வழக்கு தொடரப்பட்டால்

# தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை முன்னாள் அமைச்சர்கள் இழப்பர்

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக செயற்பட்டு வரும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் கூட்டு பொறுப்புக்கு எதிராக செயற்பட்டு கட்சியின் ஒழுக்க விதிகளை மீறி வரும், மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்படும் சுமார் 40 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது என தெரியவந்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலோ இவர்களுக்கு வாய்ப்பை வழங்குவதில்லை என் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காமினி லொக்குகே, குமார் வெல்கம, பந்துல குணவர்தன, டளஸ் அழகபெரும, ஜீ.எல்.பீரிஸ், டி.பி.ஏக்கநாயக்க, எஸ்.எம்.சந்திரசேன, கெஹெலிய ரம்புக்வெல்ல, நாமல்ராஜபக்ஷ, சனிரோஷன் தொடித்துவக்கு, ஸ்ரீயானி வேஜ்விக்ரம, நிஷாந்த முத்துஹெட்டிகம, சஜின் வாஸ குணவர்தன, மொஹான் பீ.டி.சில்வா, சானுக வித்தானகமகே, அருந்திக்க பெர்னாண்டோ, சரத் வீரசேகர, ஜோனஸ்டன் பெர்னாண்டோ, மகிந்தானந்த அளுத்கமகே, சாலிந்த திஸாநாயக்க, சரத்குமார குணரட்ன, ரோஹித்த அபேகுணவர்தன, ரஞ்சித் டி சொய்சா, ஷாமிக்க புத்ததாச, எஸ்.சி. முத்துகுமாரன, ஜானக்க வக்கும்பர, வீ.கே. இந்திக, ரொஹான் ரணசிங்க, மனுஷ நாணயக்கார, உதித்த லொக்குபண்டார, கீதாஞ்சன குணவர்தன, வை.பி. பத்மசிறி, லக்ஷ்மன் வசந்த பெரேரா, விமல் வீரவன்ஸ, வீரகுமார திஸாநாயக்க, தினேஷ் குணவர்தன, வாசுதேவ நாணயக்கார, மகிந்த யாப்பா அபேவர்தன ஆகியோருக்கே தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு கிடைக்காது என மிகவும் நம்பகமான வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-11)

இளைஞர் மீது துப்பாக்கிச் சூடு

# பொலிஸாரிடம் வாக்குமூலத்தைப் பெற யாழ்.நீதவான் நீதிமன்று உத்தரவு

(யாழ்ப்பாணம்)

கடந்த தை மாதம் 2ஆம் திகதி நாவாந்துறையில் இளைஞர் ஒருவர் மீது கலவரத்தை அடக்கும் முயற்சியில் சுடப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக சம்பவதினம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் கடமையிலிருந்த அனைத்து பொலிஸாரிடமும் வாக்குமூலத்தைப் பெற்று அறிக்கை சமர்ப்பிக்குமாறு வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது மன்றில் ஆஜராகியிருந்த துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர், சிவில் உடையிலிருந்த பொலிஸாரே தன்னைச சுட்டதாகவும், வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோதுதான் யாழ்.சிவிலுடை அணிந்த பொலிஸாரினால் யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு கொண்டவரப்பட்டு இரண்டரை மணித்தியாலங்கள் உட்காரவைக்கப்பட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்தார்.

எனினும் தாம் அவ்வாறு விசாரணை செய்யவில்லை என பொலிஸார் மறுத்ததையடுத்து அன்றைய தினம் கடமையிலிருந்த சகல பொலிஸார் அனைவரது வாக்குமூல அறிக்கையை எதிர்வரும் ஆனி மாதம் முதலாம் திகதி மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (செ-9)

# காய்கறிகளுக்குப்போன்று போதைப்பொருட்களுக்கும் கேந்திர நிலையமாக திகழும் தம்புள்ள சந்தை

காய்கறிகளுக்கு மொத்த விற்பனை நிலையமாக திகழும் தம்புள்ள நகரம் நாடெங்கும் உள்ள போதைப்பொருள் விற்பனை செய்யும் கேந்திர நிலையமாக மாறியுள்ளமை தற்பொழுது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

போதை பொருட்களை கொள்வனவு செய்ய வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தந்திருந்த 17 இளைஞர்களை தம்புள்ளை பொலிஸ் அதிகாரிகள் சிவில் உடையில் கண்காணித்து கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த சுற்றிவ ளைப்பில் நாட்டில் பல பிரதேசங்களிலும் மிக இரகசியமான தொலைபேசி ஊடாக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டு போதைப்பொருட்கள் கடத்தல்களை மேற்கொண்டு வந்துள்ளதாக தெரிய வருகின்றது.

அத்தோடு பணப்பரிமாற்றங்களும் "ஈசிகாஷ்" முறையில் தொலைபேசி ஊடாகவே நடைபெற்றுள்ளது.

இதற்காக போதைப் பொருட்கள் கடத்தல்காரர்கள் தம்புள்ளை நகரத்தை தெரிவு செய்துள்ளார்கள் என விசாரணையின் மூலம் வெளிவந்துள்ளது. (இ-5)

## அரசாங்க நிர்வாக பௌத்த சாசன பதிலமைச்சராக ராஜபக்ஷ நியமனம்

அரச நிர்வாகம் மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பௌத்த சாசன பதில் அமைச்சராக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

அரச நிர்வாகம் மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பௌத்த சாசன அமைச்சர் கரு ஜயசூரிய வெளிநாட்டிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில் கரு ஜயசூரிய நாடு திரும்பும் வரையில் பதில் அமைச்சராக விஜயதாச ராஜபக்ஷ கடமையாற்றி உள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



பெண்களின் முன்னேற்றம் என்ற பெயரில் அவர்களை சீதை- இலட்சியத்திலிருந்து விலகச் செய்தால் அந்த முயற்சிகள் தோல்வியையே தழுவும். அதையே நாம் அனுதினமும் கண்டு வருகிறோம். சீதையின் அடியொற்றியே நம் பெண்கள் வளரவேண்டும், முன்னேற வேண்டும். அது ஒன்றே வழி.

ஏழையிடமும் பலவீனரிடமும் நோயுற்றோரிடமும் சிவபெருமானைக் காண்பவனே உண்மையில் சிவபெருமானை வழிபடுகிறான்.

என் சகோதரர்களே, நாம் எல்லோரும் கடுமையாக உழைப்போம். தூங்குவதற்கு இது நேரமில்லை. எதிர்காலம் நம்முடைய உழைப்பைப் பொறுத்தே அமையப் போகிறது.

ஆன்மாவின் இயல்பை அறியும்போது சிறிதும் வலிமையற்றவர்களுக்கும் மிகவும் இழிவானவர்களுக்கும் மிகவும் துன்பப்படும் பாவிகளுக்கும்கூட நம்பிக்கை வருகிறது.

ஓர் உயரிய இலட்சியத்தை மேற்கொள்வதும் அதற்காகத் தன் வாழ்நாளை அர்ப்பணிப்பதும் ஒரு மகத்தான காரியமாகும்.

நமது மதம்தான் உண்மையான மதம். ஏனெனில் கடவுள் ஒருவரே உண்மையானவர், இந்த உலகம் பொய்யானது, கணம் தோன்றி மறைவது, உங்கள் காசு பணமெல்லாம் தூசியைத் தவிர வேறல்ல, அதிகாரமெல்லாம் வரம்பிற்குட்பட்டது, வாழ்க்கை பலநேரங்களில் தீமையாகவே இருக்கிறது என்று அது கூறுகிறது. எனவேதான் நமது மதம் உண்மையானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெஸ்ஸி அதிரடி
# பார்சிலோனா வெற்றி



வாலன்சியா அணிக்கு எதிரான லா லிகா காற்பந்து போட்டியில் பார்சிலோனா அணி 2-0 என வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் லா லிகா காற்பந்து தொடர் நடக்கிறது. பார்சிலோனாவில் நடந்த இதன் லீக் போட்டியில் வாலன்சியா, பார்சிலோனா அணிகள் மோதின.

போட்டி தொடங்கிய முதல் நிமிடத்திலேயே பார்சிலோ அணியின் சாரஸ் ஒரு கோல் அடித்தார். இதற்கு எதிரணி வீரர்களால் பதிலடி தர முடியவில்லை.

இரண்டாவது பாதியில் இரு அணியும் சமபலத்தை வெளிப்படுத்தியதால், எந்த வீரரும் கோல் அடிக்கவில்லை.

ஆட்டத்தின் கூடுதல் (90+4) நேரத்தில் மெஸ்சி ஒரு கோல் அடித்து கைகொடுக்க, பார்சிலோனா அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பார்சிலோனா அணி சார்பில் தனது 471ஆவது போட்டியில் பங்கேற்ற மெஸ்சி, 400ஆவது கோலை எட்டியுள்ளார். (க)

# இங்கிலாந்தில் சங்கா சதம்



இங்கிலாந்தின் சரே பிராந்திய அணிக்காக நேற்றுமுன்தினம் களமிறங்கிய குமார் சங்கக்கார ஆட்டமிழக்காமல் 112 ஓட்டங்களை பெற்றுள்ளார். சரே பிராந்திய அணிக்காக ஒப்பந்த அடிப்படையில் விளையாடி வரும் சங்கா, கிளமோர்கன் அணிக்கெதிரான போட்டியிலேயே சதம் அடித்துள்ளார். இதே அணிக்காகவே கெவின் பீட்டர்சன் தன் மீள் வருகைக்காக விளையாட ஆரம்பித்துள்ளார். அவர் 19 ஓட்டங்களுடன்ஆட்டமிழந்தார். இந்தப் போட்டியில் சரே அணி, முதல் நாள் நிறைவில் 3 விக்கெட்களை இழந்து 363 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. 109 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுள்ள ஸ்டீவன் டேவிஸ் மற்றும் குமார் சங்கக்கார ஆகியோர் இணைந்து 213 ஓட்டங்களை பெற்றுள்ளனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## முதலிடத்தை முடிந்தவரை நீண்டகாலம் தக்க வைப்பேன் சானியா மிர்சா



பெடரேஷன் கிண்ணம் மகளிர் டென்னிஸ் போட்டித் தொடரில் கடைசி லீக்கில் சானியா மிர்சா தலைமையிலான இந்திய அணி 2-1 என்ற கணக்கில் பிலிப்பைன்சை வீழ்த்தியது.

இந்தப் போட்டி ஐதராபாத்தில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் சானியா இரட்டையர் பிரிவில் விளையாடி வெற்றிக்கு வித்திட்டார்.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி ஆசிய ஓசியானா குரூப்1 சுற்றுக்கு தகுதி பெற்றது.

இது குறித்து சானியா கருத்து வெளியிடுகையில், இரட்டையர் டென்னிஸ் தரவரிசையில் 'நம்பர் வன்' இடத்தை பிடித்த பிறகு முதன் முறையாக சொந்த ஊரான ஐதராபாத்தில் உற்சாகமாக விளையாடினேன்.

பிரார்த்தனா தோம்ப்ரே, அங்கிதா ரெய்னா போன்ற இளம் இந்திய வீராங்கனைகள் சிறப்பாக ஆடினார்கள். ஒவ்வொரு ஆண்டும் இவர்களின் ஆட்டத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது.

எனது ஓய்வு குறித்து என்னால் சொல்ல இயலும். ஆனால் இப்போது முடியாது. முதலிடத்தை முடிந்த வரை நீண்ட காலம் தக்க வைக்க என்னென்ன முயற்சி மேற்கொள்ள வேண்டுமோ அதை செய்வேன் எனத் தெரிவித்துள்ளார். (க)

# கார்மேல் போய்சை வென்றது சீ ஸ்ரார் விளையாட்டுக்கழகம்





சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட மாபெரும் மென்பந்து சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் சீ ஸ்ரார் விளையாட் டுக்கழகமும் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதியது.

இதில்நாணயச்சுழற்சியில்வெற்றி பெற்ற சீ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 6 ஓவர் களில் 48 ஓட்டங்களைப் பெற்றது. 49 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 6 ஓவர்களில் 45 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

இறுதி ஆட்டத்தின் ஆட்டநாயகனாக சீ ஸ்ரார் அணியின் பொலிற்றஸ் தெரிவாகினார். (க)

# நெடியகாடு இளைஞர் வி.க.வீழ்த்தி சம்பியனாகியது தொண்டைமானாறு ஒ.வி.க.





பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான 2015 விளையாட்டு விழாவின் கிரிக்கெட்- இறுதி ஆட்டம் அண்மையில் நடைபெற்றது.இதில தொண்டைமானாறு ஒற்றுமை வி.க.எதிர் நெடியகாடு வி.க மோதி யது.

இதில் தொண்டைமானாறு ஒ.வி.க. வெற்றி பெற்றது.

நாணயசூழற்சியில் வெற்றி பெற்ற தொண்டைமானாறு ஒ.வி.க. முதலில் துடுப்பெடுத்தாடியது. அதனடிப்படையில் 10பந்து [illegible]களில் 84 ஓட்டங்களை பெற்றது. இதில் கவீந்திரன் 28 ஓட்டங்களையும் மதன் 23ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பதிலுக்கு 85 இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய நெடியகாடு வி.க. அணி [illegible] ஓட்டங்களைப் பெற முடிந்தது. இறுதியில் 41 ஓட்ட வித்தியாசத்தில் தொண்டைமானாறு ஒ.வி.க. வெற்றி பெற்றது. நெடியகாடு இளைஞர் வி.மைதானத்தில் நடைபெற்றுது. இவ்இறுதிப் போட்டியில் பருத் தித்துறை பிரதேச செயலக அபிவி ருத்தி உத்தியோகத்தர் சஞ்சீவன், சமுர்த்தி உத்தியோகத்தர் மிதுன் போன் றோர் கலந்து சிறப்பித்தனர். மேலும் பெண்களுடைய வலைப்பந்தாட்டத்தில் தீபஜோதி வி.கழகமும் விக்கிரமன் வி.கழகமும் தெரிவாகி உள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கின்...

பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், நியமனங்கள் குறித்து விசாரணை மேற்கொள்வதற்கென 17.03.2015 அன்று நடைபெற்ற வடக்கு மாகாண சபையின் 26ஆவது அமர்வின் போது ஏழு பேர்கொண்ட விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் தலைவராக நானும் (அன்ரனி ஜெகநாதன்) மற்றும் அங்கத்தவர்களாக மாகாண சபை உறுப்பினர்களான ப.கஜதீபன், அ.பரஞ்சோதி, க.சர்வேஸ்வரன், க.லிங்கநாதன், ந.விந்தன், அ.அஸ்மின் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இக்குழுவின முதலாவது கூட்டத்தின் போது குறித்த ஊழல்கள் தொடர்பில் முறைப்பாட்டு கடிதங்கள் ஊடாக முறையிடலாம் என அறிவிக்கப்பட்டு முடிவுத் திகதி 15.04.2015 என அறிவிக்கப்பட்டிருந்தது.

இக்காலப்பகுதிக்குள் முறையற்ற நியமனங்கள் தொடர்பில் 59 முறைப்பாடுகளும் முறையற்ற பதவியுயர்வுகள் தொடர்பில் 18 முறைப்பாடுகளும் முறையற்ற இடமாற்றங்கள் தொடர்பில் 09 முறைப்பாடுகளும் மொத்தம் 86 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தற்போதும் இம்முறைப்பாடுகள் வந்து கொண்டிருப்பதனால் முறைப்பாடு தெரிவிப்பதற்கான முடிவு திகதியினை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை நீடித்துள்ளோம்.

ஆகவே பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் கைதடியில் அமைந்துள்ள பேரவைச் செயலக முகவரிக்கு ஊழல் தொடர்பான விசாரணைக் குழு என குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்விசாரணைக் குழுவின் இறுதி அறிக்கை மிக விரைவில் தயாரிக்கப்பட்டு வடக்கு மாகாண முதலமைச்சரிடம் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் கையளிக்கப்படவுள்ளது எனவும், இவ்விசாரணைக்குழு நம்பகரமானது. ஆகையால் பாதிக்கப்பட்ட அனைவரும் தயக்கமின்றி விண்ணப்பிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-4)

## மகிந்த...

யாற்றிய அவர்கள், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை லஞ்ச ஆணைக்குழுவுக்கு விசாரணைக்கு அழைத்ததை வன்மையாக கண்டிப்பதாகவும் அப்படி நடக்காது என்பதற்கு அரசாங்கம் நிரந்தர உத்தரவாதத்தை வழங்க வேண்டியதுஅவசியம்எனவும்கூறினர்.

விமல் வீரவன்ஸவும் வாசுதேவ நாணயக்காரவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை கடுமையாக விமர்சித்தனர். பிரதமர் நயவஞ்சக வேலை செய்வதாக வாசுதேவ நாணயக்கார குற்றம் சுமத்தினார்.

பிரதமரின் தேவைக்கு அமைய முன்னாள் ஜனாதிபதிக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதாக பந்துல குணவர்த்தன குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

மகிந்த ராஜபக்ஷவை விசாரணைக்கு அழைத்துள்ளது பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றார்.

லஞ்ச ஆணைக்குழுவின் பணிகளில் அரசாங்கம் தலையிடாது. அது ஆணைக்குழுவின் சுதந்திரமான தீர்மானம்.

சாட்சியம் ஒன்றை பெறவே முன்னாள் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. இதில் என்ன பிரச்சினை? பிரச்சினைகள் இருந்தால், மகிந்தவின் சட்டத்தரணிகள் உரிய நடவடிக்கையை எடுக்க முடியும் என பிரதமர் குறிப்பிட்டார்.

மகிந்த ராஜபக்ஷவை லஞ்ச ஆணைக்குழுவுக்கு கொண்டு செலக் கூடாது என கோஷமிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்கு நடுவில் அமர்ந்து கொண்டனர்.

விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, சஜின் வாஸ்குணவர்த்தன, மகிந்தானந்த அளுத்கமகே, தினேஷ் குணவர்தன, நாமல் ராஜபக்ஷ, உதித்த லொக்கு பண்டார, பந்துல குணவர்தன உட்பட சுமார் 30 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்கு நடுவில் அமர்ந்து எதிர்ப்பை வெளியிட்டனர்.

கூட்டத்தை ஒத்திவைத்து சபாநாயகர் செங்கோலை அப்புறப்படுத்திய பின்னரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்கு நடுவில் அமர்ந்திருந்தனர். (செ-11)

## பா.உ.களின்...

களாக இடம்பெறுகின்றனர்.

மேலும் நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான இந்தக் குழுவானது கடந்த வாரம் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது.

இந்நிலையில் தொடர்ந்து தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் ஆராய்ந்து அதன்படி விரிவான அறிக்கையை சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 260 ஆக அதிகரிக்கவும் விகிதாசார மற்றும் தொகுதிமுறை அடங்கிய கலப்பு தேர்தல் முறைக்கு செல்லவும் சுதந்திரக் கட்சி விருப்பம் கொண்டுள்ளது.

இதேவேளை தற்போது நாட்டில 160 தேர்தல் தொகுதிகள் காணப்படுகின்றன. அந்த எண்ணிக்கையில் மாற்றம் கொண்டு வராமல் தேர்தல் முறையை மாற்றுவதென்றால் விரைவாக செய்ய முடியும் என்றும் தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாயின் அதற்கு காலம் தேவை என்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது அரசியலமைப்பின் 20-வது திருத்தச் சட்டமாக தேர்தல முறை மாற்றத்தைக் கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்துள்ளமையின் காரணமாக புதிய தேர்தல் முறை யோசனையை உருவாக்கும் செயற்பாடுகள் கட்சிகள் மட்டத்தில் தீவிரமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தேர்தல் முறை மாற்றத்தினால் சிறுபான்மை அரசியல் பிரதிநிதித்துவங்களுக்கு எந்த சிக்கலும் வரக்கூடாது என்பது தொடர்பில் நேற்று முன்தினம் சிறுபான்மை மற்றும் சிறு அரசியல் கட்சிகளின் பங்கேற்புடன் முக்கிய கூட்டம் ஒன்று நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)




## கொல்கத்தா வெற்றி




## மகிந்த, கோத்தா...

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் 23ஆம் திகதி வியாழக்கிழமையும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை, எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் செயலாளர் நாயகமுமான திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி சுகாதார அமைச்சர் பதவியை வழங்கியமை மகிந்த தரப்பினரால் இலஞ்சம் கொடுத்ததாகும் என்று சட்டத்தரணிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மேலும் காலி துறைமுகத்தில் மிதக்கும் ஆயுதக்கப்பல், பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சட்டவிரோதமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டமை தொடர்பில் அவன்காட் மெரின்டைம் நிறுவனத்தின் தலைவருக்கு இருக்கின்ற தொடர்பு ஆகிய குறித்து கோத்தபாய ராஜபக்ஷவிடம் விசாரணைகள் மேற் கொள்ளப்படவிருக்கின்றன.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்கவிடம் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்துடனான கணக்கு வழக்கு தொடர்பில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் இன்று 21 ஆம் திகதி விசாரணை நடத்தப்படவிருக்கின்றது.

இதேவேளை அமெரிக்க பிரஜையான முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் வாக்குமூலம் ஒன்றை பெறுமாறு நீதிமன்றம் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு உத்தரவிட்டிருந்தது.

இதனடிப்படையில் அமெரிக்காவில் இருந்து இன்றைய தினம் இலங்கை வரும் பசில் ராஜபக்ஷவை விமான நிலையத்தில்வைத்து தமது பொறுப்பில் எடுத்து வாக்கு மூலம் பெற குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தீர்மானித் துள்ளது.

அதேவேளை அடுத்த வாரத்தில் மகிந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்த 7 முக்கியஸ்தர்களிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணை நடத்தும் அல்லது அவர்களை கைது செய்யும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-11)

## இறுதிக் கட்ட...

பிப்பதை தடுப்பதற்கு நாங்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டோம் எனவும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மக்கள் என்ன சொன்னாலும், நாங்கள் மக்களுக்கு தேவையான சுதந்திரத்தை பெற்றுக் கொடுத்தோம். குறிப்பாக வட,கிழக்கை இயல்புநிலைக்கு கொண்டு வருவதற்கு பாரிய முயற்சிகளை மேற்கொண்டோம்.

யாரும் இந்த உண்மைகளை அங்கீகரிக்கவில்லை, 13. ஆயிரத்துக்கும் மேலதிகமானவர்களுக்கு தண்டனைகளை பெற்று கொடுக்காமல் மறுவாழ்வளித்தோம்.

அதுமாத்திரமல்லாது ஜனாதிபதி, அவர்களுக்கு மறுவாழ்வளித்து அவர்களை மீண்டும் சமூகத்தில் ஒன்றிணைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

நாம் வெற்றிகரமான மறுவாழ்வு திட்டத்தை முன்னெடுத்ததுடன், சமூகத்திலும் ஒன்றிணைத்துள்ளோம், ஆனால் இவை தொடர்பில் சர்வதேச அரங்குகளில் இதுவரையிலும் கலந்துரையாடப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சர்வதேச அரங்குகளில் எங்களுக்கு எதிராக விவாதிக்கப்படுகன்றதே ஒழிய எமக்கு சாதகமாக எதுவும் விவாதிக்கப்படவில்லை.

நான் எனது பொறுப்புக்களுக்கு பின்னால் அதிகாரங்களை பயன்படுத்தவில்லை என அவர் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

நான் நல்லதொரு தீர்வை கொண்டு வருவதற்காக நம்பிக்கையுடன் எனது பொறுப்புக்களை சரியாக செய்து முடித்தேன்.

யுத்தத்தை வெற்றிகொள்ள வேண்டும் என்றால் படையினரின் எண்ணிக்கையை மும்மடங்காக்க வேண்டும் எனவும், திறைசேரி பல பிரச்சினைகளை எதிர்கொண்ட போதிலும் இதனை செய்தே ஆகவேண்டும் என நான் ஜனாதிபதியிடம் கோரினேன்.

நாங்கள் பெருமளவு பணத்தை செலவிட வேண்டியிருக்கும் ஆனால இதனை செய்யாத பட்சத்தில் நாங்கள் வெற்றிபெற முடியாது என்பதை குறித்தும் நான் அவருக்கு தெளிவாக சுட்டிக் காட்டினேன்.

இந்நடவடிக்கையை அச்சந்தர்ப்பத்தில் மேற்கொண்டிராவிட்டால் நாங்கள் எந்த தந்திரோபாயத்தை பயன்படுத்தியிருந்தாலும் அது வெற்றியளித்திருக்காது.

மேலும் இராஜதந்திர ரீதியில் இந்த யுத்தத்தை தொடர்வதற்கு இந்தியாவை கருத்தில்கொள்ள வேண்டும் என்பதையும், இந்தியாவை எங்களுடன் வைத்திருக்க வேண்டும் என்பதையும் நான் உணர்ந்தேன்.

அதுமாத்திரமல்லாது எந்த நாடும் எங்களுக்கு எதிரான நிலைபபாட்டை எடுக்கலாம். ஆனால் இந்தியா எங்களுக்கு எதிராக திரும்பினால் நாங்கள் யுத்தத்தை தொடர முடியாது என்பதை நான் உணர்ந்தேன்.

இதன் காரணமாக இந்தியாவை எங்களுடன் வைத்திருப்பதற்கு நாங்கள் திட்டமொன்றை வகுத்த போதிலும் வெளிவிவகார அமைச்சை பயன்படுத்தும் பாரம்பரிய வழிமுறையை நாங்கள் பின்பற்றவில்லை.

இலங்கையை சேர்ந்த மூவரும் இந்தியாவை சேர்ந்த மூவரும் இணைந்த குழுவொன்றை உருவாக்கினோம். பல விடயங்கள் குறித்து வெளிப்படையாக விவாதித்து உணர்வுபூர்வமான பல விடயங்களுக்கு தீர்வு கண்டோம் என தெரிவித்த முன்னாள் பாதுகாப்பு செயலாளர்,

கருணாநிதி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தவேளை இந்திய குழுவிடமிருந்து எனக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. அவர்கள் தாங்கள் ஜனாதிபதியை சந்திக்க விரும்புவதாக தெரிவித்தனர்.

இதனையடுத்து நான் ஜனாதிபதிக்கு அறிவித்து அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டேன்,

அவர்கள் சந்திப்பை மேற்கொண்ட பின்னர் நாங்கள் கனரக ஆயுதங்களை பயன்படுத்தாமல் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வோம் என அறிக்கையொன்றை வெளியிட்டோம்.

இதனால் மகிழ்ச்சியடைந்த கருணாநிதி உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்டார் நாங்கள் யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தோம்.

யுத்தம் முடியும் வரை இந்தியாவுடன் நெருக்கமான உறவுகள் காணப்பட்டன. பின்னர் புதிய நபர்களின் வருகையினால் இரு நாட்டிற்கும் இடையிலான உறவு பெரிதும் பாதிக்கப்பட்டது என கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (செ-11)

## யாழ்.செயலக...

கப்படவுள்ள செயற்றிட்டங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் தலைமையில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைத் தலைவர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், முப்படைகளின் அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வலி.வடக்கு இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள பகுதிகளில் இருந்து ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பினை மக்களுடைய மீள்குடியேற்றத்திற்காக விடுவிப்பதாக புதிய அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆயினும் 613 ஏக்கர் மட்டுமே தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள வலி.வடக்குப் பகுதியில் இருந்து விடுவிக்கப்பட்டது. ஏனைய பகுதிகள் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பகுதிகளே முதற்கட்டமாக விடுவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்து மேலும் சில பகுதிகள் இரண்டாம் கட்டமாக விடுவிப்பது சம்பந்தமாகவும், மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களை துப்புரவு செய்தல் மற்றும் மீள்குடியேற வந்துள்ள மக்களுக்காக குடிநீர், வீட்டுத்திட்டம் போன்றன சம்பந்தமாகவும், மீள்குடியேறச் செல்லும் மக்கள் எதிர்கொள்ளும் சவால்களை தீர்ப்பது தொடர்பாகவும் இன்று நடைபெறவுள்ள கலந்துரையாடலில் முடிவுகள் எடுக்கப்படவுள்ளது. (செ-4)


## கண்ணீர் அஞ்சலி



**திரு.சி.பத்மநாதன்**

(5ம் வட்டாரம், மண்டைதீவு)

மண்டைதீவு தில்லேஸ்வரம் ஆலய பரிபாலன சபையின் செயலாளர்

**திரு.ப.திருவருட்செல்வன்**

(சித்தா ரெஜிபோம் டிசைனிங், கொக்குவில்)

அவர்களின்

அன்புத் தந்தை திரு.**சி.பத்மநாதன்** அவர்களின் மறைவுக்கு

எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன்

அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு

எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**பரிபாலன சபை தில்லேஸ்வரம், ஆலயம், மண்டைதீவு.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சிதம்பரநாதன் பத்மநாதன்



மண்டைதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் அச்சுக்கூடலேன் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரநாதன் பத்மநாதன் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன்- சிவயோகம் தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான நாகநாதர் - தில்லைவனம் தம்பதியினரின் மருமகனும் முத்துலெட்சுமியின் அன்புக்கணவரும் திருமகள் (சுவிஸ்), காலஞ்சென்ற திருவருள் மற்றும் திருவாசுகி (பிரான்ஸ்), திருவருட்செல்வன் (சித்தா ரெஜிபோம் டிசைனிங்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருபாகரன் (சுவிஸ்), கிருஷ்ணேஸ்வரன் (பிரான்ஸ்), சாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரூஜா (சுவிஸ்), அஸ்மிரா (சுவிஸ்), சந்தியா (பிரான்ஸ்), விதுஜனன் (பிரான்ஸ்), தனுசியா (பிரான்ஸ்) மதுவந்தி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி மற்றும் அருணகிரிநாதன், காலஞ்சென்ற சீதாலெட்சுமி மற்றும் சத்தியபாமா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.49 A, அச்சுக்கூட லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 075 544 5901**

**தகவல் : ப.திருவருட்செல்வன் (மகன்)**

## மண்சரிவு...

வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஆறு மாவட்டங்களில் மண்சரிவு ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக அனர்த்தமுகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி, கண்டி, களுத்துறை, மாத்தறை, பதுளை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் மண் சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது.

மண்சரிவுஅபாயம் ஏற்படக் கூடிய பகுதிகளில் வாழும் மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (செ-11)

## தவறவிடப் பட்டுள்ளது

கணேசமூர்த்தி இதயராஜ் என்பவருடைய 893181245V எனும் இலக்கமுடையதேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், வாகன வரிப் பத்திரம், வாகனக் காப்புறுதி என்பன அடங்கியபேர்ஸ்தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கும் பன்னாலைக்குமிடையில் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும்தொலைபேசி இலக்கத்துடன்தொடர்பு கொள்ளவும். (131)

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு :- 0771345625**

## வேலைவாய்ப்புக்கள்

**Golden group (Advertising)**

எமது நிறுவனத்தில் உருவாக இருக்கும் புதிய கிளைகளுக்கான

- மேற்பார்வையாளர்
- விநியோகஸ்தர்
- உதவி முகாமையாளர்
- முகாமையாளர்



போன்ற பதவியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

O/L இல்லாதவர்களுக்கும் விசேட பதவி வாய்ப்புக்கள் உள்ளன.

O/L, A/L உள்ளவர்கள் உடனே தொடர்பு கொள்ளவும்.

கிளிநொச்சி,முல்லைத்தீவு,வவுனியா,மன்னார்,யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. No. 8.6ம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு :- 0779987699

(C-749)

## அவசியமானதும் அவசரமானதும் தேடல்!
## ‘அழகியற் கல்வியில் நமதடையாளங்கள்’

இலங்கைத் தமிழர்களின் பூர்வீக அழகியற் கலை வடிவங்களை கண்டறிவோம்!. எமக்கென எம் இனத்துவப் பண்புகளை வெளிப்படுத்துவோம். எமது ஆடல். இசைவடிவங்களை இனங்காண்போம். அவற்றின் மூலம் எமது தனித்துவத்தினைப் பேண, இவை சார்ந்த தகவல்களை தெரிந்தவர்களிடமிருந்து அறியவிரும்புகின்றோம்.

தகவல்களைத் தெரிவிக்க விரும்புவோர் எதிர்வரும் 10.05.2015-ம் திகதிக்கு முன்னர் “கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் செயலகம், வடக்கு மாகாணம், 124, ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணம்” என்ற முகவரிக்கு நேரடியாகவோ, தபால் மூலமாகவோ, **edumin14@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கவும்.

**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.**

(C-758)

# உளமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



## திரு.ம.பற்றிக் டிறஞ்சன்

(செயலாளர் கமத்தொழில், கமநல சேவைகள், கால்நடை, நீர்ப்பாசனம் மற்றும் கூட்டுறவு அமைச்சு-வடமாகாணம்)

இரண்டு ஆண்டு காலம் முல்லைத்தீவு மாவட்டத்தின் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளராக கடமையாற்றி முல்லை மாவட்ட விவசாயப் பெரு மக்களின் தன்னிறைவை மேம்படுத்தி, சேவையாற்றிய பொற்காலத்தில் உத்தியோகத்தர்களை வினைத்திறனாக்கி கமநல சேவை நிலையங்களை முன்மாதிரியாக மேம்படுத்தி கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் நிர்வாகக் கட்டமைப்பினை நிலை நிறுத்திய **திரு.ம.பற்றிக் டிறஞ்சன்** அவர்கள் வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளராக உயர்வு பெற்று நூற்றாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

(C-750)

**வாழ்த்துவோர் : உதவி ஆணையாளரும், உத்தியோகத்தர்களும், கமநல அபிவிருத்தித் திணைக்களம், முல்லைத்தீவு மாவட்டம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.